சிவந்த மண்



ஆரம்ப கால இரத்தசாட்சிகள்

PR. ROMILTON

சிவந்த மண்

அடைபட்ட அக்கினி

Pr. Romilton

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

அடைபட்ட அக்கினி

246-B, Pocket-C, Mayur Vihar,
Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

பொருளடக்கம்

1. "ரோம்" - இரத்த சாட்சிகளின் மயான பூமி 08
2. "கொலோசியம்" என்ற கொலைக்களம் 11
3. நீசன் நீரோ 16
4. முதல் இரத்த சாட்சி ஸ்தேவான் 21
5. யோவானுடைய சகோதரன் யாக்கோபு 24
6. பர்த்தலோமேயு என்ற நத்தானியேல் 27
7. நீதிமான் யாக்கோபு 30
8. பிலிப்பு அப்போஸ்தலன் 34
9. அந்திரேயா 37
10. செலோத்தே எனப்பட்ட சீமோன் 40
11. யூதா ததேயு 43
12. மத்தேயு 46
13. மாற்கு 49
14. அப்போஸ்தலனாகிய தோமா 53
15. சீமோன் பேதுரு 56
16. லூக்கா 60
17. பர்னபா 63
18. யோவான் 67
19. அப்போஸ்தலனாகிய பவுல் 73
20. ஓ! தீமோத்தேயுவே! 87
21. ஒநேசிமு 90
22. எப்பாப்பிரா 95
23. அர்க்கிப்பு 98
24. ஆக்கில்லா பிரிஸ்கில்லா 102
25. பெர்ப்பெச்சுவா 106

பொருளடக்கம்

26. தியோடரா - திதிமு 113
27. திமோத்தி - மௌரா 117
28. பெஸில் - போட்டாமியானா........ 121
29. போலிகார்ப் 126
30. அந்த 40 பேர் 131
31. அந்தியோக்கியா இக்னேஷியஸ் 137
32. தத்துவ ஞானி ஜஸ்டின் 141
33. கலேரியஸ் 145
34. வில்லியம் லித்கோ 149
35. போப்பாண்டவர்கள் காலத்து உபத்திரவங்கள் 153
36. வால்டென்செஸ் 156
37. ஸேச்சுர்னியஸ் 159
38. ஜான் விக்ளிஃப் 162
39. ஜான் ஹஸ் 165
40. சவனரோலா 170
41. தாமஸ் சேஸ் 173
42. வில்லியம் டிண்டேல் 175
43. ஜோன் கிளர்க் 179
44. ரிச்சர்ட் பைஃபீல்ட் 182
45. பேட்ரிக் 185
46. கேசியன் 187
47. வில்லியம் தோர்ப்பே 189
48. "ஒரு தேவ பக்தியுள்ள பெண்" 191
49. பிஷப் க்ரான்மர் 194
50. மகா உபத்திரவம் 197

முன்னுரை

"சபை தன் சொந்த சரீரத்தின் அங்கங்களான ஒவ்வொரு அவயவத்தின் பாடுகளையும் வலியையும் உணராமல் போனால் (இரத்த சாட்சிகளை நினையாமல் போனால்) அதின் நரம்புகள் செத்து உணர்ச்சியற்றுப் போயிற்று என்பதே உண்மை.." *என்றார் ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்களின் மனைவி சபீனா உம்பிராண்ட் அவர்கள்.*

இந்தப் புத்தகத்திலுள்ள "ஆரம்ப கால இரத்த சாட்சிகளின்" வரலாறுகள் யாவுமே ஏறக்குறைய Rev. JOHN FOXE எழுதிய FOXE'S BOOK OF MARTYRS என்ற புத்தகத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டவைகளே. கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் நினைவாக 1563 ல் இந்தப் புத்தகத்தை முதல் இரத்த சாட்சியான ஸ்தேவானிலிருந்து எழுத ஆரம்பித்தார் அவர். முதல் முதலாக JOHN FOXE எழுதிய பதிப்பு அவரது காலத்தில் இரத்த மேரியினால் கொல்லப்பட்ட இரத்த சாட்சிகளோடு முடிகிறது. ***"இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து"*** *என்று அவர் நன்கு அறிந்திருந்தபடியால் திருச்சபையானது தனது இரத்த சாட்சிகளைக் கட்டாயம் அறிந்திருக்கவே செய்ய வேண்டும் என்பதில் தீர்க்கமாய் இருந்தார் அவர்.*

இரத்த சாட்சி மரணம் என்பது எப்போதோ முடிந்து போன காலங்களின் ஒரு காரியமல்ல. உலகமெங்குமுள்ள கிறிஸ்தவ சபை இன்றும் மிகப்பெரிய உபத்திரவங்களை அனுபவித்தே வருகிறது. முதல் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உபத்திரவத்தினால் மரித்த இரத்த சாட்சிகளின் மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும், இருபதாம் நூற்றாண்டில் இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களின் எண்ணிக்கை மட்டுமே மிக அதிகம் என்கின்றன புள்ளி விபரங்கள்.

இந்தப் புத்தகத்தின் சாட்சிகளினூடே அவர்களது அழுகுரல்களை நாம் கேட்கும்போதே, அவர்களது விசுவாசமும், தைரியமும், அன்பும் நமது உள்ளான வாழ்வைத் தொட்டு, நம்மை அசைத்து, நமக்கு சவாலிட்டு, நமது எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்கே அர்ப்பணிக்க நம்மை உந்தி எழுப்பி, நமது விசுவாசத்தை இன்னும் அதிகமதிகமாய்க் கட்டியெழுப்புவதாக !

CHAPTER-1

" ரோம் "

இரத்த சாட்சிகளின் மயான பூமி

CHAPTER-1

" ரோம் "
இரத்த சாட்சிகளின் மயான பூமி

மரணமே உன் ஜெயம் எங்கே?
மரணமே உன் கூர் எங்கே?
(1 கொரி 15:55)

சபையின் ஆரம்ப நாட்கள்..

இரத்தக் களரியான ரோம் நகரம்..

காணும் இடமெல்லாம் இரத்த சாட்சிகளின் கல்லறைகள்..

ஒவ்வொரு இரத்த சாட்சியின் கல்லறையிலும் அவரவரின் இறந்த நாட்களை நினைவுகூர்ந்து..
சபை கல்லறைகளில் கூடி குறிப்பிட்ட நபரை நினைவு கூர்ந்தது..

ஒவ்வொருவரின் கல்லறையிலும் அந்தந்த நினைவு நாளில் கூடும்போது.. அவரவர் இறந்த நாளை பிறந்த நாளாய் நினைவு கூர்ந்து அவர் கிறிஸ்துவுக்காய் பட்ட பிரயாசத்தையும் மரித்த விதத்தையும் சொல்லி தேவனுக்கு நன்றி செலுத்தினர்..

இன்னும் சில நகரங்களில் நகருக்கு அடியில் புதை குழிகள் தோண்டப்பட்டு..
Catacombs என்று சொல்லப்படும் சுரங்கக் கல்லறைகள் உருவாக்கப்பட்டன..

இந்தச் சுரங்கக் கல்லறைகள் பூமிக்கு அடியில் பாறைகளின் இடையே இரத்த சாட்சிகளைப் புதைப்பதற்கென்றே பிரத்தியேகமாகத் தோண்டப்பட்ட மிகக் குறுகலான நிலவறைகள்..

அடுத்தடுத்து ஜனங்கள் மரிக்க மரிக்க..அவர்களை அடக்கம்பண்ண இடம் தேவைப்பட.. catacombs எனப்படும் இந்த சுரங்கக் கல்லறைகள்..வெளி உலகுக்குத் தெரியாமல் தோண்டப்பட்டு பூமிக்கடியில் நீண்டு கொண்டே சென்றன..

ரோம் நகருக்குக் கீழே தோண்டப்பட்ட கல்லறைகள் மட்டுமே பல மைல் தூரம் பல அடி ஆழம் இருந்தன என்கிறார்கள் அகழ்வாராய்ச்சியாளர்கள்..

சுரங்கத்தின் ஒரு முனைக்கும் மறுமுனைக்கும் பல நூறு கிலோமீட்டர் தூரம் என்கிறது கணக்கீடு..

அந்தக் குறுகிய கல்லறைகளில் காணப்பட்ட வாசகங்கள் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை வெளிப்படுத்தின..

கிரேக்க மொழியில் மீன் என்ற வார்த்தைக்கு "இயேசுகிறிஸ்து தேவ குமாரனாகிய இரட்சகர்"
என்று அர்த்தம் கொள்ளும் மீன் குறியீடு அநேகமாக எல்லாக் கல்லறைகளிலும் காணப்பட்டது..

இன்னொரு புகழ்பெற்ற குறியீடு "நல்ல மேய்ப்பன்"

கிறிஸ்தவர்கள் எந்தவிதப் பாதுகாப்புமின்றி கொல்லப்படும் ஆடுகளைப் போல இருந்த சூழ்நிலையில் கிறிஸ்து ஒருவரே அவர்களைப் பாதுகாக்கும் நல்மேய்ப்பன் என்பதைக் குறிக்கும் வண்ணமாக நல்மேய்ப்பன் சித்திரங்களும் பரவலாகக் காணப்பட்டன..

தகப்பனே..
"அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் "என்று ஆபேலைக் குறித்து சொல்லப்படுகிறதே ?
மரித்துத் தம் சுவடுகளை விட்டுச் சென்ற இரத்த சாட்சிகளின் வாழ்க்கை இன்னும் எங்களோடு பேசுவதாக..
அவர்கள் இரத்தம் உமது பார்வைக்கு அருமையாய் இருப்பதாக !! ஆமென்.

CHAPTER-2



"கொலோசியம் "
என்ற கொலைக்களம்

CHAPTER-2

"கொலோசியம் " என்ற கொலைக்களம்

அன்று ரோம் நகரில் திருவிழாக் கோலம்..

நகரத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் ஒரே இடம் நோக்கி
சாரை சாரையாய்ப் போகும் பெருங்கூட்டம்..

நூறு வாசல்கள் கொண்ட கொலோசியம் என்ற
திறந்த வெளி ஸ்டேடியம் திறக்கப்பட..
கூட்டம் உள்ளே நுழைந்து கரைகிறது..

வட்ட வடிவில் கட்டப்பட்ட *amphitheatre* என்ற
பிரம்மாண்ட ஸ்டேடியம்..
நூறு அடி உயரத்துக்கு மேல் உயர்ந்த வெளிச்சுவர்..
நடுவே பரந்து விரிந்த மைதானம்..

கீழிருந்து மேலே சுவரின் உச்சம் வரை சுற்று வரிசையில்
இருக்கைகள்..

நகரின் அடித்தட்டு முதல் மேட்டுக்குடி மக்கள் வரை
கொலோசியம் நிரம்பி வழிகிறது..

கூடியிருந்த லட்சத்துக்கும் அதிகமான ஜனத்தின் ஒரே
வேகம்..ஒரே வேட்கை..ஒரேதாகம்..
அவர்களை அங்கே இழுத்து வரச்செய்திருந்தது..

ஒரே வெறி..அது இரத்த வெறி..இரத்தப்பசி..

கூடிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்த..கர்வம் கொண்ட
அந்தப் பழங்கால ரோம நாகரீகத்தைப் பற்றி வேதனையுடன்
சொல்லஇதைவிட வேறு வார்த்தைகள் இல்லை..

அங்கே கூடியிருந்தவர்களில் போர் வீரர்கள் இருந்தனர்
தத்துவ ஞானிகள் இருந்தனர்..
கவிஞர்களும் பூஜாசாரிகளும் இருந்தனர்..

கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்ட ஆட்சியாளர்கள் வரை
கொலோசியம் நிறைந்து வழிந்தது..

கூட்டத்துக்கு நடுவே..
திறந்த மைதானத்தில்..

சில கிறிஸ்தவர்கள் கம்பத்தில் கட்டப்பட்டு உயிரோடு கொளுத்தப்படுகிறார்கள்.

மற்றவர்கள் செத்த மிருகங்களின் தோலுக்குள் வைத்துத் தைக்கப்பட்டு சீறும் காட்டு நாய்களுக்கு இரையாக வீசப்படுகிறார்கள்..

ஒவ்வொரு புதுவித சித்ரவதைக்கும்..
கூட்டம் கைதட்டி கலகலக்கிறது..
மன்னன்,தானும் இரதத்தை மைதானத்தில் வேகமாய் ஓடவிட்டு கிறிஸ்தவர்களை குதிரைகளின் கால்களால் எகிறப்பண்ணி வீசியடிக்கிறான்..

ரதத்தின் சக்கரங்களுக்குக் கீழே தேவ ஜனம் சட்னியாகிப் போக.. கூட்டம் "ஒன்ஸ் மோர் "என்று கொக்கரிக்கிறது..

இது போல் கோரக்காட்சிகள் ரோமுக்குப் புதிதல்ல..
மனிதர்களின் கோர வேதனையைக் கண்டு களிப்பதே ரோமர்களின் நேரப் போக்கும் விளையாட்டும் களியாட்டமுமாய் ஆகிப்போனது..

இவை ஒருபுறம் இருக்க..
திடீரென்று அனைவரின் கவனமும் திசை திரும்புகிறது..

இதோ! வயதான மனிதர் ஒருவர் கொண்டுவரப்படுகிறார்..

வயது காரணமாக குன்றிய சரீரம்.. முழுவதும் நரை மயிர்..தள்ளாத வயது..

சிரிப்பும் கேலியும் நையாண்டியும் நிறைந்த கூச்சல்..

தலை நிமிர்கிறார் பெரியவர்..
வாயிலிருந்து சில வார்த்தைகள் வெளிவருகிறது..

யார் இவர்?

பெயர்-அலெக்ஸாண்டர்..
ஒரு சபையின் போதகர்..

பேச ஆரம்பிக்கிறார்..

ரோம ஜனமே..
நான் ஒரு கிறிஸ்தவன்!
என் ஆண்டவர் எனக்காக மரித்தார்..
அவருக்காக என் ஜீவனை மகிழ்ச்சியோடு கொடுக்கிறேன்..

கூட்டத்தின் இரைச்சலில் அவர் சத்தம் கரைந்து போக..

மூன்று சிறுத்தைகள் அவிழ்த்து விடப்படுகின்றன..

தன் கரங்களைக் குவித்த வண்ணமாய் பெரியவர்
அலெக்ஸாண்டர் தன் ஜீவனை அர்ப்பணிக்க..

சிறுத்தைகள் அவர் மேல் பாய்ந்து..
அவரைக் கிழித்து சின்னாபின்னமாக்கி விடுகின்றன..

மிகுந்த ஆக்ரோஷத்துடன் கொந்தளித்துக்
கொண்டிருந்த நாட்கள்..

சாதாரண விசுவாசிகள் முதல் வயதான
மூத்த போதகர்கள் வரை எந்த பாரபட்சமுமின்றி..
வயது வித்தியாசமின்றி இரத்தக் கலவரம்
ஜனங்களை துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தது..

இன்னும் ஒரு காட்சி அரங்கேறுகிறது..
கொலோசியத்தில்..

உள் கதவுகள் திறக்கப்பட..
காட்டு விலங்குகள் அவிழ்த்து விடப் படுகின்றன..

அவை ஒன்றோடொன்று சண்டையிடுவதும்..
உள் வேலியின் மேல் ஏறித் தாண்ட முயற்சிப்பதும்..
அவைகளின் காட்சி நடுங்க வைப்பதாய் இருந்தது..

இப்போது கிறிஸ்தவர்கள் சிலர் மைதானத்துக்குள்ளே
தள்ளிவிடப்படுகிறார்கள்..
இம்முறை அனைவரும் வாலிபப் பெண்கள்..
உதவியற்ற நிலையில்..

காட்சியோ மனதைப் பதற வைப்பது..
ஆனால் இரத்த வெறி கொண்ட ரோம இனத்தின்
மனதில் ஈரத்தின் சுவடே இல்லை..

ரோம் நகரின் வரலாற்றில் இரக்கம் என்ற சொல்லுக்கு இடமிருந்ததில்லை..

முதலில் பயத்தில் உறைந்து போன வாலிபப் பிள்ளைகள் சற்று நேரத்தில் விசுவாசத்தில் தங்களைத் திடப் படுத்திக் கொள்கின்றனர்..

மிருகங்கள் தங்கள் இரையை நெருங்குகின்றன..

இளம் பெண்கள் எழுந்து நின்று ஒருவரோடொருவர் கைகோர்க்கின்றனர்..
வானத்தை நோக்கி ஏகோபித்து எழும்புகிறது அவர்கள் ஜெயகீதம்..

"எங்களை நேசித்து தம் பரிசுத்த இரத்தத்தால் எங்கள் பாவங்களைக் கழுவி..

எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின
எங்கள் தேவனும் பிதாவுமானவருக்கு
மகிமையும் கனமும் என்றென்றும் உண்டாவதாக!

அல்லேலூயா! ஆமென்"

மிருகங்களின் உறுமலிலும் பாய்ந்து குதறும்
அகோரக் கூக்குரலிலும்..
பாடலின் சத்தம் கரைந்து அடங்க..

அந்த ஜெய கெம்பீர ஆன்மாக்கள்..
தங்கள் பாடலை மீட்கப்பட்டவர்களின் பாடலோடு இணைத்துக் கொள்ள பரலோகத்தில் வெண்ணங்கி தரித்து அவர்களோடு இணைந்து கொள்கின்றனர்..

CHAPTER-3

நீசன் நீரோ

CHAPTER-3

" நீசன் நீரோ "

நீசன் நீரோ..

வரலாறு..பின்னோக்கி..

ரோம் நகர்..
கிபி 64..

தீ...தீ...தீ !
நகரம் பற்றி எரிய..
எங்கும் ஓலக்குரல்கள்..

மிஞ்சியதெல்லாம் குவியல் குவியலாக சாம்பல்..
ஒரு வாரம் தன் ராட்சத ஜூவாலைகளால் நகரத்தையே நரகமாக்கிப் போட்ட வரலாறு காணாத கபளீகரம்..

தெய்வக் குற்றம் என்று முதலில் எண்ணிய ரோமர்கள் மத்தியில் ஒரு வித பீதியும் வதந்தியும் பரவியது..

" ரோமை எரித்து விட்டான் நீரோ.."
"நிச்சயமாய் அவனே தான்..
இதுக்கு முன்ன அவன் ஆடாத ஆட்டமா? செய்யாத அராஜகமா..?"

"ஏய்! நான் பாத்தேன்..அவன் தன் அரண்மனை பால்கனியிலிருந்து கைதட்டி சிரித்து ரசித்ததை!

“டேய்!அவன் டான்ஸ் ஆடி fiddle வாசித்ததை நான் என் கண்ணால பாத்தேன்.."
எரிகிற தீயில எண்ணெய் ஊத்தினான் இன்னொருத்தன்..

"அவன் முழு city ஐயும் அழிச்சிட்டு தான் பேருக்கு ஒண்ணு கட்டப் போறான்
தெரியுமா?"

வதந்தி தீயாய்ப் பரவ..எங்கும் ஓங்கி ஒலித்தது..
“ நீரோ ஒழிக.."

பார்த்தான் நீரோ..
தன்னையும் தன் ஆட்சியையும் தக்க வைக்க
இனி ஒரே வழி தான்..

அறிவித்தான்..
"இதோ என் சுத்தமான கைகள்..
நகரை எரித்தது நானல்ல..
இந்தக் கிறிஸ்தவர்களே.."

சொல்லிவிட்டுத் திருப்பி விட்டான்..
கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தன் முழு பெலத்தையும்..

அவன் வீரர்கள் சல்லடையாய்த் தேடினார்கள்..
கிறிஸ்தவர்களை வீடுவீடாக..

கட்டவிழ்த்து விடப்பட்டது கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக
ஒரு மகா கலவரம்..

அடுத்தடுத்த ராஜாக்கள் காலத்தில் வரப்போகும் பத்து
உபத்திரவக் கட்டங்களைத் தன் நாட்களில் முதலாவதாக
முன்னின்று தொடங்கி வைத்தான் நீரோ..

வரலாற்று ஆசிரியர் யூசிபியஸ் எழுதுகிறார்..

"நகரம் முழுவதும் குவியல் குவியலாகப் பிணங்கள்..
தெருவெல்லாம் ஆணும் பெண்ணும் குழந்தைகளின்
உடல்களும் நிர்வாணமாக..
நிர்ப்பாக்கியமாக சிதறிப்போய்..

மரண தண்டனையெல்லாம் ஒரு தண்டனையே அல்ல
என்று நினைத்த காலம்..
எவ்வளவு குரூரமாக சித்ரவதை படுத்தமுடியுமோ அவ்வளவு
அளவு கடந்து..

உடல் நார் நாராய் கிழிக்கப்பட்டு..
உயர்ந்த கட்டடங்களிலிருந்து முகங்குப்புற
தள்ளிவிடப்பட்டு..

மரம் அறுக்கும் வாளால் அறுக்கப்பட்டு..
கல்லெறிந்து கொல்லப்பட்டு..

எரிந்து தகதகக்கும் இரும்புத் தகடுகள் மேல் படுக்க
வைக்கப்பட்டு..
வனவிலங்குகளுக்கு இரையாக்கப்பட்டு..

பைத்தியம் பிடித்த காளை மாடுகளின் கொம்பால் குத்தி வீசப்பட்டு..
செத்த உடல்களை அடக்கம் பண்ண ஆளில்லாமல்
வீதியெல்லாம் குவியல் குவியலாக அழுகிய பிரேதங்கள்..

இவை எல்லாவற்றுக்கும் மத்தியிலும் அப்போஸ்தல உபதேசத்திலும் இரத்த சாட்சிகளின் இரத்தத்தாலும் நீர் பாய்ச்சப்பட்டு வேரூன்றி வளர்ந்து தீயாய்ப் பரவிய சபையின் எழுப்புதல் தீயை ஒருவனாலும் அணைக்க முடியவில்லை..

சரி..யார் இந்த நீரோ ?

தகப்பன் கிலவுதியு ராயன்..
அவனது நாலாவது மனைவி அகிரிப்பினா..இருவருக்கும் பிள்ளைகள் இல்லை..
ஆனால் முந்தைய திருமணங்கள் மூலம் இரண்டு பிள்ளைகள்..
பிரிட்டானியாஸ் மற்றும் நீரோ..

இதில் நீரோ.. அகிரிப்பினாவின் மகன்..
தன் மகனைப் பட்டத்துக்குக் கொண்டு வரத் தன் கணவன் கிலவுதியு ராயனையே விஷம் வைத்துக் கொன்றாள் அகிரிப்பினா..

நீரோ ராயனானதும்.. தன் 13 வயது ஒன்று விட்ட சகோதரன் பிரிட்டானியாசைக் கொன்று விடுகிறான்..

நாட்கள் நகர்ந்தன..
இந்த இரத்தப்பிரியன்
தன் தாயையும் லுக்ரேன் நதியில் தள்ளி விட்டுக் கொல்லுகிறான்..

தன் முதல் மனைவியை மட்டுமல்ல..நிறைமாதக் கர்ப்பிணியான தன் இரண்டாவது மனைவியையும் தன் காலால் உதைத்தே கொல்கிறான் நீரோ..

தகப்பனே..
முழங்கால்களில் நின்ற வண்ணமாய்க் கல்லெறியப்பட்ட எங்கள் முன்னோர்..
வெண் உடையில் கை கோர்த்து..

முழங்காலில் நின்று ஏகோபித்து ஆராதித்த வண்ணமாய் சிங்கங்களின் பற்களுக்கு இரையான கோதுமை மணிகளான எங்கள் சொந்தங்கள்..

சரித்திரக் கதை சொல்ல அல்ல ஐயா..
சரித்திரம் படைக்க முகங்குப்புற விழுகிறோம் உம் பாதத்தில்..

தேவரீர் வானங்களைக் கிழித்து இறங்கி அக்கினி இறங்குமாப் போலவும்..
அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவுமான உலகம் காணா உன்னத எழுப்புதலை இந்தத் தேசமும் அரசாங்கமும் காணச் செய்வீராக!

ராஜாதி ராஜனின் ஆளுகையைக் காண்பார்களாக!
அப்படியே செய்வீராக!

ஆமென்.

[நீரோ மன்னன் ஃபிடில் வாசிக்கும் போது ரோம் நகரம் பற்றி எரிந்ததோ இல்லையோ-நான் அறியேன்..

ஆனால்..ஒன்று அறிவேன்..இன்று சபை தூங்கி வழியும் போது நரகம் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது..

- LEONARD RAVENHILL]

CHAPTER-4



கல்லெறியப்படுகிறான் ஸ்தேவான்

CHAPTER-4

ஸ்தேவான்

"உம்முடைய (இரத்த) சாட்சியாகிய ஸ்தேவான்" (அப் 22:20) Eng Bible

---

ஸ்தேவான் நின்றான்..
ஆலோசனை சங்கத்துக்கு முன்பாக..
லீபர்த்தீனர், சிரேனே,
அலெக்ஸாண்ட்ரியா,
சிலிசியா, ஆசியா நாடுகளின் ஆலோசனை சங்கத்துக்கு
முன்பாக..

விசுவாசத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறைந்து அவன்
பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்கும்
தைரியம் அங்கு யாருக்கும் இல்லை..

வானம் திறக்க..
தேவ மகிமையால் முகம் பிரகாசிக்க..
நின்றிருந்த அவனை
நகரத்துக்கு வெளியே இழுத்து கல்லெறிந்து கொல்ல..

அவனோ அவர்களுக்காக மன்றாடி தன் ஆவியை
அர்ப்பணிக்க..

கர்த்தராகிய இயேசு தாமே முன் செல்ல..
பரலோகமே எழுந்து நின்றது..
அவனை வரவேற்க..

ஆதி சபையின் முதல் கோதுமை மணி..
நிலத்தில் விழுந்து..
உலகத்தைக் கலக்கும் பல பவுல்களை பலனாய்க்
கொடுத்தது..

தேசம் தேவனிடம் திரும்பும் நாள் வெகு தூரமில்லை..
அதற்கு முன்..

தேவனே,
பல ஸ்தேவான்கள் இந்தியாவின் *Dharam Sansadh* என்ற ஆலோசனை சங்கங்களுக்கும் அதிகாரிகளுக்கும் காவல் நிலையங்களுக்கும் முன்பாக இழுத்துச் செல்ல நேரிடும் போது..
ஒருவரும் எதிர் பேசவும் எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் கொடுப்பீராக !

சாதுக்களும் ஷாக்காவின் மதத்தலைவர்களும் உமது மகிமையைக் காண்பார்களாக !

எங்களில் அநேகர் ஸ்தேவான்களாக மண்ணில் விழுந்து மடிய நேரிட்டாலும், அந்த விதைகளிலிருந்து தேசத்தைக் கலக்கி தேவனிடம் திருப்பும்
பவுல்களை எழுப்புவீராக !

ஆமென்.

(இரத்த சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து
- C.T.STUDD)

CHAPTER-5

யோவானுடைய சகோதரன் யாக்கோபின் சிரச்சேதம்

CHAPTER-5

யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபு

"அக்காலத்திலே ஏரோது ராஜா..யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான்.." (அப் 12:1,2)

யாக்கோபு..
கலிலேயா கடற்கரையிலே..
தன் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்த போது..

நாசரேத்தூர் இயேசுவால்
மனுஷரைப் பிடிக்க அழைக்கப்பட்ட போது..
படகுகளையும் வலையையும் தன் தகப்பனோடு விட்டு விட்டு தன் தம்பியாகிய யோவானோடு இயேசுவைப் பின் செல்ல தன்னை ஒப்புக் கொடுத்த அதே யாக்கோபு..

பெந்தேகோஸ்தேக்குப் பின்..சகலமும் தலைகீழாய் மாறியது..
ஆதித்திருச்சபை ரோம ஆட்சியாளர்களால் கடும் நெருக்கத்தை அனுபவித்த காலம்..

சரித்திரம் சொல்கிறது..

யாக்கோபு கொலைக் களத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிற போது..
அவரது கொலையாளிகளில் ஒருவன் யாக்கோபின் அசாதாரண தைரியத்தையும் அசைக்க முடியாத விசுவாசத்தையும் கண்டு..

போகும் வழியிலேயே இயேசுவுக்கு தன் மனதைக் கொடுக்க..அன்று ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இருவரது தலையும் துண்டிக்கப்பட்டது..

ஓ! இரத்த சாட்சி மரணத்தின் பாக்கியத்தை என்னவென்று சொல்வது!!

தகப்பனே..
ஒரு நாள் நாங்களும் இந்தப் பாதையில் கடந்து போவது உமது அநாதி தீர்மானமாய் இருக்குமேயானால்..

எங்கள் இருதயத்தை உமக்குத் தந்தபடியே எங்கள் தலையையும் உமக்காகத் தந்துவிடக் கிருபை தாரும்.. ஆமென்.

(என் உயிரைத் தவிர வேறு எதையும் நீ என்னிடத்திலிருந்து பறிக்க முடியாது - OFFRESS GREIZINGER)

CHAPTER-6



தோலுரிக்கப்படுகிறார் பர்த்தலோமேயு

CHAPTER-6

"பர்த்தலோமேயு என்ற நத்தானியேல்"

"இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று இயேசுவின் வாயாலேயே சாட்சி பெற்ற நத்தானியேல் என்ற பர்த்தலோமேயு..

மனிதன் ஆட்டுக்கும் மாட்டுக்கும் மானுக்கும் பாம்புக்கும் புலிக்கும் தோலுரிக்கிறான் - தன் சுய இலாபத்துக்காக.. ஆனால் மனிதனை மனிதன் தோலுரிப்பானோ ?

இயேசுவுக்காக உயிரோடு தோல் உரிக்கப்படத் தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு மனிதன் உண்டு..

வேதத்தில் இவரைப்பற்றி அதிக விபரங்கள் காணப்படாவிட்டாலும் சரித்திரம் சொல்கிறது..

எப்போதும் கோடு போட்ட வெண் அங்கி அணிந்து தேவ மகிமையால் நிறைந்திருந்த பர்த்தலோமேயு..
அவர் அணியும் அங்கியும் காலணிகளும் 26 வருடங்களாய் பழமையாய் போகவே இல்லையாம்..தினமும் பகலில் 100 முறையும் இரவில் 100 முறையும் ஜெபம் பண்ணும் பழக்கம் கொண்டிருந்த பர்த்தலோமேயுவின் ஜெபத்தைக் கேட்க தேவ தூதர்கள் காத்திருப்பார்களாம்..

இன்றைய நவீன கால துருக்கியிலும் பின்னர் சிறிது காலம் இந்தியாவிலும் ஊழியம் செய்த பர்த்தலோமேயு..
கடைசியாகச் சென்றது அர்மீனியா..(கிபி 60)

கிறிஸ்துவின் தேவத்துவத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுதலிக்க மறுத்த பர்த்தலோமேயுவை உயிரோடு தோலுரித்து சிலுவையில் அறைந்தனர் அன்றைய ஆட்சியாளர்கள்..(கிபி 68)

"நீர் தேவனுடைய குமாரன்;
நீர் இஸ்ரவேலின் ராஜா(யோ 1:49)"
என்று இயேசுவை சந்தித்த முதல் சந்திப்பிலேயே அவரைச் சொன்னாரே..
அப்படியே சொல்லி ஜீவனை விட்டிருப்பாரோ ?

"கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது
(2 கொ 5:14)"
என்று பவுல் இதைத் தான் சொன்னாரோ ?

தகப்பனே..
கிறிஸ்துவின் அன்பு மாத்திரமல்ல..
தங்களைத் தோலுரிக்கப்பட ஒப்புக்கொடுத்த
அப்போஸ்தலரின் இரத்தம் எங்கள் இரத்த நாளங்களைக்
கொதிக்கச் செய்யாதோ ? இரங்குமே!

ஆமென்.

(கிறிஸ்து சென்ற வழி இதுவே..அவரது அப்போஸ்தலர் சென்ற வழியும் இதுவே..நம் இரட்சகரின் ஊழியர்களாகிய நாம் அவருக்கு மேலானவர்கள் அல்லவே !!
- Adrian Corneliss)

CHAPTER-7

அடித்துக் கொல்லப்பட்ட நீதிமானாகிய யாக்கோபு

CHAPTER-7

" நீதிமான் யாக்கோபு "

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரனும்
புதிய ஏற்பாட்டு நிருபத்தை எழுதியவனுமான யாக்கோபு..*

*சவுல் பவுலாய் மாறி விட்ட அந்தக் காலகட்டம்..
கூடையில் வைத்து மதிலிலிருந்து இறக்கி விடப்பட்டு
யூதர்கள் கையிலிருந்து தப்பி விட்டான் பவுல்..*

*அவனது எஸ்கேப் அவன் எதிரிகளைக் கொந்தளிக்கச்
செய்தது..*

*சதுசேயனான பிரதான ஆசாரியன் அன்னா அன்றைய
சபைக்கு விரோதமாய் விஷத்தைக் கொப்பளித்துக்
கொண்டிருந்தான்..*

*யாக்கோபு அன்றைய எருசலேம் சபையில் தன் பரிசுத்த
வாழ்க்கையாலும் சாட்சியாலும்
"நீதிமான் யாக்கோபு" என்று பெயர் பெற்றிருந்தார்..அவரது
முகத்துக்காகவே அநேக யூதர்கள் சபையில் சேர்ந்தனர்..*

*ஒருநாளில் பலமுறை இந்த நீதிமான் தேவாலயத்துக்குள்
தனிமனிதனாய்ப் பிரவேசித்துத் தனது ஜனங்களின் பாவ
மன்னிப்புக்காக முழங்காலில் விழுந்து கிடப்பார்..*

*முழங்காலில் ஜெபித்து ஜெபித்து அவரது முழங்கால்கள்
ஒட்டகத்தின் முழங்கால்கள் போல் ஆகிப்போனதாக சரித்திர
ஆசிரியர்கள் சொல்கிறார்கள்..*

"பிடியுங்கள் அவனை"என்றான் அன்னா..

*ஆயிரக்கணக்கான ஜனங்கள் எருசலேம் தேவாலய
மதிலுக்குக் கீழே நிற்க.. யாக்கோபை தேவாலய மதிலின்
உச்சிக்கு இழுத்துச் சென்றனர் அன்னாவின் ஆதரவாளர்கள்..*

*ஜனங்களுக்கு முன்பாக இயேசுவையும் அவரது சகோதரன்
யாக்கோபையும் இழிவுபடுத்துவதே அன்னாவின்
யோசனை..*

"இயசுவையும் உபதேசத்தையும் மறுதலி" என்று கூச்சலிட்ட கூட்டத்தைக் கையசைத்து நிறுத்திய யாக்கோபு சொன்னார்..

"என்னைக் கேட்கிறீர்களோ?
இதோ இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பக்கம் நிற்கக் காண்கிறேன்..
மேகங்களோடே அவர் மீண்டும் வருவார்.."

யாக்கோபின் துணிச்சலான சாட்சியைக்
கேட்ட கூட்டத்தில் அநேகர் ஆவியால் தொடப்பட..
தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று ஆர்ப்பரித்தனர்..

ஆனால் சதுசேயரின் குரல் ஓங்கி ஒலித்தது..
"அவனைக் கீழே தள்ளுங்கள்.."

அடித்து மிதித்து கோபுரத்திலிருந்து தள்ளி
விடப்பட்டார் யாக்கோபு..

கீழே விழுந்த அவர், விழுந்த நிலையிலேயே ஜெபித்தார்..
"பிதாவே இவர்களை மன்னியும்..
தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல்
செய்கிறார்கள்"

இன்னும் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த யாக்கோபை
கல்லால் அடித்துக் கொல்ல நினைத்த போது..
ஒரு ஆசாரியன் சொன்னான்..
"நிறுத்துங்கள்!
இவன் உங்களுக்காக ஜெபிக்கிறான்.."

ஆனால் கூட்டத்திலிருந்து முன்னால் ஓடி வந்த ஒருவன் துணி
துவைக்கும் கட்டையால் யாக்கோபைத் தலையில் அடிக்க..
ஆதிசபையின் அணையாவிளக்கு ஒன்று அணைந்தது..

ஆனால் அவர் தைரியமாய் கொடுத்த அன்றைய கடைசி
சாட்சி எழுப்புதல் தீயை எருசலேமில் கொளுத்தி விட்டது..

கர்த்தராகிய இயேசுவே,
"நீங்கள் எனக்காக அழாமல்
(இரத்த சாட்சிகளுக்காகவும அழாமல்)

உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும்
(உங்கள் சபைக்காகவும்??)
அழுங்கள்" என்று சொன்னீரே..

பச்சை மரமாகிய(உமக்கும் உம் சாட்சிகளுக்கும்) இவைகளைச் செய்தால் பட்ட மரமாகிய (எங்களுக்கு) என்ன செய்ய மாட்டார்கள்?(லூக்22:28-31)

நீர் எங்களுக்குத் தந்த கிருபை விருதாவாய்ப் போகாதிருப்பதாக!
பொய்யான மாயையைப் பற்றிக் கொண்டு எங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்காதபடி எங்களைப் பாதுகாப்பீராக!
ஆமென்.

("ஸ்க்கட்..எங்களுக்கு ஒரு பாட்டு பாடேன்..! - அடித்துக் கொல்லப்பட்ட ஜாண் ஸ்க்கட்டின் மரித்துக்கிடந்த உடலைப் பார்த்து, "இப்போது ஒரு பாட்டுப்பாடு !" என்று நையாண்டி செய்தது அவரைக் கொலை செய்த கூட்டம்..)

CHAPTER-8

பிலிப்பு அப்போஸ்தலன்

CHAPTER-8

" பிலிப்பு அப்போஸ்தலன் "

"நீ எனக்குப் பின் சென்று வா" என்ற இயேசு கிறிஸ்துவின் அழைப்பைக் கேட்ட பிலிப்பு..

நாத்தான்வேலிடம் "இயேசுவைக் கண்டோம்"என்று சொன்னது மட்டுமல்ல.."வந்து பார்" என்று அவனையும் அழைத்து வந்த பிலிப்பு..

பின்னர் சில கிரேக்கர்கள்
"ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று அவனிடம் வந்த போது அவர்களை அவரிடம் நடத்திய பிலிப்பு..

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் மிஷினரியாக அனுப்பப்பட்டது..
கிரீஸ்,பிரிகியா மற்றும் சிரியா நாடுகளுக்கு..தன் சகோதரி மரியம் மற்றும் பர்த்தலோமேயுவுடன்..

அங்குள்ள ஹிரோப்போலிஸ் நகரத்தின் கவர்னரின் மனைவி பிலிப்புவின் ஊழியத்தின் மூலம் சுகம் பெற்று இரட்சிக்கப்பட..
அந்த ஊரே கலவரமானது..

மிஷினரிகள் மூவரும் கடும் சித்திரவதைக்கு உள்ளானாலும்..பிலிப்பு அறையப்பட்டது சிலுவையில் தலைகீழாக..

அந்தரங்கத்தில் தொங்கினாலும் அதிலிருந்தும் பிரசங்கம் பண்ணிய பிலிப்பு..சிலுவையில் தன் ஆவியை ஒப்புக் கொடுத்தார்..

தகப்பனே..
இயேசுவைக் கண்ட பிலிப்பு
மற்றவர்கள் இயேசுவைக் காணச் செய்த பிலிப்பு..தன் கண்களை அவர் மேலேயே பதித்து வைத்த பிலிப்பு..

தலை கீழாய் அறையப்பட்ட நிலையிலும் இறுதி வரை நின்று தன் ஓட்டத்தை வெற்றியுடன் முடித்த பிலிப்பு.. எங்களுக்கு உதாரணமாகவும் சவாலாகவும் நிற்க கிருபை தாரும்..

இரத்த சாட்சிகளின் வாழ்க்கையைப் படிக்கும் போதே உம்முடைய பாரம் எங்களைப் பற்றிப் பிடிப்பதாக!! ஆமென்.

(அப்போஸ்தலனாகிய இந்த பிலிப்பு பந்தி விசாரிப்புக்கு நியமிக்கப்பட்டு பின் சமாரியாவின் எழுப்புதலுக்கு காரணமான பிலிப்பு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது)

[அது தீயானாலும் தண்ணீரானாலும் இந்த சரீரத்தை ஒப்புக் கொடுப்பது எனக்குப் பெரிய காரியம் அல்ல..
- JOOS KINDT]

CHAPTER-9

X வடிவ சிலுவையில் அந்திரேயா

CHAPTER-9

" அந்திரேயா "

மேசியாவைக் கண்டோம்"
(யோவான் 1:41)

இரட்சகர் இயேசுவை தன் சகோதரன் பேதுருவுக்கு இப்படித்தான் அறிமுகம் செய்தான் அந்திரேயா..

அந்த ஒரு பேதுரு மூலம் அநேக தலைமுறைகளுக்கு இயேசுவை அறிமுகம் செய்ய கருவியாய் நின்ற அந்திரேயா..

பாரம்பரியம் சொல்கிறது..
எத்தியோப்பியாவிலுள்ள சித்தியர்கள் மத்தியில் மிக வல்லமையாக ஊழியம் செய்த அந்திரேயா..கடைசியாகச் சென்றது மேற்கு கிரீஸில் உள்ள பத்ரோயா..

நவம்பர் 30 கிபி 70..
(சிலர் 60 என்பர்)
நீரோ மன்னன் காலம்..

ரோம தெய்வங்களையும் விக்கிரகங்களையும் வணங்க மறுத்த அந்திரேயா..அந்த ஜனங்களின் விசுவாசத்தை இயேசுவிடம் திருப்பிய போது..

அகேயாஸ் என்ற ரோம கவர்னரால் பிடிபட்டு சிலுவை மரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்ட போது சொன்ன கடைசி வார்த்தைகள்..

"ஓ! நான் ஏங்கிக் காத்திருந்த சிலுவையே..வாஞ்சையும் விருப்பமும் மகிழ்ச்சியுமாய் உன்னிடம் வருகிறேன்..நீ என் நேசமல்லவா ?உன்னை அணைத்துக்கொள்ள ஏங்குகிறேன்.."

மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி..
" T " வடிவ சிலுவையின் மரணமே
கொடுமையிலும் கொடுமை என்றால்..

அந்திரேயாவை அடித்துக் கட்டியது "X" வடிவ சிலுவையில்.. சிலுவையின் shape க்கு ஏற்றபடி கால்கள் வலுக்கட்டாயமாய் விரிக்கப்பட்டு..முதுகெலும்பு முறிந்து..

கைகள் இரண்டும் தோள் பட்டையிலிருந்து கழன்று..

ஆணியடித்தால் உடனடி மரணம் என்று சிலுவையில் கட்டப்பட்ட நிலையில்..
கதறக்கதற நீண்ட நேர வேதனை அனுபவிக்க விட்டு விடப்பட்டு அகோர மரணம் அடைந்த அந்திரேயா..

இன்றைய சபை இப்படிப்பட்ட புகழ்பெறாத புனிதர்களை மறந்து போனதோ?

"கட்டப்பட்டவர்களையும் தீங்கு அனுபவிக்கிறவர்களையும் நினைத்துக் கொள்ளுங்கள்" (எபி 13:3) என்று எபிரேய நிருப ஆக்கியோன் சொன்னது இவனைப் போன்றவர்களைத் தானோ?

பரிசுத்த தகப்பனே..
வரலாறு திரும்பும் இந்தக் கடைசி நாட்களில்..
சபை தன்னைப் பெற்றெடுத்த முற்பிதாக்களின் கர்ப்ப வேதனையையும் தன்னை வளர்த்து உருவாக்க அவர்கள் செலுத்தித் தீர்த்த தாங்க முடியாத விலைக்கிரயத்தையும் கண்ணீரோடு நினைவுகூர எங்கள் கண்களைத் திறக்க மாட்டீரோ ?
தயவு செய்யுமே! ஆமென்.

(இந்த சரீரத்தின் அங்கங்கள் பரலோக தேவன் தந்தது..ஆகவே அவருக்காகவே அவற்றை மகிழ்ச்சியோடு அர்ப்பணித்து விடுகிறேன் - Lauwrens Van De Walle)

CHAPTER-10



செலோத்தே சீமோன்
தலைகீழாக சிலுவையில்

CHAPTER-10

" செலோத்தே எனப்பட்ட சீமோன் "

Unsung Heroes எனப்படும் பெயர் அறியாதவர்களின் பட்டியலில் அறியப்பட்ட சீமோன்..

"ஒரே ஒரு வாழ்க்கை..அதுவும் சீக்கிரம் கடந்து போகும்..கிறிஸ்துவுக்காக செய்வது மட்டுமே இறுதிவரை நிற்கும் "என்றார் ஆப்பிரிக்காவுக்கு சென்ற ஐரோப்பிய மிஷினரி C.T.Studd..

ஆனால் இவருக்கு முன்னோடியான சீமோன் முதல் நூற்றாண்டில் சென்றது ஆப்பிரிக்காவுக்கு..
பின்னால் மவுரிட்டானியா,
சிரேனே,லிபியா,
பெர்சியாவுக்கும் சுவிசேஷம் சுமந்து சென்றார் என்கிறது வரலாறு..

சீமோனைப் பற்றிய ஒரு துணுக்குச் செய்தி..அந்த நாட்களில் யாராவது சுவிசேஷத்தை விசுவாசிப்பதில் தயக்கம் காட்டினாலோ இரட்சிப்பின் காரியத்தில் முடிவெடுப்பதில் காலம் தாழ்த்தினாலோ..
அப்போஸ்தலர்கள் முதலில் அழைப்பது சீமோனைத்தான்..
15 நிமிடத்துக்குள் அந்த மனிதன் தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து விடும் அளவுக்கு வழி நடத்தி விடுவார்..

இன்று ஆப்பிரிக்காவில் காணப்படும் எழுப்புதலுக்கு வித்திட்ட சீமோன் தன் ஆயுள் காலம் முழுவதையும் ஊழியத்தில் ஊற்றிவிட்ட பின் தன் கடைசி காலத்தில் ஆப்பிரிக்கக் காடுகளில் மரம் அறுக்கும் வாளால் இரண்டு துண்டாய் அறுக்கப்பட்டு அந்த மண்ணில் இரத்த சாட்சியானார்..

"சிலர் வாளால் அறுப்புண்டார்கள்" என்று எபிரேய நிருப ஆக்கியோன் சொன்னது இவனைப் போன்றவர்களைத் தானோ? (எபி 11:37)

இன்று வீடியோவில் வாளால் ஒரு மனிதன் அறுக்கப்படும் காட்சியை காண்பதே நம்மால் சகிக்க முடியாததாய் இருக்குமானால் (அதுவும் மஷின்)..கையால் அறுக்கும் வாளால் அறுபடும் மனிதனின் கோரத்தை எப்படி சொல்வது?

தேவனே..
எங்களுக்கு சொல்ல வார்த்தை இல்லை..

"நீங்கள் பாடும் பாட்டே உங்களுக்கு விரோதமாய் சாட்சி பகரும்" (உபா 31:21)
என்றானே மோசே..
"இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன் நிச்சயம் நிச்சயமே"
என்று எண்ணற்ற முறை பாடியிருப்போமே..அது நிஜமாகும் நாள்
வந்தாலும் அந்த வார்த்தைகளில் நிற்க கிருபை தாருமே!
ஆமென்.

CHAPTER-11

கோடாரியால் கொல்லப்பட்ட யூதா ததேயு

CHAPTER-11

" யூதா ததேயு "

"ஆண்டவரே நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போகிற காரணம் என்ன? என்ற யூதா ததேயு..(யோ 14:22)

கிலெயோப்பா மரியாளுக்கும் அல்பேயுவுக்கும் குமாரனாகிய யூதா..

சீமோன் மற்றும் சின்ன யாக்கோபு என்பவர்களின் சகோதரனாகிய யூதா..

நாட்குறிப்புகள் தெரிவிக்கிறது..
யூதா - அப்போஸ்தலனாக அழைக்கப்படுமுன் ஒரு விவசாயி என்று..

14ம் நூற்றாண்டு எழுத்தாளர் நிக்கபோரஸ் சொல்கிறார்..
கானாவூர் கல்யாணத்தின் மாப்பிள்ளை இவர் தான் என்று..

யூதேயா,சமாரியா,
இதுமேயா,சிரியா,
மெசப்பொத்தோமியா,
லிபியா மற்றும் இறுதியாக எடிஸ்ஸாவிலும் பெய்ரூட்டிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பலமாய் சாட்சி கொடுத்து அவரே ஆண்டவர் என்று நிரூபித்த போது..
இயேசுவிடம் அவர் கேட்ட கேள்விக்கு பல வருடங்கள் சென்று யூதாவுக்கு பதில் கிடைத்தது..

கிபி 65ல் பெய்ரூட்டில்..
(எடிஸ்ஸா என்றும் சொல்லப்படுகிறது)
தடியால் அடிக்கப்பட்டு கோடாரியால் வெட்டிக் கொல்லப்பட்ட ததேயு..

இவர் மரிக்குமுன்னே இவரது தகப்பனாரும் இரத்தசாட்சியானார் என்கிறது வரலாறு..

எங்கள் பாவங்களையும் சாபங்களையும் நோய்களையும் சிலுவையில் சுமந்து தீர்த்த இரட்சகரே..

நீர் எங்களுக்காக ஜீவனைக் கொடுத்தினாலே..
நாங்களும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாய்
இருக்கிறோமே! (1யோா3:16)
கிருபை தாருமே !
ஆமென்.

(இவ்வுலகத்தின் அதிபதிகளின் புத்திக்கும் அதிகாரிகளின் அறிவுக்கும் எட்டாத விசுவாசத்தை அவர்கள் உடையர்களானபடியால் இவ்விதமான பாடுகளுக்குள்ளாவார்கள்.
- Gotthard of Nonenberg)

CHAPTER-12

சிலுவையில் மத்தேயு

CHAPTER-12

" மத்தேயு "

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வம்சாவளியை.. ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு.. என்று ஆரம்பித்து *Great Commission* வரையிலான சுவிசேஷம் எழுதிய அல்பேயுவின் குமாரனாகிய லேவி என்ற மத்தேயு..

ஆரம்பத்தில் தன் சொந்த யூத ஜனங்களின் பட்சமாய் இல்லாமல் ரோம அரசாங்கத்தின் அங்கமாய் சுங்கத்துறை அதிகாரியாய் இருந்தபோது..
தன் பின்னே வரும்படி இயேசுவால் அழைக்கப்பட்ட மத்தேயு..

அவன் ஒரு சாதாரண படிப்பறியாத மீன்பிடி தொழிலாளி அல்ல..
அவன் ஒரு படித்த *professional*..

ஜாதி மத பேதம் பார்த்து இந்தியா நினைப்பது போல் கிறிஸ்தவம் ஒரு தாழ்ந்த ஜாதியினரின் மதமல்ல..பிரித்துப் பார்த்தாலும் கீழ்த்தட்டு முதல் மேல் தட்டு வரை சமுதாயத்தின் சகல தளங்களிலும் விசுவாசிகள் நிறைந்த ஜெய வீரர்களின் சேனை அல்லவா !!

நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்ற இரட்சகரின் வார்த்தைகளைத் தன் செவிகளால் கேட்ட மத்தேயு..

முதலில் யூதேயாவில் 15 வருடங்களும்..பின்பு புறஜாதி தேசங்களான மெசப்போத்தோமியா,
பெர்சியாவிலும் ஊழியம் செய்த மத்தேயு இறுதியாக சென்றது..எத்தியோப்பியா

ஆரம்பத்தில் பிலிப்பு மூலம் சுவிசேஷமும் ஞானஸ்நானமும் பெற்ற எத்தியோப்பிய மந்திரி தன் தேசத்து ராஜஸ்திரீ கந்தாகேவுக்கு இயேசுவை அறிமுகப்படுத்த..சில ஆண்டுகளுக்குப்பின் மத்தேயுவும் எத்தியோப்பியாவில் அவர்களோடு அந்த ஊழியத்தில் இணைந்தார் என்கிறது வரலாறு..

தன் கடைசி காலத்தில் எத்தியோப்பியாவில் உள்ள நாதயார் என்ற இடத்தில் ஹரிட்டிகஸ் என்ற ஆட்சியாளனால் கோவில் கோபுரத்திலிருந்து தள்ளி விடப்பட்டு தலை வெட்டப்பட்டு இரத்த சாட்சியான மத்தேயு..

தகப்பனே..
இயேசுவால் அழைக்கப்பட்ட உடனே தன் பதவியையும் அந்தஸ்தையும் உதறித் தள்ளிவிட்டு உடனே அவருக்குப் பின் சென்ற மத்தேயுவின் அழைப்பும் எழுத்தும் ஊழியமும் மரணமும் எங்கள் இன்றைய இளைய தலைமுறைக்கும் *professionals* க்கும் சவாலாய் அமைவதாக!

இயேசுகிறிஸ்துவுக்காக எவ்வித தியாகத்தையும் செய்ய இந்தத் தலைமுறையைத் தட்டி எழுப்புவீராக !
அப்படியே ஆவதாக!
ஆமென்.

(இங்கே நான் என் மனைவி பிள்ளைகளையும்..வீட்டையும் ஊரையும்..உடலையும் உயிரையும்..விசுவாசத்துக்காகவும், சத்தியத்துக்காகவும் விட்டுவிடுகிறேன்..- George Raeck)

CHAPTER-13

குதிரை வாலில்
கட்டி இழுக்கப்பட்ட மாற்கு

CHAPTER-13

" மாற்கு "

புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறபடியே..

மாற்கு சுவிசேஷம் எழுதிய மாற்கு..
மாற்கு என்ற யோவான்..பர்னபாவுக்கு இனத்தானான மாற்கு..ஊழியத்தில் பவுலுக்கு மிகவும் பிரயோஜனமுள்ள மாற்கு..

பிறந்த இடம் :
மேற்கு எகிப்திலுள்ள லிபியாவின் பென்ட்டோபோலிஸில் உள்ள சீரேனே..

பெற்றோர் :
தகப்பன்-அரிஸ்டோபுலஸ்
தாய்-பர்னபாவின் சகோதரி மரியாள் (பேதுருவின் மனைவிக்கு ஒன்று விட்ட சகோதரி)

படிப்பு :
தகப்பனின் மரணத்துக்குப்பின் பேதுரு தன் பராமரிப்பில் நல்ல கல்வி(சட்டம்) கொடுத்ததாக வரலாறு.

மனமாற்ற அனுபவம் :
தாய் மரியாள், இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக மாற.. தாயின் சாட்சியால் தொடப்பட்டு..பின்னாட்களில் பேதுருவோடு மொழிபெயர்ப்பு ஊழியத்தில் வசனம் கற்று மனம் திரும்பியவன்..

வரலாற்றுத் துணுக்குகள் :
பிறந்த இடத்திலிருந்து பெரிய கலவரம் காரணமாக யூதேயாவுக்கு இடம் பெயர்ந்த மாற்குவின் யூத குடும்பம் settle ஆனது..கலிலேயாவிலுள்ள கானாவூரில்..

தகப்பன் அரிஸ்டோபுலாஸும் மாற்குவும் ஒரு நாள் யோர்தான் நதிக்கரையில் நின்று கொண்டிருந்த போது..2 சிங்கங்கள் கர்ஜித்து ஓடிவர..மாற்கு சிங்கங்களை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்ள..இரண்டும் அதே இடத்தில் செத்து விழ..மகன் மாற்கு மூலம் மனம் திரும்பினார் தகப்பனார்..

காலங்கள் கடந்தது..
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்
அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்
படி..அவரவர் மிஷினரியாய் அனுப்பப்பட வேண்டிய
இடங்களுக்கு சீட்டுப் போட்ட போது..
மாற்கு பேரில் விழுந்தது சீட்டு..ஆப்பிரிக்கா மற்றும்
எகிப்துக்குச் செல்ல..

தன் முதல் மிஷினரி பயணமாக ஆப்பிரிக்கா மற்றும்
எகிப்துக்கு சென்ற மாற்குவின் கைகளால் நடந்தன பலத்த
அற்புதங்கள்..

வியாதியஸ்தர் குணமாக..குஷ்டரேகிகள் சுத்தமாக..அசுத்த
ஆவிகள் விலகிஓட
புறஜாதிகள் தங்கள் விக்கிரகங்களை உடைத்தெறிந்து
இயேசுவை ஏற்றுக் கொண்டனர்..

அங்கிருந்து அலெக்ஸாண்ட்ரியாவுக்கு வந்தார் மாற்கு..

நகர வாசலில் காலணிகள் அறுந்து போக..அதைத் தைக்க
அங்கிருந்த செருப்பு தைக்கும் தொழிலாளியிடம்
செல்ல..காலணி தைக்கும் போது அது அவன் கையைக் குத்தி
இரணமாக்கி விட்டது..கீழே கிடந்த களிமண்ணால்
காயத்தைக் குணமாக்கினார் மாற்கு..

அலெக்ஸாண்ட்ரியாவின் முதல் கனி அந்த cobbler..

இரண்டு வருஷத்துக்குள்
பட்டணத்தில் அநேகர் மனம் திரும்ப..அங்குள்ள பெரிய
அத்திமரத்தின் கீழே சந்திரனை வணங்கிக் கொண்டிருந்த
ஜனங்கள் பிடித்தார்கள் மாற்குவை..

நிரூபி உன் இயேசுவை..

சரித்திரம் சொல்கிறது..
மாற்கு ஜெபித்தார்..
பகல் இரவானது..நிலவு நடுவானில் நின்று ஜனங்களிடம்
பேசியது..நான் ஒரு சிருஷ்டி..தேவனல்ல..
இந்த மாற்குவின் இயேசுவே சிருஷ்டிகர்..
அவரையே தொழுது கொள்ளுங்கள்..
மிகப் புகழ்பெற்ற அந்த அத்திமரம் வேரோடு சாய்ந்தது..

ஆனால் தேவனிடம் திரும்ப வேண்டிய கூட்டம்..
மாற்குவைப் பிடித்து குதிரை வாலோடு இறுகக் கட்டி
குதிரையை அடித்து ஓட விட்டது..நாள்முழுவதும்
அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தில்..

இரவானது..
சிறையில் அடைபட்ட மாற்குவை சந்திக்க இயேசு
வந்தார்..திடப்படுத்தினார்..

அடுத்த நாள் அதே போல குதிரை வாலில் கட்டப்பட்ட
மாற்கு தெருத்தெருவாய் உடல் கந்தல் கந்தலாய்ப்
போகுமட்டும் இழுத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்..

எஞ்சியிருந்த சரீரத்தின் பகுதிகளை எடுத்துப் புதைத்தனர்
அங்குள்ள சீஷர்கள்..

தகப்பனே..
இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்ற
வாக்குத்தத்தம்..
எங்களுக்கு அற்புதங்களைச் செய்து..எங்கள் காரியங்களை
வாய்க்கப்பண்ணி..
விருப்பங்களை நிறைவேற்ற அல்ல..

"உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் இப்படியே
துன்பப்படுத்தினார்களே"என்பது போல..
அன்று நடந்தது இன்றும் நடக்கும் என்ற உண்மையை நம்ப..
கிரகிக்க..உள்வாங்கிக் கொள்ள..
ஆயத்தமாகிக்கொள்ள எங்களுக்கு உதவி செய்யும்,
பெலப்படுத்தும்..
ஆமென்.

CHAPTER-14

ஈட்டியால் குத்தப்பட்ட தோமா

CHAPTER-14

அப்போஸ்தலனாகிய தோமா

"நம்பிக்கையில்லா தோமா" என்று கிறிஸ்தவர்களின் வழக்கச் சொல்லாய் மாறிப்போனவன் தான்..

ஆனால் "என் ஆண்டவரே என் தேவனே" என்று உயிர்த்தெழுந்த இயேசுவின் கரங்களில் தன்னைப் புதைத்துக் கொண்ட தோமா அல்லவா..

"இந்து தேசம் முதல்" என்ற பெயர் வேதத்தில் பொறிக்கப்பட்ட இந்த தேசம் பெற்ற பெரிய பாக்கியமல்லவா, தோமா இந்த மண்ணுக்கு வந்தது ?

இந்தியக் கிறிஸ்தவன் மறக்க முடியாத தோமா..

முதலில் பார்த்தியர், பெரிசியர் மத்தியில் ஊழியம் செய்த தோமா..பின்பு வந்தது இந்தியாவின் பஞ்சாபுக்கு.. (அதனால் தான் வட இந்திய மாநிலங்களில் அதிக அளவு எழுப்புதல் பஞ்சாபிலோ !)

பிறகு மறுபடியும் பாலஸ்தினா போய் விட்டுத் திரும்பியது..தென் இந்தியாவின் கேரளாவுக்கும் தமிழகத்துக்கும்..

மற்ற வரலாறு தென்னிந்தியக் கிறிஸ்தவர்கள் அறியாதது அல்லவே !

அப்போஸ்தலனின் பாதம் படப் பாக்கியம் பெற்ற என் இந்தியா..

St.Thomas Mount என்ற பரங்கிமலையில் ஈட்டியால் குத்தப்பட்டு..பிறகு
எரியும் சூளையில் தூக்கி எறியப்பட்டு..
இரத்த சாட்சியான தோமா..

"ஆபேலின் இரத்தம் முதல் பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரை மட்டுமல்ல.." (லூக் 11:50)

யோவான் ஸ்நானகனின் இரத்தம் முதல் அதிக நன்மையானவைகளை நித்திய நித்தியமாய்ப் பேசும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வரை மட்டுமல்ல..(எபி12:24)

பரங்கி மலையின் குகையிலே ஜெப நிலையில் நின்ற தோமா சிந்திய இரத்தம் முதல்..

"உந்தன் சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே" என்ற பக்தனின் ஏக்கம் இன்று வரை கூவுகிறதினால் தானோ என்னவோ தென்னிந்தியாவில் இவ்வளவு பெரிய கிறிஸ்தவ சமுதாயம் !!

இன்றைய தலைமுறை சபை.. தான் கடந்து வந்த பூர்வ பாதைகளைத் திரும்பிப் பாராதோ ?

சவுலுக்காகவும் யோனத்தானுக்காகவும் புலம்பல் பாடினானே தாவீது..
"கில்போவா மலைகளே!
உங்கள் மேல் பனியும் மழையும் பெய்யாமல் போவதாக..என்று!!
(2 சாமு 1:17-27)

ஆனால்..எங்கள் பரங்கிமலையே..
இந்தியாவின் குமாரரும் குமாரத்திகளுமாகிய எங்களுக்கு இரட்சிப்பென்னும் இரத்தாம்பரத்தை சிறப்பாய் உடுப்பித்து..எங்கள் மேல் பரிசுத்த அலங்கார ஆபரணங்களைத் தரிப்பிக்கத் தன் இரத்தத்தை உன் மேல் ஊற்றிக் கொடுத்த அப்போஸ்தலனை இன்றைய சபை மறக்குமானால் அதின் வலது கை தன் தொழிலை மறப்பதாக ! (சங் 137:5,6)

தேவனே..
எங்கள் ஜீவனோடு எங்கள் இரத்தமும் உம்மை நோக்கிக் கூப்பிடுவதாக..
ஆமென்.

(கிறிஸ்துவின் சிலுவையை நான் தள்ளி வைப்பதில்லை - Conrad Koch)

CHAPTER-15

தலைகீழாக
சிலுவையில் பேதுரு

CHAPTER-15

" சீமோன் பேதுரு "

"சீமோனே நீ பாக்கியவான்.
நீ பேதுருவாய் இருக்கிறாய்
இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்
பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை..
(மத் 16:17,18) என்று இயேசுவின் வாயாலேயே
வாக்குத்தத்தம் பெற்ற பேதுரு..

எதிலும் வித்தியாசமானவன்..

தண்ணீரைத் தரையைப் போல மிதித்து நடப்பான்.
ஆடையின்றி இருந்தால் கடலிலும் குதித்து விடுவான்..

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று
இயேசுவைச் சொல்லி..
"சீமோனே நீ பாக்கியவான்"
என்று பாராட்டு பெறுவான்..
"நீர் பாடுபடக்கூடாதே"
என்று இயேசுவைக் கடிந்து கொண்டு அவரிடம் "எனக்குப்
பின்னாகப் போ சாத்தானே"என்று அவரால் குட்டப்படவும்
செய்வான்..

"காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றுவேன்" என்பான்..
ஒரே இரவில் ஒரு வேலைக்காரிக்குப் பயந்து அவரை
அறியேன் என்று சபிக்கவும் சத்தியம் செய்யவும் தயங்க
மாட்டான்.

ஆனால் எல்லாம் பெந்தேகோஸ்தே வரையில் தான்..

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்
பெற்ற பேதுரு பிரசிங்கிக்க நின்றபோது ஒரு
Mass Revival
Mass Conversion &
Mass Baptism..
ஆயிரங்களில்..

அது அழகு வாசல் சப்பாணியாகட்டும்..
அல்லது பக்கவாத ஐநேயாவாகட்டும்..
அல்லது செத்துப் போன
தபீத்தாவாகவே இருக்கட்டும்..

ஒரே ஒரு வார்த்தை தான்.."எழுந்திரு"என்றால் அவர்கள்
எழுந்தே ஆக வேண்டும்..

அவன் மேலிருந்த அக்கினியின் அனல் அப்படி..

அவன் நிழல் பட்டு சுகம் பெற நோயாளிகள்
தவமிருந்தார்கள்..
தொட்டவருக்கும் பட்டவருக்கும் சுகம் நிச்சயம் !

சபையின் தூணாய் நின்ற பேதுரு..
யூதருக்கும்
புற ஜாதிகளுக்கும் அப்போஸ்தலன்..

உயிர்த்தெழுந்த இயேசு கேட்டாரே..
"சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னை
நேசிக்கிறாயா"என்று..

சரித்திர ஆசிரியர்கள் சொல்கிறார்கள்..
திரும்பி நோக்கிய இயேசுவின் ஊடுருவிய கண்களும் கேட்ட
கேள்வியும் அவன் இருதயத்தை உடைக்க..தன்
கடைசிக்காலம் வரை அவரை மறுதலித்ததை நினைத்து
அழுது அழுது அவன் முகத்தில் கண்ணீர் வழிந்த இடம்
பள்ளம் விழுந்து காணப்பட்டதாம்..

காலங்கள் கடந்தது..
"சீமோனே..சுளகினால் புடைக்கிறது போல சாத்தான்
உங்களைப் புடைக்க உத்தரவு கேட்டுக்கொண்டான்"என்ற
இயேசுவின் வார்த்தை நிஜமானது..

சீடர்கள் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை..

கடைசியாக வந்தது பேதுருவின் முறை..

நீரோ மன்னனின் காலம்..ரோம் நகரம் பற்றி எரிகிறது
சீஷர்கள் வயதான பேதுருவை தப்புவிக்க நகருக்கு வெளியே
பத்திரமாய் அனுப்பி வைக்க..

நகர வாசலை நெருங்கிய பேதுருவை எதிர் கொண்டுவருகிறார்..இயேசு..

முன்னொரு காலத்தில் "ஆண்டவரே நீரேயானால்.." என்று சொன்னானே..
அதே வார்த்தை..
"ஆண்டவரே நீரேயானால் இப்போது எங்கே போகிறீர்?

"மறுபடியும் சிலுவையில் அறையப்படப் போகிறேன்"
என்று பதில் வர..
தன் இடத்தில் இயேசு அறையப்படப் போகிறார் எனப் புரிந்து கொண்ட பேதுரு..நகரத்துக்குத் திரும்ப..பிடிபட்டான்..

எதிலும் வித்தியாசமானவன் அல்லவா?
மரணத்திலும் வித்தியாசமாய் மரிக்க விரும்பினான்..

"நான் என் இரட்சகரைப் போல அறையப்படத் தகுதியற்றவன்..என்னைத் தலைகீழாய் அறையுங்கள்"என்றான்.

"சீமோனே நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்..வேறொருவன் உன் அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான்" என்ற இயேசுவின் தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறியது..

பரிசுத்த தகப்பனே..
அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளின் அஸ்திபாரத்தில் கட்டப்பட்ட சபை அல்லவா?

ஆதிநிலை ஏகிடுவோமே என்று பாடுகிறோமே..
ஆதிநிலை ஆசீர்வாதத்திலும் அபிஷேகத்திலும் மட்டுமல்ல..
அவசியப்பட்டால் மரணத்திலும் அமையட்டுமே..

"எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயா?"
(யோ 13:38) என்று நீர் பேதுருவிடம் கேட்ட உம்முடைய அதே குரல் இறுதி வரை எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருப்பதாக..!

ஆமென்.

CHAPTER-16

தூக்கிலிடப்பட்ட லூக்கா

CHAPTER-16

லூக்கா

"பிரியமான வைத்தியனாகிய லூக்கா" (கொலோ 4:14)

லூக்கா சுவிசேஷத்தையும் அப்போஸ்தல நடபடிகளையும் எழுதிய வேதத்திலுள்ள ஒரே புறஜாதி எழுத்தாளர்..

பிறப்பிடம் :
சிரியாவிலுள்ள அந்தியோக்கியா

இனம் :
கிரேக்கன்

படிப்பு :
மருத்துவம்

பொழுதுபோக்கு :
ஓவியம் வரைதல்

குடும்பம் :
மணமாகாதவர்

இரட்சிப்பு :
அப்.பவுல் மூலம் மனம் மாறியவர் என்று கருத்து

ஆரம்ப ஊழியம்:
மக்கெதோனியாவில் 7ஆண்டுகள்

மிஷினரி ஊழியம் :
பவுலின் மிஷினரி பயணங்களில் உடன் சென்றது

இறுதி வருடங்கள் :
பவுல் கைது செய்யப்பட்டு ரோமாபுரிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது பவுலின் மரணம் வரை உடனிருந்து பராமரித்தவர் பவுலின் வழிநடத்துதலின் பேரில் அவருடன் இருந்த நாட்களில் லூக்கா சுவிசேஷமும் அப்போஸ்தல நடபடிகளும் எழுதியதாக வரலாறு..

பிறகு இத்தாலி,தல்மாத்தியா, மற்றும் அகாயாவில் ஊழியம்

மரணம் :
கடைசியாக கிரீஸூக்குத் திரும்பியவர் அகாயாவில் விக்கிரக ஆராதனை பூசாரிகளால் 84 வயதில் ஒரு ஒலிவ மரத்தில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார்

நேச தகப்பனே..
வேதத்திலே பிரியமானவன் என்றும் மிகவும் பிரியமானவன் என்றும் அழைக்கப்பட்ட சிலர் உண்டே..

"இவர் என் நேச குமாரன்..
இவரில் நான் மிகவும் பிரியமாயிருக்கிறேன்" என்று நீர் உம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி கொடுத்தீரே..

ஏனோக்கு தான் எடுத்துக் கொள்ளப்படுமுன்னே தேவனுக்குப் பிரியமானவன் என்று சாட்சி பெற்றானே!

இவ்வுலக ஓட்டத்தை முடித்து நாங்கள் எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் "நீ எனக்கு மிகவும் பிரியமானவன்" என்ற சாட்சியோடு வாழ்ந்து முடிக்க கிருபை தாரும்..

ஆமென்.

CHAPTER-17

கல்லெறியப்பட்ட பர்னபா

CHAPTER-17

" பர்னபா "

இவரது இயற்பெயர் "யோசே"எனப்பட்டாலும்..
அப்போஸ்தலரால்
"ஆறுதலின் மகன்" என்று அர்த்தம் கொள்ளும் பர்னபா என்று மறுபேரிடப்பட்டவர்..

இது நமக்கு வேறொரு காரியத்தை நினைவூட்டுகிறதோ ?

பழைய ஏற்பாட்டில் நோவா பிறந்த போது..
அவன் தகப்பனாகிய லாமேக்கு அவனுக்கு..

"கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும்
நம்முடைய கைகளின் பிரயாசத்திலும்
'இவன் நம்மைத் தேற்றுவான்' என்று சொல்லி அவனுக்கு நோவா என்று பேரிட்டான்"
(ஆதி 2:28,29)

இருக்கிறவன் எவனும் முன்னமே பேரிடப்பட்டிருக்கிறான் என்று சொன்னபடி..
அது தேவனாகிய கர்த்தராலேயே பேரிடப்பட்ட ஈசாக்காகட்டும்..
சிம்சோனாகட்டும் அல்லது
யோவானாய் இருக்கட்டும்..
அல்லது இயேசு கிறிஸ்துவாலேயே பெயர் மாற்றப்பட்ட பேதுருவும்
இடிமுழக்கத்தின் பிள்ளைகள் என்று சொல்லப்படும் பொவனர்கேஸாகவே இருக்கட்டும்..

ஒரு மனிதனே தன் பிள்ளைக்கு பெரிய எதிர்பார்ப்போடு கூடிய அர்த்தத்தோடு பெயர் வைப்பான் என்றால்..

கர்த்தர் ஒரு மனிதனுக்குப் பேரிடும் போது எவ்வளவு எதிர்பார்ப்போடு வைக்கிறார்!

கர்த்தருக்குள் உன் நம்பிக்கை வீண்போகாது என்பது எவ்வளவு உண்மையோ..அவ்வளவு
அவர் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கை அல்லவா!

ஆறுதலின் மகனாகிய பர்னபாவின் மேல் அப்போஸ்தலர்கள் வைத்த நம்பிக்கை பொய்த்துப் போகவில்லை..

தன் நிலபுல உடைமைகள் எல்லாவற்றையும் விற்று அவர்கள் பாதத்தில் கொண்டு வைத்தான் அந்த சீப்புருவாசியாகிய லேவியனான பர்னபா..

ஈஸ்டன் என்பவர் தன் வேதாகமக அகராதியில் சொல்கிறார்.. பர்னபாவும் பவுலும் கமாலியேலின் கலாசாலையிலே ஒன்றாகப் படித்தார்கள் என்று..

பவுலின் மனம் திரும்புதலுக்குப்பின் பயந்திருந்த சீஷர்களுக்கு தைரியமாய் பவுலை அறிமுகப்படுத்திய பர்னபா..பின்னர் அப்போஸ்தலரால் அந்தியோக்கியாவுக்கு அனுப்பப்படுகிறார்..

அதன் பின் அவரது ஊழியம் அப்போஸ்தல நடபடிகளிலிருந்து நாம் அறிந்ததே..

அது தன் மைத்துனர் யோவான் மாற்குவோடு அந்தியோக்கியாவில் செய்த ஊழியமாகட்டும்..
அல்லது தர்சுவுக்குத் திரும்பிவிட்ட பவுலைக் கவனமாய்த் தேடி அந்தியோக்கியாவுக்கு
கொண்டு வந்த காரியமாகட்டும்..

பின்னர் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி பவுலோடு சேர்ந்து அனுப்பப்பட்ட முதல் மிஷினரி பயணத்தில் சீப்புரு தீவில் ஆரம்பித்து..லீஸ்திரா லிக்கவோனியா சென்று மீண்டும் எருசலேம் திரும்பியதாகட்டும்..
அல்லது

இரண்டாம் மிஷினரி பயணத்தில் மாற்கு காரணமாக பவலுடன் ஏற்பட்ட பிரிவாகட்டும்..
எல்லாம் நாம் அறிந்ததே..

மாற்குவை அழைத்துக் கொண்டு சீப்புரு தீவு வந்த பர்னபா தன் பின்னாள் ஊழியங்களை சீப்புரு தீவு மற்றும் சீரியா பகுதிகளில் தொடர்ந்ததாக வரலாறு..

கடைசியாக..
சிரியா மற்றும் சாலமியில் அவருடைய ஊழியம் ஏற்படுத்திய வளர்ச்சி மற்றும் தாக்கத்தால் பொறாமை கொண்ட யூதர்களுடன் ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாய் மாற..

யூதர்கள் பர்னபாவை ஜெப ஆலயத்துக்கு வெளியில் இழுத்துச் சென்று கடும் சித்ரவதைப்படுத்தி கல்லெறிந்து கொல்கின்றனர்..

இவற்றையெல்லாம் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த மாற்கு அவரது உடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்தார் என்கிறது சரித்திரம்..

பரலோகத் தகப்பனே..
"நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தேன்..
நீ என்னுடையவன்"
என்றீரே!

எங்கள் மேல் எவ்வளவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வைத்து எங்களைப் பெயரிட்டு அழைத்தீர்!

உமது எதிர்பார்ப்பின் எல்லைக் கோட்டுக்கு எப்படியாவது வந்து சேர்ந்து விட கிருபை தாரும்..

ஆறுதலின் மகனாகிய பர்னபா அப்போஸ்தலருக்கு மட்டுமல்ல..உம்முடைய உள்ளத்துக்கும் ஆறுதல் செய்தாரே..

எங்கள் முகத்தை நீர் பார்க்கும் போதெல்லாம் உம் இருதயம் மகிழ கிருபை தாரும்..ஆமென்.

(நான் கிறிஸ்துவின் கோதுமை மணி..இன்று வனவிலங்குகளுக்கு இரையாகப் போகும் நான் பரிசுத்த அப்பமாய்க் காணப்படுவேனாக..-IGNATIUS OF ANTIOCH)

CHAPTER-18

நாடு கடத்தப்பட்ட யோவான்

CHAPTER-18

யோவான்

இயேசுவுக்கு அன்பான சீஷன்..
இராப்போஜனத்தில்
அவர் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த யோவான்..

ஆதிமுதல் இருந்ததும்..
அவன் கேட்டதும்..
அவன் கண்களினால் நோக்கிப் பார்த்ததும்..
தன் கைகளால் தொட்டுப் பார்த்ததுமான ஜீவ
வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை
வித்தியாசமாய் எழுதிய யோவான்..

பத்மு தீவிலே நாடு கடத்தப்பட்டு..இயேசு
கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்துக்கும்
பொறுமைக்கும் உடன் பங்காளனாகி..

ஒரு கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளாகி..
பரலோகத்துக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும்
வாக்குக்கு எட்டாததுமான வார்த்தைகளைக் கேட்டும்
கண்டும்..

சீக்கிரத்தில் சம்பவிக்கப் போகிறவைகளைத் தம்
ஊழியக்காரருக்கு வெளிப்படுத்தும் பொருட்டு..
தேவன் இயேசுவுக்கு ஒப்புவித்ததை
தூதன் மூலம் பெற்று..
நமக்கு வெளிப்படுத்தின சுவிசேஷத்தைத் தந்த திவ்ய
வாசகனாகிய யோவான்..

வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் ஏழு
சபைகளாகிய சிமிர்னா..
பிலதெல்பியா..
லவோதேக்கியா, தியத்தீரா, பெர்கமு, சர்தை மற்றும் எபேசு
சபைகளை நிறுவி..கண்காணித்து வந்த யோவான்..

குறிப்புகள் சொல்கிறது..அவன் எபேசு சபையில் இருந்த
காலத்தில் ரோம ஆட்சியாளர்களால் பிடிக்கப்பட்டு..

ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே சித்திரவதையாக ஒரு பெரிய பாத்திரத்தில் கொதிக்கும் எண்ணெயில் பொரித்தெடுக்கப்பட போடப்பட்டான்..

ஆனால் அவனைக் கொண்டு செய்து முடிக்கப்பட வேண்டிய ஒரு பெரிய காரியம் தேவனுக்கு மீதியிருந்தது..

தண்ணீரில் முழுகி எழுந்தவனைப் போல..
கொதிக்கும் எண்ணெயிலிருந்து கருகின வாடை எதுவுமின்றி எழுந்து வந்தான் யோவான்..

சரித்திரம் சொல்கிறது..
டொமிஷியன் என்ற ராயனால் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டான் யோவான் என்று..

ஜாண் பன்னியன் பெட்போர்டு சிறையில் அடைக்கப்படாதிருந்தால் அவரது நிகரில்லா
" மோட்சப்பிரயாணம் "
நமக்கு கிடைத்திருக்குமோ?

தேவன் யோவானை பத்மு தீவுக்கு கொண்டு சென்ற நோக்கத்தை வெளிப்படுத்தின விசேஷமாக நமக்கு வெளிப்படுத்தினார்..

நெர்வா ராயன் காலத்தில் (கிபி96-98) விடுதலை செய்யப்பட்டு சின்ன ஆசியா எனப்படும் ஏஷியா மைனரில் அங்குள்ள சபைகளை உற்சாகப்படுத்தி..
உறுதிப்படுத்தி.. பயிற்றுவித்து..
தன் அந்திம காலத்திலும் ஊழியம் செய்த யோவான்..

மிக நம்பகமான ஒரு செய்திக் குறிப்பு மிக அழகான ஒரு சம்பவத்தை வர்ணிக்கிறது..

ஏறக்குறைய நூறு வயதான யோவான்..

ஒரு நாள்..ஏஷியா மைனரின் சபை ஆராதனையில் ஒன்றில் தேவ வார்த்தை அக்கினியாய் அவரிடமிருந்து வெளிப்படுகிறது..

சபையின் பெரிய கூட்டத்தில் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஒரு வாலிபன் மேல் வயதான யோவானின் கண்கள் பதிகிறது.

பிரசங்க முடிவில் அந்த வாலிபனை முழு சபை முன்னிலையில் முன்பாக அழைத்து..அந்த சபையின் மூப்பரைப் பார்த்து யோவான் சொன்னார்..

"இன்று தேவனுக்கு முன்பாகவும் சபையார் சாட்சியாகவும் இந்த வாலிபனை உம் கண்காணிப்புக்கு ஒப்புவிக்கிறேன்.. அவனைக் கர்த்தருக்குள் வளர்ப்பது உமது உத்திரவாதம்.."

"உம் வார்த்தையை ஏற்கிறேன் " என்றார் மூப்பர்.

தேவ சித்தமானால் என்றாவது ஒரு நாள் திரும்பி வருவேன் என்று அங்கிருந்து கடந்து சென்றார் யோவான்..

அந்த மூப்பர் அந்த வாலிபனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று தன்னோடு வைத்துப் பராமரிக்க..அவனும் கர்த்தருக்குள் வளர்ந்து ஞானஸ்நானம் பெற்று சபையில் அங்கமானான்..

நாட்கள் கடந்தது..
விசுவாசத்தில் தானே இருக்கிறான் என்று அந்த மூப்பரின் கண்காணிப்பு சற்று விலக..அந்த வாலிபன் வழிவிலக ஆரம்பித்தான்..

வேண்டாத நண்பர்கள்..
தவறான வாழ்க்கை..
கடைசியில் ஒரு நாள் ஊரறிந்த கொள்ளைக்கூட்டத்துக்குத் தலைவனானான்..

சில காலம் சென்று..
யோவான் அந்த சபையை சந்திக்க வந்தார்..
பல காரியங்களை அந்த மூப்பரோடு பகிர்ந்து கொண்டவர்..திடீரென ஞாபகம் வர ..கேட்டார்..
"நான் உம்மிடம் கொடுத்து வைத்துப் போன அந்த விலையேறப் பெற்ற பொருள் எங்கே..?

விபரம் புரியாமல் அந்த மூப்பர் யோவானைப் பார்க்க..யோவான் நேரடியாகவே கேட்டார்..
"நான் உம் பொறுப்பில் விட்டுச் சென்ற அந்த வாலிபன் எங்கே ?"

"அவன் இறந்து விட்டான்" என்று அழ ஆரம்பித்த மூப்பர் எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்ல..

கோபம் வந்து விட்டது யோவானுக்கு..
"நீர் எவ்வளவு பொறுப்பானவர் என்று நிரூபித்துவிட்டீர்"
என்று கடிந்து கொண்டு குதிரை மேல் சேணம் வைத்து
தனிமனிதனாக அந்தக் கொள்ளைக்கூட்ட தலைவன் இருந்த
மலை நோக்கிச் சென்றார் யோவான்...

மலையடிவாரத்தில் அவனது காவலர்கள் தடுத்து நிறுத்த..
"என்னை உங்கள் தலைவனிடம் கொண்டு
செல்லுங்கள்"என்று உறுதியான குரலில் சொன்ன
யோவானை..

தலைவன் முன் கொண்டு நிறுத்தினர்..

யோவானை அடையாளம் கண்டு கொண்ட தலைவன் ஓட
ஆரம்பித்தான்..

யோவான் அவன் பின்னே கைகளை விரித்தவராய்..
"மகனே ஓடாதே..
இப்போதும் நம்பிக்கை உண்டு..இயேசு இன்னும் உன்னை
நேசிக்கிறார்..
திரும்பி வா.. பயப்படாதே
கிறிஸ்து நமக்காக மரித்தது போல நான் உனக்காக மரிக்கவும்
தயாராக இருக்கிறேன்..
மகனே திரும்பி வா..
என்று கதற..

ஓடியவன் திரும்பி வந்து தகப்பனைப் போன்ற யோவானின்
கால்களைக் கட்டிக் கொண்டான்..

கையிலிருந்த குறுவாள் கீழே விழுந்தது..
கண்ணீரோடு சொன்னான்..

மன்னியும் தகப்பனே!
சபைக்குத் திரும்பிய வாலிபன் சபையார் முன்பாக அழ..ஒரு
கெட்ட குமாரனின் கதை நிஜமானது..

மரித்தவன் உயிர்த்தான்..
காணமல் போனவன் திரும்பவும் காணப்பட்டான்..
சபை மகிழ்ந்து களிகூர்ந்தது..

தகப்பனே..
இது போன்ற உம்முடைய சாட்சிகள் எங்கள் இருதயத்தை அசைக்காதோ?

"வாலிபரே! நீங்கள் உலகத்தை ஜெயித்ததினால் எழுதுகிறேன்" என்றாரே..வாலிபரின் கும்மாளக் கூடமாய் போய்விட்ட இன்றைய சபை, நூறு வயதான யோவானைப் போன்றவரின் சாட்சியால் உயிர் பெறாதோ?

"யூதா பால சிங்கம் அல்லவா?
சிங்கம் போலவும் கிழச்சிங்கம் போலவும் மடங்கிப்படுத்துக் கொண்டிருக்கிற எங்கள் வாலிபரையும் சபையையும் எழுப்பி விடமாட்டீரோ ?
(ஆதி49:9 / எண்24:9)

கதறுகிறோம்..
செய்வீராக!
ஆமென்.

CHAPTER-19

பட்டயத்தால் வெட்டப்பட்ட பவுல்

CHAPTER-19

பவுல்

கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாகிய "பவுல்"

(பிலோமோன் 1)

இந்த..
அப்போஸ்தலருக்கு
அப்போஸ்தலனும்..
பரிசுத்தவான்களுக்கு
பரிசுத்தவானும்..
தன் எழுத்துக்களாலே
எழுப்புதலை எழுப்பினவனும்..

கிறிஸ்துவின் அச்சு அசலுமான..பவுலைப்பற்றி நாலு வரி எழுதத் துணிய பேனாமுனை நகர மறுக்கிறது..

"இவன் ஒரு கொள்ளை நோய்..இவன் பூச்சக்கரத்தின் கலகம்..இவன் உலகத்தைக் கலக்குகிறவன்.."

தடுக்க முடியாத அவனது வேகம் கண்டு..
அவன் எதிரிகளின் தாங்க முடியாத எரிச்சல் இது..

"இயேசுவையும் அறிவேன் பவுலையும் அறிவேன்.."

- அவனால் கலங்கடிக்கப்பட்ட அசுத்த ஆவிகளின் கதறல் இது..

"அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரம்..அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்"(அப்9:15,16)

- அவன் மேல் வைத்த நம்பிக்கையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே தந்த சாட்சி இது..

தம்மைப் பற்றித் தாழ்மையாய் இந்தப் பவுலே சொன்ன அவரது சொந்த வார்த்தைகளினூடே அவரைப் பார்ப்பதே அவருக்கு மரியாதையும் நமக்குப் பாதுகாப்புமாம்..

சொல்கிறார்...

"நான் பாவிகளில் பிரதான பாவி..
அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன்..
அப்போஸ்தலன் என்று பேர் பெறுவதற்கு பாத்திரன் அல்ல.."

"மரணத்துக்குக் குறிக்கப்பட்டவன்..
உலகத்துக்கு வேடிக்கையானவன்..
கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரன்.."

பசியுள்ளவன்..
தாகமுள்ளவன்..
நிர்வாணி..குட்டுண்டவன்..தங்க இடமில்லாதவன்..

உலகத்தின் குப்பையும்
துடைத்துப் போடுகிற அழுக்கைப் போன்றவன்..

ஆனாலும் தான் பட்ட பாடுகளையும் தன் கடிதத்தில் இப்படித்தான் பதிந்து வைத்தான்..

"நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்..
அதிகமாய் அடிபட்டவன்..அதிகமாய் காவல்களில் வைக்கப்பட்டவன்.."

"அநேகந்தரம் மரண அவியில் அகப்பட்டவன்..
39 அடியாக 5 முறை அடிபட்டவன்..
3 முறை மிலாறுகளால் அடிபட்டவன்.."

"ஒரு முறை கல்லெறியப்பட்டவன்..
மூன்று முறை கப்பல் சேதத்தில் மாட்டிக் கொண்டவன்.."

"அநேகந்தரம் பிரயாணம் பண்ணினவன்..
ஆறுகளால்..கள்ளரால்..
சுயஜனங்களால்..அந்நிய ஜனங்களால் என்னென்ன மோசம் உண்டோ எல்லாம் அனுபவித்துத் தீர்ந்தவன்..

2 கொரிந்தியர் 11:23-29ல்
இன்னும் நீண்டு கொண்டே போகும் பட்டியலில்
அவன் இன்னும் படாத பாடு என்ன?

வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு காலங்களில்..
வெவ்வேறு தேவ மனிதர்கள் இவன் வாழ்க்கையை
வரைந்து வைத்திருந்தாலும்..

"எழுப்புதல் தாமதிப்பது ஏன்"என்று எழுப்புதலுக்கு
இலக்கணம் எழுதிய லியானோர்ட் ரேவன்ஹில் சொல்கிறார்..

"பவுல் கிறிஸ்துவின் BRAND.
பாடுகளே-அவன் அடையாளம்.."

"ரோமர் எட்டாம் அதிகாரத்தை சற்று
புரட்டிப் பாருங்கள்..

பஞ்சம்..நாசமோசம்..
நிர்வாணம்..பட்டயம்..
உபத்திரவம்..துன்பம்..
வியாகுலம்!
இத்தனை பாடுகளையும் இவன் எப்படித்
தான் சகித்தானோ பாவம் !

தேவனோடும் மனிதனோடும் முழு யுத்தத்தில்
இறங்கிய பாதாளத்தின் வல்லமைக்கு மாறு
கொண்டு வீறு கொண்டான்..
இந்தத் தலை சாய்க்க இடமில்லா நாடோடி..

பிசாசை நேர் கொண்டு எதிர் நின்றான்..
இந்தப் பிரசங்க மன்னன்..
சட்டமில்லா மல்யுத்தம்..

பவுலை சற்று உற்றுப் பாருங்கள்..
இதோ வாடி..வதங்கி..
வெளுத்த முகம்..
காயத் தழும்பில்
கறுத்திட்ட சரீரம்..
கொல்லும் பசியில்
கூனிட்ட உடல்..

உபவாசம் போட்டு ஒடுங்கிய உருவம்..
ரோமைச் சவுக்குகளின் ஓங்கிய அடிகளில்
வீங்கிய சதைகள்..
கல்லெறி பட்டு கசங்கி சிற்றுடல்..

பட்டினி போட்டு ஒட்டிய வயிறு..
முப்பத்தாறு மணிநேரம் மத்திய தரைக்கடலில்
ஊறிச் சுருங்கி உருக்குலைந்த தோல்..

இத்தனையும் இணைத்துப் பாருங்கள்..
அடுத்து வந்த ஆபத்துகள் எத்தனை!
தனிமையின் துயரம்..
கூட்டிக் கொள்ளுங்கள்!

195 அடிகளையும்..
மும்முறை பெற்ற மிலாறு அடிகளையும்..கப்பல்
சேதங்களையும்..
கல்லெறிதலையும்..
பெற்ற சிறை வாசங்களையும்..

நேரிட்ட மரண அவதிகளையும் கூட்டிப்பார்த்தால்..
அப்பப்பா மூளை குழம்புகிறது..

ஆனால் பவுல் இதைக்குறித்து சொல்வதைக் கேளுங்கள்:
"அதி சீக்கிரத்தில் நீங்கும் நம்முடைய இலேசான
உபத்திரவம்.."

ஆம் அவனுக்கு அவைகள் அனைத்தும் இலேசானது தான் !

துன்பத்தைத் துச்சமென்பது இது தான்-மனமிருந்தால்
ஒப்புக் கொள்ளுங்கள் !

"நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
அச்சடையாளங்களை என் சரீரத்தில் தரித்துக்
கொண்டிருக்கிறேன்"
(கலா 6:17)

பவுலின் மீது கிறிஸ்துவுக்கிருந்த உரிமையை
உறுதிப்படுத்தும் வார்த்தைகளே இவை..
அவனது ஆவி.. ஆத்துமா..
சரீரம் அனைத்துமே கிறிஸ்துவினுடையதாகி விட்டன.."

தொடர்கிறார் ரேவன்ஹில்..

"பவுல்" - நரகமும் அவனை நன்கு அறியும்..

"இயேசுவை அறிவேன்
பவுலையும் அறிவேன்..
நீங்கள் யார் ?"

- பாதாளமும் பூலோகமும் சூட்டும் மிகப்பெரிய புகழாரம் இதுவே..

"இயேசுவும் பவுலும்" -என்ன ஒரு அற்புதமான இணைப்பு..
எதிரியே கூறும் நற்சாட்சி இது..

பவுல் இந்த சாட்சியைப் பெற்றது எப்படி?
பிசாசுகள் பவுலை அறிந்து வைத்தது எப்படி?

அவைகள் இவனைக் காயப்படுத்தினதா அல்லது இவன் அவைகளை அடித்து விரட்டினானா?
இந்த மனிதன் எப்படிப்பட்டவன் என்று சற்று பார்க்கலாமே!

தேவனும் பவுலும் இணைபிரியாதவர்கள்..
தேவ வெளிப்பாடு இவனது வாடிக்கை..
தூதர் கூட்டம் இவனது பணிவிடையாளர்கள்..

இவனது சுண்டு விரல் அசைந்தால் பூகம்பம் தான்..
இவன் கட்டளையிட..
குறி சொல்லும் ஆவி பதறிக் கொண்டு ஓடும்..

கொரிந்து பட்டணத்தின் கோர அசுத்தங்களை அழுக்கறக் கழுவி..
சாத்தானின் கோட்டை வாசலிலே சபையை நிறுவியவன்..

கொடூரமான ராயனின் குடும்பத்தில் நுழைந்து அங்கிருந்தும் ஆத்துமாக்களைக் கொள்ளை கொண்ட அசுரன்..

அரசர்களின் முன் நிற்பதில்
ஐயமில்லாதவன்..
ஏனெனில்..
"அகிரிப்பா ராஜாவே!

நான் இன்றைக்கு உமக்கு முன்பாக உத்தரவு சொல்லப்
போகிற படியினாலே என்னை பாக்கியவான் என்று
எண்ணுகிறேன்.."
என்றவனல்லவா அவன்!

உலகின் ஒப்பற்ற அறிவுக் களஞ்சியமாம் மார்ஸ் மேடை
நோக்கி உயிர்த்தெழுதலின் உண்மையைப் புயலென
வீசி..அறிஞரின் அறிவினை
தவிடு பொடியாக்கினவன்!

சுருங்கச் சொன்னால்..
பவுல் உயிரோடு இருந்ததுவரை பாதாளத்துக்கு நிம்மதியே
இல்லை..பாவம்!

பவுல் சொல்கிறான்..
"பிழைத்திருக்கிறேன்..
இனி நானல்ல கிறிஸ்துவே" என்று..

வாழ்நாளெல்லாம் அவன் சாத்தானின் வல்லமைகளோடு
போராடிக் கொண்டே இருந்தான்..

தன் வாழ்நாளின் இறுதிக்கட்டத்திலும் "நல்ல
போராட்டத்தைப் போராடினேன்" என்பது தான் அவனது
பெருமிதம்!

இந்த வெற்றி முழக்கத்துக்குப் பிசாசுகளும் "ஆமென்"
சொல்லியிருக்கும்..
ஏனெனில் பவுல் அவைகளிடம் பட்டதை விட அவைகள்
அவனிடம் பட்ட பாடுகள் தான் ஏராளம்!

ஆம்..பவுல் நரகத்திலும் நன்கு அறியப்பட்டவன்!

"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும்
இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள்"
என்றானே..
(பிலி 4:9)

நகலிலிருந்து நகலெடுப்பது நல்லதல்ல..
ஆனால் பவுலைக் காப்பியடிப்பது தவறே அல்ல..காரணம்..

அவன் சமூலமாய் சரணடைந்தவன்..
பரிபூரணமாய் பரிசுத்தப்படுத்தப்பட்டவன்

பூரண திருப்தி அடைந்தவன்..

ஆம்..கிறிஸ்துவில் முழுமையானவன் !

பொல்லாத ஆவி "பவுலையும் அறிவேன்"என்று
சொன்னதைக் குறித்து ஆச்சரியப் படுகிறீர்களோ?

எனக்கென்னவோ இதில்
ஆச்சரியம் இல்லை..

உலகின் ஒப்பற்ற அறிவுக் களஞ்சியமாம் மார்ஸ் மேடை
நோக்கி உயிர்த்தெழுதலின் உண்மையைப் புயலென
வீசி..அறிஞரின் அறிவினை
தவிடு பொடியாக்கினவன்!

சுருங்கச் சொன்னால்..
பவுல் உயிரோடு இருந்ததுவரை பாதாளத்துக்கு நிம்மதியே
இல்லை..பாவம்!

பவுல் சொல்கிறான்..
"பிழைத்திருக்கிறேன்..
இனி நானல்ல கிறிஸ்துவே" என்று..

வாழ்நாளெல்லாம் அவன் சாத்தானின் வல்லமைகளோடு
போராடிக் கொண்டே இருந்தான்..

தன் வாழ்நாளின் இறுதிக்கட்டத்திலும் "நல்ல
போராட்டத்தைப் போராடினேன்" என்பது தான் அவனது
பெருமிதம்!

இந்த வெற்றி முழக்கத்துக்குப் பிசாசுகளும் "ஆமென்"
சொல்லியிருக்கும்..
ஏனெனில் பவுல் அவைகளிடம் பட்டதை விட அவைகள்
அவனிடம் பட்ட பாடுகள் தான் ஏராளம்!

ஆம்..பவுல் நரகத்திலும் நன்கு அறியப்பட்டவன்!

"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும்
இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள்"
என்றானே.. (பிலி 4:9)

நகலிலிருந்து நகலெடுப்பது நல்லதல்ல..
ஆனால் பவுலைக் காப்பியடிப்பது தவறே அல்ல..காரணம்..

அவன் சமூலமாய்
சரணடைந்தவன்..
பரிபூரணமாய் பரிசுத்தப்படுத்தப்பட்டவன்

பூரண திருப்தி அடைந்தவன்..

ஆம்..கிறிஸ்துவில் முழுமையானவன் !

பொல்லாத ஆவி "பவுலையும் அறிவேன்"என்று
சொன்னதைக் குறித்து ஆச்சரியப் படுகிறீர்களோ?

எனக்கென்னவோ இதில்
ஆச்சரியம் இல்லை..

மேலும் தொடர்கிறார் அவர்..

"பவுல்" - தேவ ராஜ்யத்தைக் கட்டினவன்

தமஸ்கு வீதியில் சவுல் ஒரு பிரசங்கியையோ அல்லது ஒரு
பிரசங்கத்தை மட்டும் கேட்டிருப்பானேயானால்..
மீண்டும் அவனைப் பற்றி நாம் கேட்டிருக்கவே மாட்டோம்..

ஆனால் அவனோ சந்தித்தது.. கிறிஸ்துவை..

அனல் கக்கும் இந்த மார்க்கவாதி..அங்கே கண்டது
அக்கினியால் அபிஷேகம் பண்ணும் அபிஷேக நாதனை..

விளைவு ?
சவுல் மாறினான்..
சமுதாயமே மாறிற்று !
- நன்மை நோக்கி..
(மீண்டும் ஒரு முறை இப்படிச் செய்ய மாட்டீரோ?)

நொறுங்குண்டவனாய்..இன்னும் ஒருபடி கீழிறங்கி
தேவனின் நேர்முகப் பரீட்சைக்கு அரேபியா பாலைவனம்
சென்றான்..

அவனது சுயம் எல்லாம் நொறுங்கியது அங்கே..
(இதைக் குறித்து விபரம் சொல்ல அவன் வாய் திறக்கவில்லை..)

பவுலின் வாழ்க்கை- அது விதிவிலக்கு வாழ்க்கை..

2 கொரி 11ஐ மீண்டும் படித்துப் பாருங்கள்..
தான் பட்ட பாடுகளை அங்கு அவன் பட்டியலிட வேண்டிய அவசியம் என்ன?
இரத்த சாட்சிகளோடு போட்டி போடவா?

அல்லது பரிசுத்தவான்களின் பெயரோடு தன் பெயரையும் தானே சேர்த்துக் கொள்ளவா?
கிஞ்சித்தும் இல்லை!

இவைகளின் அரிச்சுவடி அறியாதவன்..
கிறிஸ்துவுக்காக இவையெல்லாவற்றையும் குப்பையாய் எறிந்தவனாயிற்றே!

ஜெபத்திலும் அன் விதிவிலக்கு தான்..
ஜெபவீரன் துன்பம் கண்டு துவளாதவன்..

ஜெபிக்கிறவன் எலும்புகள் முறுக்கேறும்!
பெருமூச்சு வெளிப்படும்!
பலமும் பரிசுத்தமும் பெருகும்!
அக்கினிப் பிழம்பாய் எரிவான்-அசையாது நிற்பான்!

கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அவன் எழுதவில்லை..ஆனால் அதை வாழ்ந்தே காட்டிவிட்டான்!

அவன் தன்னை தேவனுக்கு விற்றுவிட்டவன்..
இதயத்துடிப்பும் எண்ணமும் நடையும் வாஞ்சையும் இயேசு இயேசு இயேசு..

ஆத்துமாக்களை விடுதலையாக்க ஆலயங்களில் அக்கினியைப் பற்ற வைத்தான் ...

அது எழுப்புதலிலோ கலகத்திலோ போய் முடிந்தது..சில வேளைகளில் இரண்டும்..
(நமக்கோ இரண்டும் கிடையாது)

கிறிஸ்துவில் இணைந்த பவுலைப் போல செயல் வேகம் இல்லை என்றாலும் சேவைத் தியாகத்திலாவது அவனைப் போலாக அவனை நிரப்பிய ஆவியானவர் நம்மையும் நிரப்புவது நிச்சயம் என்பதை சவாலாகக் கொள்ளுவோம்!

பவுல் மகிமையாய் வாழ்ந்தான்..
வெற்றியாய் மடிந்தான்!
தியாகத்திலும் பாடுகளிலும் தன்னைக் கிறிஸ்துவோடு இணைத்துக் கொண்டதே இதின் இரகசியம்..

நாமும் அப்படியே வாழ்ந்து மரிக்கலாம்-விரும்பினால்!

- LEONARD RAVENHILL

"பவுல்" - ரோம் நகர் காவல் கிடங்குகளில்..

"இந்த சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன் போலக் கட்டப்பட்டு துன்பத்தை அனுபவிக்கிறேன்.."
(2 தீமோ 2:9)

எருசலேமில் கைது செய்யப்பட்ட பவுல்..
கொண்டு போகப்பட்டது ரோம் நகருக்கு..ராயனுக்கு முன்பாக நிற்க..

ஆரம்பத்தில் சிறைக் கைதியாக இல்லாவிட்டாலும்..
விசாரணைக் கைதியாக வீட்டுக் காவலில் 2 வருடம் ஒரு ரோம சிப்பாயுடன் கட்டப்பட்டு 24×7
காவலில் இருந்த பவுல்..
மற்றவர்களை சந்தித்துப் பேச அனுமதிக்கப் படுகிறார்..

விசாரணை முடிந்து விடுவிக்கப்பட்டவர்..
சென்றது..தான் மிகவும் விரும்பிய ஸ்பெயின் நாட்டுக்கு..நான்காவது மிஷினரிப் பயணமாக..

அங்கிருந்து துரோவாவுக்கு சென்று தீத்துவை சந்தித்தவர்..பிலமோன் மற்றும் ஒநேசிமுவுடன் சில நாட்கள் சந்தோஷமாய் இருந்துவிட்டு..
எபேசுவுக்குச் சென்று தீமோத்தேயுவுடன் தங்குகிறார்..

இந்த விடுதலை அதிக நாட்கள் நீடிக்கவில்லை..

நீரோ காலத்தில் மறுபடியும் கைதுசெய்யப்பட்டு துரோவாவிலிருந்து ரோமுக்கு சங்கிலிகளால் கட்டி இழுத்து வரப்படுகிறார் பவுல்..

ரோமுக்குக் கொண்டு வரப்பட்ட பவுல் அடைக்கப்பட்டது மேமரின்ட்டைன் ஜெயில் என்ற பாதாளக் கிடங்கில்..

இன்று நம் காலத்து ஜெயில்களைப் போல் அல்ல அன்றைய ரோம சிறைச்சாலைகள்..

கேப்பிட்டோலின் குன்றுகள் என்ற மலை அடிவாரத்தில் கிமு 640-616 ல் அர்க்குஸ் மர்ஷியஸ் என்ற ரோம மன்னனால் கட்டப்பட்ட பாதாளக் கிடங்கு இது..

தரைக்குக் கீழே 12 அடி ஆழத்தில் தலைக்கு மேல் க்லோவா மேக்ஸிமா என்ற ரோம் நகரின் பாதாளச் சாக்கடை ஓட..அந்தப் பாதாளச் சாக்கடைக் குழாய்க்குக் கீழே 6.5 அடி உயரமும் 30×22 அடி அளவில் கட்டப்பட்ட இருண்ட..நாற்றம் எடுத்த..எப்போதும் ஈரமாகவே வைக்கப்பட்டிருக்கும் கோணல் மாணலான போனால் திரும்பி வர முடியாத மரணக் கிடங்கு..

தரையில் உள்ள சிறு துவாரம் மூலமாகக் கைதிகள் பாதாளச் சிறையில் தள்ளப்படுவார்கள்..

இங்கிருக்கும் இரும்புக் கதவு வழியாக டைபர் நதியில் செத்த கைதிகள் எறிந்து விடப்படுவதுண்டு..

பேதுருவும் பவுலும் இங்கே தான் வைக்கப்பட்டிருந்ததாக வரலாறு..

இங்கிருந்து தான் தன் கடைசி நிருபங்களை எழுதுகிறார் பவுல்..

கடைசியாக எழுதியது தீமோத்தேயுவுக்கு எழுதிய மிக அருமையான இரண்டாம் நிருபம்..

"நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்..நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.." (4:6)

மரணத்துக்கு சில மாதங்களுக்கு முன் எழுதப்பட்ட வரிகள் இவை..

டஞ்சன் ஜெயிலில் நாட்கள் நகர்கின்றன..

ஒரு நாள்..
ஜூன் மாத ஆரம்பமாய் இருக்கலாம் என்று சொல்கிறார்கள்..

சிறைக்கதவு திறக்கப் படுகிறது..
வெளியே கொண்டு வரப்படுகிறார் பவுல்..

கொலையாளிகள் முன் செல்ல..வயதான தேவ மனிதன்..நகரத்துக்கு வெளியே சங்கிலிகள் பிணைக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப் படுகிறார்..கொலைக் களத்துக்கு..

நகரத்துக்கு பல மைல்கள் தள்ளி..ஆஸ்ட்டியன் ரோடு என்ற இடம்..

கழுத்துப் பலகை வைக்கப் படுகிறது..
"என் ஓட்டத்தை சந்தோஷமாய் முடிக்க விரும்புகிறேன்"என்றாரே..

பலகையில் தலையை சந்தோஷமாய் நீட்டிக் கொடுக்க..கோடரியோ..வாளோ ஓங்கப் படுகிறது..

"அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதைக் காட்டுவேன்"என்று தமஸ்கு வீதியில் பிடிபட்ட போது சொன்னாரே..

இதோ..இந்த ஆஸ்டியன் வீதியில்.. தலை தரையில் உருண்டு விழ..

அப்போஸ்தலனின் போராட்டம் ஜெயமாய் முடிகிறது..

சரித்திரம் சொல்கிறது..
லூசினா என்ற ரோம விசுவாசி ஆஸ்டியன் ரோட்டுக்கு அருகிலுள்ள தன் நிலத்தில் அப்போஸ்தலனின் உடலை அடக்கம் பண்ணுகிறார்..

தகப்பனே..

என்ன சொல்லுவோம்!
எங்களுடைய இன்றைய சபைகளின் எந்த அளவு கோலாலும் அளக்கப்பட முடியாத ஒரு மனிதன்..

"எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது..
என்னைப் போலாகுங்கள்"
என்று சொன்னாரே..

கிருபை தருவீராக!

எங்களுக்கு அன்பானவர்களின் கடைசி வார்த்தைகள் எங்களுக்கு எவ்வளவு அருமையாய் இருக்க..

"நல்ல போராட்டத்தைப் போராடினேன்..ஓட்டத்தை முடித்தேன்..விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.." என்ற அப்போஸ்தலருக்கெல்லாம் அப்போஸ்தலனான தேவ மனிதனின் கடைசி வார்த்தைகள் எங்களை அசைக்காதோ?

சபையை அதின் அஸ்திபார உபதேசங்களுக்குத் திருப்புவீராக!
செய்யும் ஐயா!

ஆமென்.

CHAPTER-20

அடித்துக் கொல்லப்பட்ட தீமோத்தேயு

CHAPTER-20

" ஓ தீமோத்தேயுவே ! "

ஒரு மனிதனைக் குறித்து கர்த்தர் தமது சொந்த வாயால்..
"என் ஜனங்களை உண்மையாய் விசாரிக்க என்னைப் போன்ற மனதுடைய ஒருவன் உன்னைத் தவிர வேறு யாரும் என்னிடம் இல்லை"
என்று சொல்வாரானால் அதை விட பெரிய சாட்சி வேறு என்ன இருந்து விட முடியும் ?

இப்படிப்பட்ட சாட்சியைத்தான் பவுலின் வாயால் தீமோத்தேயு பெற்றார்.. *(பிலி 2:19,20)*

எவ்வளவு மேன்மையான சாட்சி !

தகப்பன் புறஜாதி கிரேக்கனாய் இருந்தாலும் யூத குலமான தன் பாட்டி லோவிசாள் மூலமாகவும் தன் தாய் ஐனேக்கியா மூலமாகவும் வேத எழுத்துக்களை சிறு வயது முதலே அறிந்திருந்த தீமோத்தேயுவை...

தன் சொந்த ஊரான லீஸ்திராவுக்கு வந்த பவுல் பண்ணிய பிரசங்கமும் பிறவி சப்பாணியை கை தூக்கி எழுப்பிவிட்ட அற்புதமும் உலுக்கிவிட..பவுல் அவனுக்கு ஆதர்ச குருவாகி விட்டான்..

ஏழு வருஷம் சென்று மறுபடியும் தீமோத்தேயுவை சந்தித்த பவுல்..அதற்குள் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் தேர்ந்துவிட்ட தீமோத்தேயுவை..உடன் ஊழியனாக மட்டுமல்ல..
உத்தம குமாரனாகவும் பிரியமான குமாரனாகவும் தேவனுடைய மனுஷனாகவும் தன்னோடு சேர்த்துக் கொள்கிறான்..

நாட்கள் நகர்கின்றன..

எபேசுவிலே சபையைக் கண்காணிக்கும் முதல் மூப்பராக நியமிக்கப்படுகிறார்
இளம் ஊழியனான தீமோத்தேயு..

தேவனுடைய வீட்டில் நடக்க வேண்டிய வழியை
அவனுக்குக் கற்றுத் தரும்படி இரண்டு நிருபங்களை..
முதல் கடிதத்தை மக்கெதோனியாவில்
இருந்தும் இரண்டாவது கடிதத்தை தன் கடைசி நாட்களில்
ரோம் நகரிலிருந்தும் எழுதிய பவுல்..

தன் மரணத்துக்கு முன்பு எப்படியாவது தன் பிரியமான
குமாரனைப் பார்க்க விரும்புகிறார்..

பவுல் இரத்த சாட்சியாவதற்கு முன்பு தீமோத்தேயு அவரை
சந்தித்திருப்பார் என்று குறிப்புகள் சொல்கின்றன..

பவுலின் மரணத்துக்குப் பின் பல வருடங்கள் எபேசுவிலே
ஊழியம் செய்த தீமோத்தேயு எபேசுவின் தேவியாகிய
தியானாளின் திருவிழாவில் பெரிய கூட்டத்துக்கு நடுவில்
நின்று இயேசுவே மெய்யான தேவன் என்று
வைராக்கியமாய் முழங்க..
கூட்டம் அவரைக் கட்டையால் அடித்தே கொன்று
விடுகிறது..

பரிசுத்த தகப்பனே..
உயிரோடு இருக்கும் காலத்தில்
"என்னைப் போன்ற மனதுள்ளவன் உன்னைத் தவிர வேறு
ஒருவனும் என்னிடத்தில் இல்லை" என்று தன் மூத்த
ஊழியனாலும் தேவனுடைய வாயாலும் சாட்சி பெற்று..

நல்ல போராட்டம் போராடி ஓட்டத்தை சந்தோஷமாய்
முடித்து..இரத்த சாட்சியின் கிரீடத்தோடு ஜீவ கிரீடத்தையும்
பெறப் போகும் தீமோத்தேயுவை எங்களுக்கு முன்
வைத்ததற்காக நன்றி செலுத்துகிறோம்..

இப்படித் திரளான இரத்த சாட்சிகள் எங்களை சூழ்ந்து
கொண்டிருக்க..
விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமான உம்மை
நோக்கி எங்கள் ஓட்டத்தை பொறுமையோடு ஓடி முடிக்க
கிருபை தாரும்..

ஆமென்.

CHAPTER-21

எலும்புகள் முறிக்கப்பட்ட ஒநேசிமு

CHAPTER-21

ஒநேசிமு

“கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற மகனாகிய ஒநேசிமு.."

***"முன்னே அவன் பிரயோஜனமில்லாதவன்
இப்பொழுதோ..
பிரயோஜனமுள்ளவன்.."***
(Paul to Philemon 1:10,11)

ஒநேசிமு என்றால் பிரயோஜனமானவன்..

கொலோசே பட்டணத்தின் கண்காணியும் மூப்பருமான பிலமோன் வீட்டில் அடிமையாயிருந்த ஒநேசிமு..

வர்த்தகரும் கனமுள்ள மனிதனுமாகிய பிலமோனிடமிருந்து பணமோ பொருளோ அபகரித்து விட்டு ரோம் நகருக்கு ஓடி விட்ட ஒநேசிமு..

அந்நாட்களில் ரோம் நகர் இப்படிப்பட்ட பேட்டை ரௌடிகளுக்கு தஞ்சம் புகும் இடமாய் இருந்தது என்கிறார் சரித்திர ஆசிரியர் தாசித்துஸ்..

ரோம் நகரிலும் தன் கைவரிசையைக் காட்டினானோ என்னவோ தெரியாது..
ஆனால் அதே நாட்களில் சுவிசேஷத்தினிமித்தம் கைதாகி ரோம் நகரில் காவலில் இருந்த பவுலை ஒநேசிமு சந்திக்க நேரிட..

அந்த நிலையிலும் ஒநேசிமுவை கர்த்தரின் அன்பால் அணைத்துக் கொண்ட பவுலின் மூலம் "மறுபடியும் பிறந்தான்" ஒநேசிமு..

கட்டுகளிலும் காவலிலும் இருந்த வயதான பவுலுக்கு மிகவும் ஆதரவாகவும் அனுசரணையாகவும் இருந்த ஒநேசிமுவைத் தன்னோடு வைத்துக் கொள்ளவே பவுல் விரும்பினாலும் ..

அதைவிட அவசியமாகக் கண்டது..
அவனது முன்னாள் எஜமானிடம் அவனைத் திருப்பி அனுப்புவது..

அனுப்பினார் பவுல்..
அழகான ஒரு கடிதத்துடன்..

"அன்பின் பிலேமான்..

பிரயோஜனமுள்ளவன் என்று பெயர் பெற்ற ஒநேசிமு தான்..
ஆனால் பிரயோஜனம் இல்லாதவனாய் உம்மை விட்டு ஓடிவிட்டது உண்மை தான்..

இப்பொழுதோ அவன் உமக்கும் எனக்கும் பிரயோஜனம் உள்ளவன்..

அவனை நான் உம்மிடத்துக்கு அனுப்புகிறேன்..
என் உள்ளம் போல இருக்கிற அவனை நீர் அன்பாய் ஏற்றுக் கொள்ளும்..

இனிமேல் அடிமையாக அல்ல..பிரியமான சகோதரனாக..

என்னை உம்மோடு ஐக்கியமானவன் என்று எண்ணினால்..என்னை ஏற்றுக் கொள்வது போல அவனை ஏற்றுக் கொள்வீராக!

அவன் உம்மை ஏமாற்றி இருந்தாலோ..
கடன் பட்டிருந்தாலோ..
என் கணக்கில் வைத்துக் கொள்ளும்..
நான் அதை செலுத்தித் தீர்ப்பேன்..

பவுலாகிய நான் இதை என் சொந்தக் கையால் எழுதுகிறேன்.."

இதை விட மேலான ஒரு பரிந்துரை வேண்டுமோ ?

அந்நாட்களில் தன் எஜமானை விட்டு ஓடிப் போகிற அடிமை பிடிபட்டால் அவன் சிறிய தவறே செய்தவனாய் இருந்தாலும் கடும் சித்திரவதையும் சிலுவை மரணமும் நிச்சயம் என்கிறது ரோம வரலாறு..

ஆனால் இப்படிப்பட்ட கடிதத்துடன் வந்த ஒநேசிமுவைக் கண்ட கொலேசிய சபை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை..

பிலமோனுக்கு அடிமையாயிருந்த ஒநேசிமு இப்போது இயேசுவுக்கு அடிமையாய் மாற..
எபேசு சபையின் மூப்பராக தீமோத்தேயுவுக்குப் பின் ஊழியத்தைத் தொடர்கிறார் ஒநேசிமு..

காலங்கள் கடந்தன..
ரோம சாம்ராஜ்யத்தில்..
டொமிஷியன் ராயன் நாட்களில்..கிபி 95..

ரோம் நகர கவர்னராக இருந்த "த்ராஜன்" என்பவன் எபேசுவிலிருந்து ஒநேசிமுவைக் கட்டி ரோமுக்கு இழுத்து வருகிறான்..

இந்த Trajan காலத்தில் கிறிஸ்தவர்கள் பட்ட கொடுமைக்கு அளவே இல்லை..

ரோம் நகரின் காவல் கிடங்குகளில் 18 நாள் குரூரமாக சித்திரவதைப் படுத்தப்பட்ட ஒநேசிமுவின் இரண்டு கால்களும் தொடை எலும்புகளும் அடித்தே முறிக்கப்பட்டன..

அதன் பின்னும் நெஞ்சு கல்லால் நசுக்கப்பட..தான் "மறுபடியும் பிறந்த"
இடத்திலேயே இறக்கிறார் ஒநேசிமு..

தகப்பனே..

என்ன சொல்லுவோம்?
சொல்ல வார்த்தை இல்லை ஐயா..

எதற்கும் பிரயோஜனமில்லாமல் மிதிக்கப்படத்தக்க மண்ணாய்க் கிடந்த எங்களையும் உமது கைகளிலே எடுத்து..
திரிகையிலே வைத்து..
திருத்தமாய் செய்யும்படி தண்ணீராலே அல்ல..
உம் கண்ணீராலே..
உம் இரத்தத்தாலே..
உம் வியர்வையாலே..

"பரிசுத்தமாக்கப்பட்டதும்..
எஜமானுக்கு உபயோகமானதும்..
எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான..
கனத்துக்குரிய பாத்திரமாய்" (2 தீமோ2:21)

எங்களைத் திரும்பவும் வனைந்து கொள்ளச் சித்தமானீரே..

கண்ணீராலே உம் பாதங்களை நனைக்கிறோம்..
தொடை எலும்புகள் முறிக்கப்பட்ட ஒநேசிமுவின் இரத்தம்..

பிரயோஜனமில்லாமல் இருக்கிறோமே என்ற தாழ்வு
மனப்பான்மையை மாற்றி..எங்கள் சகோதரர் அநேகரை
கிறிஸ்துவுக்காக பிரயோஜனப்பட உணர்வுள்ளவர்களாய்
ஆக்குவதாக !
உற்சாகமூட்டி எழுப்பி விடுவதாக!

செய்வீராக தகப்பனே..
ஆமென்.

CHAPTER-22

எரித்துக் கொல்லப்பட்ட எப்பாப்பிரா

CHAPTER-22

" எப்பாப்பிரா "

பின்னும் நான் என்ன சொல்லுவேன்?
எப்பாப்பிரா..
அன்றோனீக்கு..
யூனியா..
சீலா என்ற சில்வானு..
யூதா என்ற பர்சபா..மற்றும்
ஒநேசிப்போரு என்பவர்களையும்..

இன்னும் இரத்த சாட்சிகளையும் குறித்து நான் விபரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது.. (எபி 11:32)

எப்பாப்பிரா :
சபைகளுக்காய் மிகுந்த ஜக்கிரதையாய் இருந்து தன் ஜெபங்களில் எப்போதும் போராடும் இந்த கொலோசேயின் ஜெபவீரன்..

நீரோ காலத்தில் கொடூரமான முறையில் கொல்லப்பட்டவன்..

அன்றோனீக்கு & யூனியா:
பவுலுடன் காவலில் இருந்த இவர்கள் இருவரும் கற்பனைக்கு எட்டாத முறையில் வதைக்கப்பட்டு கொல்லப்பட்டவர்கள்..

சில்வானு என்ற சீலா :
பவுல் மற்றும் பர்னபாவுடன் ஊழியத்தில் தோளோடு தோள் நின்ற பிலிப்பி நகரைச் சேர்ந்த இவன்..

கசையால் அடிக்கப்பட்டு நீரோ மன்னன் காலத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவன்..

யூதா என்ற பர்சபா : சிறையில் கால்கள் தொழுவத்தில் மாட்டப்பட்டு அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டவன்..

ஒநேசிப்போரு :
எபேசுவைச் சேர்ந்த இவன் ரோம் நகருக்குச் செல்லும் போது வெகு ஜாக்கிரதையாய் பவுலைத் தேடிக் கண்டுபிடித்தவன்.. தானும் பிடிபடுகிறான்..

அட்ரியன் என்ற கவர்னரின் காலத்தில் ஒநேசிப்போரும் அவன் உடன் ஊழியன் போர்ப்பிரி என்பவனும் வாரினால் அடிக்கப்பட்டு..அடங்கா குதிரைகள் வாலில் கட்டப்பட்டு உடல் நார் நாராய்க் கிழிந்து போகுமட்டும் தெருவெல்லாம் இழுத்துச் செல்லப்பட்டு..
கொல்லப்பட்டவன்..

தகப்பனே..
எங்கள் அன்பையும் கிரியைகளையும் மறவாத நீதியுள்ளவராய் நீர் இருக்கும் போது..

ஊழியத்தில் தன்னுடன் பிரயாசப்பட்ட ஒவ்வொருவரையும் பேர் பேராக நினைவில் வைத்து மறவாமல் வாழ்த்த ஒரு முழு அதிகாரமும்
(ரோமர் 16) எழுதி வைத்த பவுல் இருக்கும் போது..

நாங்கள் மட்டும் இந்த இரத்த சாட்சிகளான விசுவாச வீரர்களை மறப்பது எப்படி நியாயம் ?

தகப்பனே..அவர்கள் வரிசையில் நாங்களும் எண்ணப்பட எங்களையும் தகுதி உள்ளவர்களாக்கும்!

ஆமென்.

CHAPTER-23

உயிரோடு புதைக்கப்பட்ட அர்க்கிப்பு

CHAPTER-23

அர்க்கிப்பு

"அர்க்கிப்பைக் கண்டு..
நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி
கவனமாயிருப்பாயாக"
என்று சொல்லுங்கள்..
(கொலோ 4:17)

அது நீரோ மன்னன் காலம்..
(கிபி 54 - 68)
15 ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சி செய்த நீரோ..

இவன் காலத்தில் கிறிஸ்தவர்கள் பட்ட கொடூரமான வேதனையைப் பார்க்கும் போது அதற்கு முன் அவர்கள் மற்ற ஆட்சியாளர்கள் கைகளில் பட்ட சித்ரவதை ஒன்றுமில்லை என்றே சொல்கிறார்கள்..

நேரடியாகப் பிசாசினால் தூண்டிவிடப்பட்டு செய்தால் ஒழிய அப்படி ஒரு கடூரமும் கற்பனைக்கு எட்டாத சித்ரவதையும் செய்வது முற்றும் முடியாத ஒன்று..

சிலர் காட்டு விலங்குகளின் தோலுக்குள் வைத்து தைக்கப்பட்டு கடித்துக் குதறிப் போடும் நாய்களுக்கு முன் எறிந்து விடப்பட்டார்கள்..

சிலர் பாம்பு தேள் போன்ற விஷ ஜந்துக்கள் நிறைந்த சாக்கு மூட்டைகளில் போடப்பட்டு கட்டி எறிந்து விடப்பட்டார்கள்..

நீரோ மன்னனின் தோட்டத்தில் சாயங்கால விருந்து வேளைகளில் வெளிச்சம் தர கம்பத்தில் கட்டப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்டனர்..

இப்படிப்பட்ட நாட்களில் தான்..
பேதுருவும் பவுலும் மற்ற பலரும் கொல்லப் பட்டனர்..
இயேசு 70 பேரை இரண்டிரண்டு பேராக அனுப்பினாரே..
அவர்களில் அநேகர் கொல்லப்பட்டதும் அப்போது தான்..

இவர்களில் ஒருவர் தான் அர்க்கிப்பு..

பின்னாட்களில் பவுலின் மூலம் மனம் திரும்பிய பிலமோன்..அவர் மனைவி அப்பியாள்..இருவரின் மகன் தான் அர்க்கிப்பு..

பிரிகியாவிலுள்ள கொலோசே பட்டணத்தில் இவர்கள் வீட்டில் கூடிய சபைக்கு கண்காணியாய் இருந்தவர்.. (இங்கு தான் அனுப்பப்பட்டான் ஒநேசிமு)

ஒரு நாள் மாலை வேளை..

பிலமோன் வீட்டில் சபை கூடியிருந்தது..
அவர்களுக்குத் தெரியும்..
அன்றைய நாட்களில் கூடி ஆராதிப்பது சட்டவிரோதமானது..
கண்டு பிடிக்கப்பட்டால் மரணம் நிச்சயம் என்று..

சுவிசேஷத்தினிமித்தம் இரத்தசாட்சியாய் மரிக்க நேர்ந்தாலும் பயமில்லை என்று ஆராதித்துக் கொண்டு இருந்தார்கள்..

ஆராதனையில் கர்த்தருடைய வார்த்தைக்குப்பின் சமீபத்தில் வந்திருந்த அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபமும் வாசிக்கப்பட்டது..

இவைகள் உள்ளே நடந்து கொண்டிருக்கும் போதே வெளியே வெளிச்சமும் பெரிய ஆரவாரமும் கூச்சலும் கேட்கிறது..

அன்று கொலோசேயில் கிரேக்க சந்திர தேவதை அர்த்தனெசின் திருவிழா..

கூட்டம் பிலமோனின் வீட்டை வளைந்து கொண்டது..சபையார் அடித்து விரட்டப்பட்டு..

பிலமோன்-அப்பியாள்-அர்க்கிப்பு மூவரும் உயிரோடு பிடிக்கப்பட்டு..நகர கவர்னர் அட்ரோக்கின் முன் இழுத்து வரப்பட..அவர்கள் மூவருக்கும் மரண தண்டனை முடிவாகிறது..

வாலிபனான அர்க்கிப்பு கத்தியால் கண்மூடித்தனமாகக் குத்திக் கிழிக்கப் படுகிறான்..

கடும் சித்ரவதைக்குப்பின் இடுப்பு வரையில் நிற்கும்
நிலையில் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு..
பின் கல்லால் எறியப்பட்டு கொல்லப்படுகின்றனர்..

பவுலுக்குப் பிரியமானவனும் உடன் வேலையாளுமாயிருந்த
பிலமோனும்..பிரியமுள்ள அப்பியாளும்..
உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்பும்..

தகப்பனே..
"வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும்
காவலையும் அனுபவித்தார்கள்..

கல்லெறியுண்டார்கள்..
வாளால் அறுப்புண்டார்கள்
பரீட்சை பார்க்கப்பட்டார்கள்
பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்..

செம்மறியாட்டுத் தோலையும் வெள்ளாட்டுத் தோல்களையும்
போர்த்துக் கொண்டு திரிந்து..
குறைவையும் துன்பத்தையும் உபத்திரவத்தையும்
அனுபவித்தார்கள்.."

என்று எபிரேயரில்எழுதப்பட்ட வார்த்தைகள் இன்றைய
சபையால் மறக்கப்பட்டுப் போயிற்றோ.. ?
அல்லது இருட்டடிப்பு செய்யப்பட்டுப் போயிற்றோ?

இவைகளை மீண்டும் வெளிச்சத்துக்குக்
கொண்டு வருவீராக !

சபைக்காக உம்மையே ஒப்புக் கொடுத்தீரே..
திருவசனம் திருடப்படாமல் அதின்
முழுக்கினால் எங்களைப் பரிசுத்தப் படுத்துவீராக !

அர்க்கிப்புகள் எழும்புவார்களாக!
ஆமென்.

CHAPTER-24

தலை வெட்டப்பட்ட
ஆக்கில்லா பிரிஸ்கில்லா

CHAPTER-24

தங்கள் கழுத்தைக் கொடுத்த " ஆக்கில்லா பிரிஸ்கில்லா "

"அவர்கள் இருவரும்"
என்று அடைமொழி இடப்பட்ட மூன்று தம்பதிகள் வேதத்தில் உண்டு..

1. முதலாவது:
தேவனாகிய கர்த்தரால் ஒரே மாம்சமாயிருக்க உண்டாக்கப்பட்ட
"அவர்கள் இருவரும்"
ஆதாம் ஏவாள்.. *(மத்19:5)*

2. இரண்டாவது:
வயது சென்றவர்களாயும் பிள்ளை இல்லாதவர்களாயும் இருந்தாலும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியும் நியமங்களின் படியும் குற்றமற்றவர்களாய் நடந்து.. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்த..
"அவர்கள் இருவரும்"
சகரியா எலிசபெத்தும்..
(லூக் 1:4,5)

3. மூன்றாவது:
பவுலின் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்த
"அவர்கள் இருவரும்"
ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதியுமே..

தங்களில் தாங்கள் ஒரே மாம்சமாகவும் கர்த்தரோடு ஒரே ஆவியிலும் ஒரே மனதுடனும் இருக்க அழைக்கப்பட்டு..

வயதாகும் காலம் வரை கர்த்தருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் மட்டுமல்ல..அவருக்குச் சித்தமானால் மரணத்திலும் ஒன்று போல கழுத்தைக் கொடுக்கவும்.. ஆயத்தமாய் இருந்த முன் உதாரண முன்னோடி தம்பதிகள்..

வேதம் சொல்கிறது..இந்த ஆக்கில்லா பிரிஸ்கில்லா

- கிலவுதியு ராயன் காலத்தில் ரோம் நகரை விட்டுத் துரத்தப்பட்ட யூதர்கள்..

- கொரிந்துவுக்கு வந்து சேர்ந்து பவுலை சந்தித்து அவனோடு ஒன்றரை வருடங்கள் கூடாரத் தொழில் செய்த நாட்களில் வசனத்தில் வளர்ந்தவர்கள்

- பின்பு..பவுல் அங்கிருந்து எபேசுவுக்குப் புறப்பட்ட போது தாங்களும் அவனோடு எபேசுவுக்குச் சென்று சபை ஸ்தாபித்து சபைக்குத் தூணாய் நின்றவர்கள்..

- அங்கிருந்து பவுல் செசரியாவுக்குச் சென்ற பின் எபேசுவில் சில காலம் சபையோடு இருந்த போது..
அங்கு ஆவியிலே அனலாய் வந்த அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்துக் காண்பித்தவர்கள்..

- சபை நடத்த தங்கள் வீட்டைத் திறந்து கொடுத்தவர்கள்..

- சில காலத்துக்குப்பின் யூதர்கள் மீதிருந்த தடை நீங்கிய பின் ரோம் நகருக்குத் திரும்பியவர்கள்

இந்தத் தம்பதி கடைசி வரை இணைந்திருந்தது ஒரே நோக்கத்துக்காகவே:
தங்கள் கழுத்தைக் கொடுத்தாகிலும் ஜீவனுள்ள சுவிசேஷத்தை சுவிசேஷமாய் அறிவிக்கவே..

ரோமுக்குத் திரும்பிய இவர்கள் சட்டத்துக்குப் புறம்பாகக் கைது செய்யப்பட்டனர்..

-சொத்துக்களும் உடைமைகளும் பறிமுதல் செய்யப்பட்டன..

-கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கப்பட்டனர்..

-முன்னொரு காலத்தில் தங்கள் ஆசான் பவுலின் ஜீவனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுக்க முற்பட்டவர்கள்..

இப்பொழுது தங்கள் இரட்சகருக்காகக் கழுத்து வெட்டப்பட்டு..தாங்கள் அறிவித்த சுவிசேஷத்துக்காகத் தங்கள் கழுத்தையே விலையாகக் கொடுத்தார்கள்..

பரிசுத்த தகப்பனே..
"அவர்கள் இருவரும்" என்று பெயரிடப்பட்ட மூன்று தம்பதிகளில் ஒருவர் உம்முடைய கட்டளையை மீறியது உண்மையே..

ஆனால் உமது கட்டளையைக் கைக்கொள்ள மட்டுமல்ல..
தங்கள் இரட்சகருக்காகவும் அவரது சுவிசேஷத்துக்காகவும் தங்கள் கழுத்தையே கொடுக்க ஒருமனப்பட்ட இந்தத் தம்பதி இன்றைய சபையின் தம்பதிகளுக்கு முன்
உதாரணமில்லையோ?

விவாகரத்துகளும் தற்கொலைகளும் பெருகி வரும்
இன்றைய சபையின் தம்பதிகளுக்கு மத்தியில் ஆக்கில்லா
பிரிஸ்கில்லாக்கள் எங்கே?

பெயரில்மட்டும் எலிசபெத்துக்களும்
பிரிஸ்கில்லாக்களுமோ?

இவர்களின் சாட்சியான வாழ்வும் இரத்த சாட்சி மரணமும்
இன்றைய தம்பதிகளுக்கு சவாலாவதாக!

எங்கள் குடும்பங்களுக்கு இரங்குவீராக!
ஆமென்.

CHAPTER-25

கொலோசியத்தில் பெர்ப்பெச்சுவா

CHAPTER-25

" பெர்ப்பெச்சுவா "

கிபி 200..
மன்னன் செவரஸ்..
ஐந்தாம் உபத்திரவக் காலம்

இதற்குள்ளாக..உபத்திரவம்
ரோமர்களின் காலனியாய் மாறியிருந்த
வட ஆப்பிரிக்கா வரை பரவி
விட்டிருந்தது..அநேகர் அங்கு கொல்லப் பட்டனர்..

அதில் பெர்ப்பெச்சுவா என்ற 26 வயது இளம் பெண்ணும்
ஒருவர்..
அவள் கைகளில் பால் குடிக்கும் குழந்தை..

மினுஷியஸ் என்ற நீதிபதியின் முன் நிறுத்தப் படுகிறாள்
பெர்ப்பெச்சுவா..
கைகளிலிருந்து கைக்குழந்தை பறிக்கப்பட..
காவல் கிடங்கில் தூக்கி எறியப்படுகிறாள்
பெர்ப்பெச்சுவா..

வழக்கு விசாரணைக்கு வந்த போது..
பெர்ப்பெச்சுவாவின் முறை வருகிறது..

திடீரென்று அவளது தகப்பன் குழந்தையோடு வந்து
கெஞ்சுகிறார்..

"மகளே..வயதான என்னைப்பார்..
நீ பெற்ற இந்த சிசுவைப்
பார்,இயேசுவை விட்டு விடு"

ஸ்திரமாக மறுத்து விடுகிறாள் பெர்ப்பெச்சுவா..

நீதிபதி கேட்கிறார்..
"நீ ஒரு கிறிஸ்தவளா?"
ஆம்..நான் கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒரு விசுவாசி.."
பதிலளிக்கிறாள்..

தீர்ப்பு எழுதப்படுகிறது..
"அடுத்த விடுமுறை நாளில் காட்டு விலங்குகளுக்கு இவள் இரையாக்கப்படட்டும்.."

விடுமுறை வருகிறது..
வழக்கம் போல் மக்கள் கூட்டம்..
வெற்றியின் பாடலோடு வருகிறாள் பெர்ப்பெச்சுவா..

முதலில் அவளும் அவள் சிநேசிதி ஃபெலிசிட்டாஸ்..
இருவரும் வலையில் கட்டப்பட்டு உடலில் ஆடையின்றி மைதானத்தில் இறக்கி விடப்படுகிறார்கள்..

ஆனால் கூட்டம் அதை எதிர்க்கவே..உள்ளே கொண்டு செல்லப்பட்டு மீண்டும் ஆடையோடு கொண்டு வரப்படுகிறாள்..

சீவிய கொம்புகளோடு பைத்தியம் பிடித்த காளை ஒன்று அவிழ்த்து விடப்படுகிறது..

முதலில் பெர்ப்பெச்சுவாவை சிறிது காயப்படுத்தின காளை..ஃபெலிசிட்டாசை தன் கொம்புகளால் குத்தி வீசுகிறது..

பலத்த காயம் பட்ட அவளைத் தன் மடியில் கிடத்திக் கொள்கிறாள் பெர்ப்பெச்சுவா..

மடியிலேயே பெலிசிட்டா மரித்துப் போக இருவரையும் தொடாமல் ஓடிவிடுகிறது காளை..

ஏமாந்து போன கூட்டம் கூச்சலிடுகிறது..

இதற்குள் *gladiators* என்று சொல்லப்படும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் குத்திக் கொல்லும் அடிமைகளில் ஒருவன் பெர்ப்பெச்சுவாவைக் கொல்ல அனுப்பப் படுகிறான்..

அனுபவமற்ற அவன் பல முறை தன் வாளால் அவளைக் குத்துகிறான்..

கடைசியில் பெர்ப்பெச்சுவா தானே அவனுக்கு உதவ..
அங்கேயே விழுந்து மடிகிறாள் பெர்ப்பெச்சுவா..

"பொன் ஏணி"

தானும் தன் நான்கு நண்பர்களான ஃபெலிஸிட்டஸ், ரெவோக்கட்டஸ், ஸேச்சுரஸ் மற்றும் ஸெக்கண்டுலாஸ் ஆகியோரோடு சிறையில் இருந்த நாட்களில் பெர்ப்பெச்சுவா எழுதி வைத்த அனுபவங்கள்..

நாங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நாட்களில் என் தகப்பனார்..
நான் கிறிஸ்துவை மறுதலிக்கும்படி என்னை மிகவும் வற்புறுத்தினார்..

அது அவர் என் மேல் வைத்த அன்பினால் மட்டுமல்ல..பிசாசு என்னை விசுவாசத்திலிருந்து விலக வைக்கச் செய்யும் முயற்சி என்று நன்கு அறிந்திருந்தேன்..

அந்த நாட்களில் ஒரு நாள் ஜெயிலுக்கு வந்தவர் என் மேல் கோபமாய் எரிந்தார்..
அவரது வேதனையைக் காண விரும்பாத நான் சில நாட்கள் அவரை சந்திக்க விரும்பவில்லை..

சில நாட்களில் எங்கள் சபையைச் சேர்ந்த சிலர் எங்களைச் சந்திக்க ஜெயிலுக்கு வந்து அங்கேயே எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர்..

அந்த நாட்களில் ஆவியானவர் என்னிடம் பேசியதெல்லாம்..
"சரீரத்தில் நீ படப்போகும் பாடுகளை சந்திக்கக் கர்த்தரிடத்தில் கிருபையைக் கேள்"
என்பதே..

அதன்பின் நாங்கள் அங்கிருந்து இருண்ட டஞ்சனான பாதாள அறைக்கு மாற்றப்பட்டோம்..

சில மாதங்களே ஆன பால் மறவா என் மகனை என்னோடு அந்த டஞ்சனில் வைத்துக் கொள்ள நான் அனுமதிக்கப்பட்டேன்.

இருண்டு நாற்றம் எடுத்த அந்தப்பாதாள அறையின் நிலையை விவரிக்க முடியாது..ஆனாலும் தேவ பிரசன்னத்தால் நிறைந்த அந்த இடம் எனக்குப் பரலோகமாய் இருந்தது..

ஒரு நாள் என் சகோதரன் என்னைச் சந்திக்க வந்தான்..
அதிக உணர்ச்சிவசப்பட்ட அவன் சொன்னான்..

"பெர்ப்பெச்சுவா..
கர்த்தரிடத்தில் ஒரு தரிசனத்தைக் கேள்..
மரணம் தான் இந்த சிறைவாசத்தின் முடிவா?"

அன்று இரவு நான் ஜெபத்தில் போராடினேன்..
கர்த்தர் சொப்பனத்தின் மூலம் பதில் கொடுத்தார்..

ஒரு மிகப் பெரிய ஏணி..பொன்னால் ஆனது..
தரையிலிருந்து வானம் எட்ட..அதின் இரண்டு பக்கங்களிலும் வாள்,முள்,மற்றும் கூரிய கம்பிகள் போன்ற பயங்கர இரும்பு ஆயுதங்கள் மாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன..

மனம் போனபடி இரு பக்கங்களையும் கவனிக்காமல் ஏறுபவர்கள் அவைகளால் வெட்டப்பட்டு கிழிக்கப்பட்டு கீழே விழுகிறார்கள்..

ஏணியின் கீழே ஏறும் முனையில் ஒரு பெரிய வலுசர்ப்பம் தன் வாலைச் சுழற்றி தன் வாயைத் திறந்து ஏணியில் ஏறுபவர்களை விழுங்க முயற்சிக்கிறது..

திடீரென்று என் நண்பன் ஸேச்சுரஸ் என்னைத் தாண்டி அந்த ஏணியில் ஏறுகிறான்..

பின்னோக்கிப் பாராமல் மிக வேகமாக ஏணியில் ஏறினவன் மேலே போய் சேர்ந்து விட்டான்..

மேலிருந்து என்னை நோக்கிச் சொல்கிறான்..
"பெர்ப்பெச்சுவா..நான் உனக்காகக் காத்திருக்கிறேன்..ஏறி வா..
ஆனா அந்த வலுசர்ப்பம் கடிச்சிராம பாத்துக்க.."

"ஸேச்சுரஸ்..இயேசுவின் நாமத்தினால நான் எதுக்கும் பயப்பட மாட்டேன்"என்றேன்..

இயேசுவின் நாமத்தினால நான் அந்தப் பாம்பை
ஒரு மிதி மிதிக்க..அது சுருண்டு விழுந்தது..

மேலே ஏறிய நான் ஒரு அழகான தோட்டத்தை
அடைந்தேன்..
அங்கே ஒரு மனிதன் சாதாரண மேய்ப்பனின்
உடையில் நிற்கிறான்..

அவனைச் சுற்றி அநேகர் வெண் உடையில் நிற்கிறார்கள்..
ஆட்டின் வெண்ணையை என்னிடம் தந்த அந்த
மேய்ப்பன் "வா மகளே "என்கிறான்..

அந்த வெண்ணையை நான் என் வாயில் வைத்ததும்..
நின்று கொண்டிருந்த யாவரும் "ஆமென்''
என்கிறார்கள்..

இதற்குள் கனவு கலைந்து கண் விழித்துவிட்ட
நான் என் வாய் முழுவதும்..
சொல்ல முடியாத இனிப்பை ருசிக்கிறேன்..

எனக்குப் புரிந்தது..இந்த உலகத்தில் என் நாட்கள்
எண்ணப்பட்டு விட்டதென்று..

இதைத்தவிர இன்னும் வெளிப்படுத்தப்பட்ட மூன்று
தரிசனங்கள் மூலம் பெர்ப்பெச்சுவா மற்றும்
நண்பர்களின் முடிவு உறுதியாகிறது..

சிறையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்த மிக மோசமான
நிலையில் ஸெக்கண்டுலாஸ்..இரத்த சாட்சியின்
மகிமையான மரணம் எனக்குக் கிடைக்க வில்லையே என்ற
வருத்தத்தோடு பாதாளக் கிடங்குகளில் உயிரை விடுகிறான்..

ஸேச்சுரஸூம் ரெவோக்கட்டசும் காட்டுப்புலியினால்
கொல்லப்பட விட்டுவிடப்படுகிறார்கள்..

புலியால் தாக்கப்பட்ட ஸேச்சுரஸ்..தன்னை நடத்தி
வந்த சிப்பாயைப் பார்த்து
"நான் உனக்கு ஏற்கனவே சொன்ன வார்த்தைகளையும் என்
மரணத்தையும் மறந்து விடாதே"என்று சொல்லி விட்டு..

''உன் கையில் உள்ள மோதிரத்தைக் கழற்றிக் கொடு''
என்று கேட்கிறான்..

தன் இரத்தம் தோய்ந்த விரல்களில் அந்த மோதிரத்தைப் போட்டு இரத்தம் தோய அதைக் கழற்றிக் கொடுத்தவன்..

"இதை என் நினைவாக வைத்துக் கொள்..என் ஜீவனின் முடிவு உன் ஜீவனின் துவக்கமாய் இருக்கட்டும்"என்று சொல்லி விட்டு அங்கேயே விழுந்து மரிக்கிறான்..

அடுத்து பெர்ப்பெச்சுவாவின் முறை வருகிறது..

கூடவே அவள் கண்ட கனவு அவள் கண்முன்னே வருகிறது.. ஸேச்சுரஸ் தனக்கு முன்னே பொன் ஏணியில் ஏறி பரலோகத்தில் சேர்ந்ததை நினைவு கூறுகிறாள்..

தகப்பனே..
"கிறிஸ்துவின் அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கு எட்டாத அந்த அன்பை உணர்ந்து கொள்ள வல்லவர்களாக அனுக்கிரகம் பண்ணும்" என்று பவுல் வேண்டிக் கொண்டாரே..

அது இது தானோ?

எங்கள் புத்திக்கு எட்டாத அந்த அன்பு ஒரு மனிதனை இவ்வளவு தூரம் நெருக்கி ஏவுமோ?

ஆதி சபையின் இப்படிப்பட்ட பெர்ப்பெச்சுவா போன்ற சாட்சிகளின் அளவினால் இன்றைய எங்கள் சபைகள் அளக்கப்படுமானால்..
நிறுக்கப்படுமானால்..

நாங்கள் எங்கே நிற்போம் ஆண்டவரே?
பதில் இல்லை ஐயா!

மன்னியும்..மனமிரங்கும்..

ஆமென்.

CHAPTER-26

கொலைக்களத்தில் தியோடரா - திதிமு

CHAPTER-26

" தியோடோரா - திதிமு "

அந்தியோக்கியா பட்டணம்..
நகரின் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த தியோடோரா..

வயது பதினாறு..
இயற்கையிலே மிக அழகான தியோடோரா..

விவாகம் செய்து கொள்ளாமல் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்காகத் தன்னையே நியமித்துக் கொள்கிறாள்..

அவளது தோற்றமும் சாட்சியும் வாழ்க்கையும் அவளைப் போன்ற அநேக வாலிபப் பெண்களை கிறிஸ்துவிடம் ஈர்க்கிறது..

இப்போது கிபி 304..
டயோக்ளீஷியன் மன்னனின் ஆட்சி..

அலெக்ஸாண்ட்ரியாவில் கண்ட இடமெல்லாம் ரோம தேவதைகளின் சிலைகள்..

நகரத்தில் சிலைக்கு வணங்காத சிலர் கைதாகின்றனர்..அதில் இளம் தியோடோராவும் அடக்கம்..ஜட்ஜ் ப்ரோக்குலஸ் முன் நிறுத்தப்படுகின்றனர்..

உயர் ஜாதியான தியோடோராவின் மனதை மாற்ற எவ்வளவோ முயற்சி செய்கிறான் அந்த ஜட்ஜ்..

முடியாமல் போகவே..
கடைசியாக சொல்கிறான்..
"மூன்று நாட்கள் தவணை..
முடிவை மாற்றிக் கொள்..
இல்லாவிட்டால் விபச்சார விடுதியில் அடைக்கப்படுவாய்.."

தியோடோரா சொன்னாள்..
"என் தேவன் அப்படிப்பட்ட இடத்திலிருந்தும் என்னைத் தப்புவிக்க வல்லவர்.."

மூன்று நாட்களுக்குப் பின் மீண்டும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படுகிறாள் தியோடோரா..

தன் மனதை மாற்றிக் கொள்ளாத அவளைக் கண்ட ஜட்ஜ் ப்ரோக்குலஸ்
அவளை விபச்சார விடுதியில் அடைக்கிறான்..

அன்றிரவு அந்த இடத்துக்கு மூன்று பேர் தீய நோக்கத்தோடு அவளுக்காகவே வருகின்றனர்..

மூவருக்குள்ளும் போட்டி..
முதலில் நீயா..நானா?

இதற்குள் ரோமப் போர் வீர வாலிபன் ஒருவன் அவள் இருந்த அறைக்குள் நுழைகிறான்..அவனைக் கண்ட மூவரும் ஓடிவிடுகின்றனர்..

ரோமப் போர் வீரனைக் கண்ட தியோடோரா அறையின் மூலையில் நடுங்கிப் பதுங்குகிறாள்..

உள்ளே வந்தவன் சொல்கிறான்..

"தியோடோரா..
பயப்படாதே என் பெயர் திதிமு..
நானும் உன்னைப் போல விசுவாசி தான்..
உன்னைக் காப்பாற்ற வந்தேன்..

ஒன்று செய்..என் யூனிஃபார்மை நீ போட்டுக் கொள்..உன் உடைகளை எனக்குக் கொடு..உனக்குப் பதிலாக நான் இங்கிருப்பேன்..நீ தப்பித்துக் கொள்.."

முதலில் தயங்கிய தியோடோரா..
யூனிஃபார்மில் ரோம வீரனாய் மாறி விபச்சார விடுதியிலிருந்து தப்பித்து விடுகிறாள்..

சற்று நேரத்தில் தெரிந்து விடுகிறது..திதிமு யாரென்று..

பிடிபட்ட திதிமுவின் தலை துண்டிக்கப்பட ஆணை பிறப்பிக்கப்படுகிறது..

கொலைக்களத்துக்கு கொண்டு செல்லப்படுகிறான் திதிமு..
கேள்விப்பட்ட தியோடோரா ஓடி வருகிறாள்..

“நீயல்ல..உன் இடத்தில் நான் சாக வேண்டும்..என் சரீரத்தைக் கற்போடு பாதுகாக்க என் தேவன் உன்னை அனுப்பியது உண்மை தான்..

ஆனால் நான் உயிர் தப்பி ஓடவில்லை..என் இரத்த சாட்சி கிரீடத்தை நீ எடுத்துக் கொள்ள முடியாது திதிமு.."

ஜட்ஜ் பார்க்கிறான்..
தியோடோரா-திதிமு இருவரும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் தலை துண்டிக்கப் படப் படுகிறார்கள்..

தகப்பனே..

"உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு நியமித்தேன் "என்று பவுல் சொன்னாரே..

உலகத்தால் கறை படாதபடி
தங்கள் உடலையும் உள்ளத்தையும் காத்துக் கொண்டு..

தங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த தியோடோராவும் திதிமுவும் எங்கள் சபைகளின் வாலிப உள்ளங்களுக்கு ரோல் மாடலாய் அமைவார்களாக!

காதலும் உலக அன்பும் அல்ல..பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு எங்கள் பிள்ளைகளின் இதயங்களில் ஊற்றப்படுவதாக!

எங்கள் பிள்ளைகளின் மேற்கத்திய கலாச்சாரத்துக்காகவும் சிகை..உடை அலங்காரங்களுக்காகவும் துக்கிக்கிறோம்..

கல்வாரி சிலுவை மறக்கப்பட்டுப் போயிற்றே!

சிலுவையைத் தாங்கள் கழுத்தில் அணியும் செயினில் அல்ல.. தோளில் சுமக்கக் கிருபை தாரும்.. இரங்குவீராக!

ஆமென்.

CHAPTER-27

சிலுவையில் திமோத்தி - மௌரா

CHAPTER-27

" திமோத்தி & மௌரா "

ரோம காலனியான மௌரிஷியானா..

திமோத்தி அந்த நகரின் சபையின் இளம் போதகர்.. மௌராவும் திமோத்தியும் திருமணமாகி சில வாரங்களே ஆகியிருந்தன..

அதற்குள் மௌரிஷியானாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான உபத்திரவம் வெடிக்க..திமோத்தியும் மௌராவும் கைது செய்யப்படுகின்றனர்..

அந்த நகரின் கவர்னர் அரியேனுஸ் முன்பு நிறுத்தப்படுகிறான் திமோத்தி..

கவர்னர் :
"உன் வேத புத்தகங்களையும் நீ வைத்திருக்கும் எல்லாப் புத்தகங்களையும் எனக்கு முன் கொண்டு வந்து கொளுத்திப் போடு.."

திமோத்தி :
"இன்று எனக்குப் பிள்ளைகள் இருந்திருந்தால் அவர்களை உமக்கு முன் நிறுத்தி உயிரோடு கொளுத்திவிட ஒப்புக்கொடுப்பேனே தவிர என் வேதப்புத்தகங்களைக் கொளுத்த விட மாட்டேன் என்பதைப் புரிந்து கொள்ளும்!"

கோபம் கனலாய் எரிய.."இவனது இரண்டு கண்களையும் காய்ச்சப்பட்ட இரும்புக் கம்பிகளால் குத்திக் குருடாக்குங்கள்..
இவன் தன் புத்தகங்களை எப்படிப் படிக்கிறான் பார்ப்போம்" என்று கட்டளையிட..

திமோத்தியின் இரு கண்களும் பழுக்கக் காய்ச்சப்பட்ட கம்பிகளால் குத்திக் குருடாக்கப் படுகின்றன..

சொல்ல முடியாத தன் வேதனையிலும் தன் உறுதியை விடாத திமோத்தியைக் கண்ட கவர்னர்..

அவனைக் கழுத்தில் கல்லைக் கட்டி தலை கீழாய்த் தொங்க விட்டு..
வாயைத் துணியால் அடைத்து விடுகிறான்..
அப்படியாவது அவன் தன் முடிவை மாற்றிக் கொள்வான் என்று..

இந்தச் சித்ரவதைகளை எல்லாம் கண்கூடாய்க் காண வலுக்கட்டாயப் படுத்தப்படுகிறாள் மௌரா..

தன் கணவன் படும் பாடுகளைக் காண சகிக்காத அவள் "உன் முடிவை மாற்றிக் கொள் திமோத்தி"என்று கெஞ்சுகிறாள்..

அவன் என்ன சொல்வான் என்று பார்க்க அவன் வாயில் அடைக்கப்பட்டிருந்த துணி எடுக்கப்பட்ட போது திமோத்தி சொல்கிறான்..

"மௌரா! நான் உன்னை நேசித்தது தவறோ என்று சந்தேகிக்கிறேன்..
என் நேசர் இயேசுவுக்காக ஜீவனைக் கொடுப்பதிலிருந்து என்னைப் பின்வாங்க வைக்க நீ முயற்சிக்காதே.."

அவனது தீர்மானம் அவளை உடைக்க..
அவள் தன்னையும் மனப்பூர்வமாய் கிறிஸ்துவுக்குக் கையளிக்கிறாள்..

அவளது முடிவைக் கண்ட கவர்னர் அரியேனுஸ்..ஒரு பெண் எப்படியெல்லாம் சித்ரவதை செய்யப்படக் கூடாதோ அப்படிப்பட்ட சித்ரவதைகளுக்கு அவளை ஆளாக்குகிறான்..

கடைசியாக
திமோத்தி-மௌரா இருவரும் ஒன்றாக அருகருகே சிலுவையில் அறையப்படுகின்றனர்..

தகப்பனே!

எங்களால் நம்ப முடியவில்லை ஐயா!

திமோத்தி-மௌரா போன்றவர்கள் கைகளைக் கடந்து வந்த கிறிஸ்தவம் அல்லவா இன்று எங்கள் கரங்களில் உள்ள சுவிசேஷம்?

இன்றைய இளம் தம்பதிகள் இவர்களை நம்ப மறுப்பார்களோ?
வாயடைத்து விக்கித்துப் போகிறோம் ஐயா!

இதைப் படிக்கிற, கேட்கிற இளம் சந்ததி தன்னை எதற்கும் தயார் படுத்திக் கொள்ள பக்குவப் படுத்திவிடுவீராக!

"இன்னும் அநேகக்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது..
அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்" என்று இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து தான் சொன்னீரோ?(யோ 16:12)

எங்கள் சிந்தனைகள் இவைகளைப் போன்ற மிகத் தீவிரமான ஆவிக்குரிய காரியங்களிலிருந்து லௌகீக கவலைகளிலும் நாட்டங்களிலும் சிக்கிக் கொள்ளாதபடிக் காத்துக் கொள்வீராக!

தலை தாழ்த்துகிறோம்!

ஆமென்.

CHAPTER-28

இரத்த சாட்சியான
பெஸில் - போட்டாமியானா

CHAPTER-28

" பெஸில் & போட்டமியானா "

அலெக்ஸாண்ட்ரியாவில் அந்த நாட்களில் இருந்த பைபிள் காலேஜ் மாணவன் பெசில்..

தன் படிப்பை முடித்தவன் ரோம இராணுவத்தில் சேர்ந்தான்..

அலெக்ஸாண்ட்ரியாவின் கோர்ட் வளாகத்தையும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படுகிறவர்களையும் பாதுகாக்கும் வேலை அவனுக்கும் அவனது காவலர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது..

அவனோடு இருந்தவர்களுக்கு எந்த உணர்ச்சியும் இல்லாதிருந்தும்..

பெசிலுக்கோ..அங்கே கொண்டு வரப்படும் கிறிஸ்தவக் கைதிகளும் அவர்கள் படும் சித்ரவதைகளும் தாங்க முடியாததாய் இருந்தது..

ஒரு நாள் ஒரு தாயும் மகளும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள்..

தாய்-மார்சிலா
மகள்-போட்டமியானா

தாயைக் காட்டிலும் இளவயது மகள் மிக அதிகமான சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டிருந்தாள்..

கோர்ட்டில் அவளுக்கு முன்பாக இரண்டு வாய்ப்புகள் கொடுக்கப்படுகிறது..

ஒன்று..
கிறிஸ்துவை மறுதலி அல்லது க்ளேடியேட்டர்ஸ் என்ற சண்டையிடும் அடிமைகள் கையில் கற்பு அழிக்கப்பட கையளிக்கப்படுவாய்..

இரண்டிலிருந்தும் தப்பிக்க ஒரே வழி தான் அவளுக்குத் தென்பட்டது..

அவள் ஜட்ஜைப் பார்த்துச் சொன்னாள்..
"இயேசுவை அல்ல..
உன்னைப் போன்றவர்களை பிசாசாய் ஆக்கி வைத்திருக்கும்
உன் செத்த தெய்வங்களை சபிப்பேன்.."

அங்கே நின்ற பெசிலைப் பார்த்து..
"கொண்டு போ இவளை..
எரியும் தீக்குழியில் தூக்கிப்
போடு உடனே..!" என்றான் ஜட்ஜ்..

செய்வது அறியாமல் ஒரு நிமிடம் திகைத்து நின்ற பெசில்..
அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு அவளைக்
கைத்தாங்கலாக
பரிவோடு கூட்டத்தைத் தள்ளி விட்டு வெளியே நடத்திச்
செல்கிறான்..

அவனது கரிசனையைக் கண்ட போட்டமியானா..
"உன் அன்புக்கு நன்றி!
உன் தைரியத்தைக் கண்டு மெச்சுகிறேன்" என்கிறாள்.

"நானல்ல..உன் தைரியம் தான் என்னை
அசைத்துவிட்டது.."என்ற பெசிலின் கண்களில் கண்ணீர்
ததும்புகிறது..

போகும் வழியிலேயே போட்டமியானா சொல்கிறாள்..

"இன்று நான் என் நேசரோடு பரலோகத்தில்
இளைப்பாறுவேன்..
என்னால் உன் அன்புக்கு ஈடாக எதுவும் செய்ய இயலாது.."

"இந்த சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்கிறீர்களோ அதை
எனக்கே செய்தீர்கள்" என்றாரே..அவரிடம் இன்று உனக்காக
ஜெபிப்பேன்..

சிறிது நேரத்தில் போட்டமியானா
மரித்து விட..சிறிது நேரத்தில் அவள் தாயும் கொலைக்
களத்துக்குக் கொண்டு வரப்படுகிறாள்..

சில நாட்களுக்குப் பின்..
பெசிலும் அவன் காவலர்களும் ஒரு உறுதி மொழி
எடுத்துக்கொள்ளக் கட்டளையிடப் படுகிறார்கள்.

பெசில் மறுத்து விடுகிறான்.

கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்ட பெசில் அங்கு துணிந்து இயேசுவுக்காக சாட்சி சொல்கிறான்..

வாளால் வெட்டப்பட தீர்ப்பாகிறது..

தன் தண்டனையின் நாளுக்காக சிறையில் காத்திருந்த பெசிலை சந்திக்க உள்ளூர் சபையினர் சிலர் இரகசியமாக வருகின்றனர்

அவன் சொல்கிறான்..
"போட்டமியானா இறந்து மூன்று நாட்கள் சென்று என் கனவில் நான் அவளைப் பார்க்கிறேன்..

அவள் கையில் ஒரு கிரீடம்.. என் தலையில் அதை வைத்து அவள் சொல்கிறாள்..

"பெசில்..நான் உனக்காக இயேசுவிடம் ஜெபித்தேன்..
நீயும் சீக்கிரமே இங்கு வருவாய் என்று உன்னைக்குறித்து அவர் எனக்குச் சொல்லியிருக்கிறார்..
நான் உனக்காக எதிர்பார்த்திருக்கிறேன்.."

இதைக் கேட்டு அவன் விசுவாசத்தைக் கண்ட மூப்பர்கள் அவனுக்கு அங்கு சிறையிலேயே ஞானஸ்நானம் கொடுக்கின்றனர்..

அடுத்த நாள் கொலைக் களத்தில் இயேசுவை மகிமைப்படுத்தினவனாய் தலை வெட்டப்படத் தன்னை மகிழ்ச்சியாய் ஒப்புக் கொடுக்கிறான் பெசில்..

தகப்பனே !

சிறு பிள்ளையைப் போல எங்களை அமரப் பண்ணி.. உமக்காக உயிர் விட்ட ஒவ்வொருவரையும் பற்றி ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொடுக்க நீர் எவ்வளவு கவனமாய் இருக்கிறீர் ஐயா!

இதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில் நீர் எவ்வளவு அக்கறை உள்ளவராய் இருக்கிறீர்!

எங்கள் பிஸியான ஷெட்யூல்களுக்கு மத்தியிலும் இவைகளை வாசித்து, தியானித்து இதன் மூலம் உம் இருதயத்தைப் புரிந்து கொள்ளவும்.. நீர் எங்களோடு பேச விரும்புவதைக் கேட்கவும் கிருபை தாரும்!

ஆமென்..

CHAPTER-29

எரித்துக் கொல்லப்பட்ட போலிகார்ப்

CHAPTER-29

" போலிகார்ப் "
சிமிர்னா சபைப் போதகர்

அது கி.பி.161..
மர்க்குஸ் அவுரேலியஸ் மன்னனின் நாட்கள்..

சிமிர்னா சபை..

அப்போஸ்தலன் யோவானால் அந்தச் சபைக்கு ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள்..

"நீ படப் போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே..
பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்..

**பத்து நாள் உபத்திரவப் படுவீர்கள்..மரணபரியந்தம் உண்மையாயிரு.." (வெளி 2:10)*

அந்தச் சபை படப் போகிற பாடுகளைக் குறித்த எவ்வளவு துல்லியமான தீர்க்கதரிசனம்!

சபை அசுர வேகத்தில் வளர்ச்சி கண்டு கொண்டிருந்த நேரம்..
உள்ளூர் பெருந்தலைகள்
நிம்மதி இழந்தனர்..

அப்போது சபையின் போதகர் போலிகார்ப்..
அப்.யோவானிடம் வளர்ந்தவர்..

ஒருநாள் சிமிர்னா கொதித்தது..சபையை நசுக்கத் தன் முழு அதிகாரத்தையும் அந்நகரின் கவர்னரே திருப்பிவிட..

போலீஸ்..போதகர் போலிகார்ப்பைத் தேட ஆரம்பித்தது..

தான் பிடிபடுவதற்கு மூன்று நாட்கள் முன்பு போலிகார்ப் ஒரு கனவு கண்டார்..
“தூங்கிக் கொண்டிருக்கும் போது அவரது தலையணை தீப்பற்றி எரிவது போல்.."

விழித்தெழுந்தவர்..
தன்னோடு இருந்தவர்களிடம் சொன்னார்..
"கிறிஸ்துவுக்காக நான் உயிரோடு கொளுத்தப்படப்
போகும் நாள் வந்து விட்டது.."

ஒருநாள் மாலை அவரது வாசல் கதவு தட்டப்
படுகிறது.. போலீசை வரவேற்க எழுந்து
செல்கிறார் போலிகார்ப்..

அவர்களை அமர வைத்து உணவு பரிமாறச் செய்கிறார்..
அவர் கேட்டுக் கொண்டபடியே அவருக்குத் தனிமையில்
ஜெபிக்க ஒருமணி நேரம் கிடைக்கிறது..

ஜெபித்து முடித்ததும் தன்னைக் கைது செய்ய
வந்தவர்களுடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் எழுந்து
செல்கிறார்.. வந்தவர்கள் தங்களுக்காக ஜெபித்த
வயதான தேவ மனிதரை
வேதனையுடன் கொண்டு செல்கின்றனர்..

அவர் காவலர்களுடன் ஸ்டேடியத்தை அடைந்ததும்..
வானத்திலிருந்து ஒரு குரல் கேட்கிறது..

"போலிகார்ப்..
புருஷனைப் போல் இடைக்கட்டிக் கொள்..
தைரியமாய் நில்..
கலங்காதே.."

ஒருவரையும் காணாவிட்டாலும்
அந்தக் குரலை அநேகர் கேட்டனர்..

நீதிபதிக்கு முன் கொண்டு வரப்பட்ட
போலிகார்ப்பைப் பார்த்து நீதிபதி சொன்னார்
"உன் வயதைப் பார்..
கிறிஸ்துவை மறுதலி..
நீ ஏன் எரிக்கப்பட வேண்டும்?"

தேவமனிதன் பதிலளித்தார்
"இதோ..86 வருடங்கள்
என் ஆண்டவரை நான் சேவித்திருக்கிறேன்..
ஒரு நாளும் அவர் எனக்கு நன்மையே அன்றி
தீமை செய்ததே இல்லை..

என்னை இரட்சித்த ராஜனை நான் சபித்து மறுதலிப்பது எப்படி?"

காட்டு மிருகங்களாலும் எரியும் அக்கினியினாலும் மிரட்டப்பட்ட போலிகார்ப் சொன்னார்..

"சிறிது நேரம் எரிந்து அணைந்து போகும் அக்கினியைக் காட்டி நீங்கள் மிரட்டலாம்..

ஆனால் நித்திய நித்தியமாய் எரியும் அவியாத நியாயத்தீர்ப்பின் அக்கினிக்கு முன்பாக என்ன செய்வீர்கள்?"

எடுத்துச் செல்லுங்கள் என்னை..தாமதிக்காமல்.. என்றார்..

கட்டப்பட்ட போலிகார்ப்பைச் சுற்றிக் கட்டைகள் அடுக்கப்பட்டு நெருப்பு மூட்டப்பட்டது..பற்றிய நெருப்பு அவரைத் தொடவில்லை..

அவரைச் சுற்றி நெருப்பு வளையம் நின்றதே அன்றி அக்கினி ஜூவாலை அவரைப் பற்றவில்லை..

எரிச்சலடைந்த கூட்டம் அருகில் நின்ற காவலனைப் பார்த்துச் சொன்னது..
"வாளை உருவிக் கொன்று போடு அவனை.."

வாளை ஓங்கி அவன் குத்த..பீறிட்டு வந்த இரத்தத்தால் நெருப்பு அணைந்து போனது என்கிறது வரலாறு..

ஆத்திரம் அடைந்த கும்பல் அவர் மேல் கட்டைகளைப் போட்டு எரித்து சாம்பலாக்கியது..

ஆனால் வயதான போதகரின் மரணம்.. நகரில் ஒரு பெரிய அசைவை உண்டாக்க.. அதோடு நின்று போனது உபத்திரவம்..

சிமிர்னா சபை மீண்டும் வளர ஆரம்பிக்கிறது..

கர்த்தராகிய இயேசுவே..
சரீரத்தைக் கொலை செய்கிறவர்களுக்கு அல்ல..
அதற்குப் பின்பு நரகத்தில் தள்ள வல்லமையுள்ளவருக்கே பயப்படுங்கள்" என்றீரே..

தகப்பனே..உமக்குப் பயப்படும் பயத்தோடு வாழவும்..எங்களை எதிர்க்கும் சக்திகளை பயமின்றி நேருக்கு நேர் எதிர் கொள்ளவும் கிருபை தாரும்..

ஆமென்

CHAPTER-30

அர்மீனியாவின் "அந்த 40 பேர்"

CHAPTER-30

" அந்த 40 பேர் "

கிபி 320..

மத்திய கிழக்கு துருக்கியின்
செபாஸ்டி நகரம்..

ரோம இராணுவத்தின் 12வது பட்டாளம்..
சின்ன அர்மீனியா என்ற இந்த இடத்தில் கிட்டத்தட்ட நூறு வருடங்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது..

இந்த ஏரியாவில் இருந்த பார்த்திய அரசு ரோம சாம்ராஜ்யத்துக்கு எப்போதும் குடைச்சலாகவே இருந்து வந்த ஒரே காரணத்தினால் நிரந்தரமாகவே ரோமப் படைகள் அங்கு நிறுத்தப்பட வேண்டியதாயிற்று..

அந்த நாட்களில் அர்மீனியாவில் இருந்த அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டபடியினால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போனது..

அதில் ரோம ராணுவத்தின் 12வது பட்டாளத்தைச் சேர்ந்த பல வீரர்களும் இருந்தனர்..

இந்த சமயத்தில் தான் ரோமச் சக்கரவர்த்தி லிசினியஸ் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தனது அடக்குமுறையை அவிழ்த்து விட்டான்..

செய்தி அர்மீனியாவை வந்தடைகிறது..அங்குள்ள கிறிஸ்தவர்களைக் கொன்று குவிக்க 12வது பட்டாளத்துக்குக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது..

ஆனால் அதிலிருந்த 40 வீரர்கள் தங்கள் கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் மேல் தங்கள் கைகளை நீட்ட உறுதியாய் மறுத்து விடுகின்றனர்..

இராணுவத் தளபதி லீசியஸ் மற்றும் அர்மீனிய கவர்னர் அக்ரிகோலா இருவரும் இராணுவ முகாமுக்கு வருகின்றனர்..

தேச கௌரவம், குடும்பம்,
வீரர்களின் எதிர்காலம்..
இன்னும் என்னென்னவோ சொல்லி "அந்த 40"
வீரர்களின் மனதைக் கரையப் பண்ண தலைகீழ்
பிரயத்தனம் செய்து பார்க்கின்றனர்..

ஒன்றும் பலிக்கவில்லை..
கிறிஸ்துவின் அன்பை விட்டு எதுவும்
அவர்களைப் பிரிக்க முடியவில்லை..

பொறுமை இழந்த லீசியசும் அக்ரிகோலாவும்
"அந்த 40"பேரையும் சவுக்கால் அடிக்கப்படவும்
சித்ரவதை செய்யப்படவும் கட்டளையிடுகின்றனர்..

சித்ரவதை சாதாரண வதை அல்ல..
கூரிய முள் கொக்கிகளை உடல் முழுவதும் மாட்டி
இழுத்து இழுத்து வதைக்கும் கொடும் வதை..

அதற்கும் பணியாமல் போகவே..
40 பேரும் சிறையில் அடைக்கப் படுகின்றனர்..

சில நாட்களுக்குப் பின் லிசியஸ் வருகிறான்..
கொஞ்சமாவது மனம் மாறியிருப்பார்கள் என்ற
நம்பிக்கையுடன்..ஆனால் ஏமாற்றமே மிஞ்சுகிறது..

அவர்களது விசுவாசத்தை எதுவும் அசைக்க
முடியவில்லை..
கடைசியாக உக்கிரத்தின் உச்சிக்குச் சென்றனர்
லீசியசும் அக்ரிகோலாவும்..

இதற்குள் அர்மீனியாவை மூடுகிறது கொல்லும்
உறைபனிக்காலம்..

40 வீரர்கள் இருந்த ஜெயிலின் அருகில் இருந்த
குளத்தின் தண்ணீர் பனிக்கட்டியாகி உறைந்துவிட..
தளபதியும் கவர்னரும் இட்ட கட்டளையின் பேரில்..

40 பேரும் முழுவதும் ஆடைகள் உரியப்பட்டு
வெறும் உடலோடு குளத்தின் நடுவில் இரவின்
கொல்லும் பனியில் நிறுத்தப்படுகின்றனர்..

"முடிவை மாற்று அல்லது விறைத்து செத்துப் போ!"

நிறுத்தப்பட்ட 40 பேரும் தாங்கள் கிறிஸ்துவோடு சீக்கிரம் வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு ஒருவரை ஒருவர் திடப்படுத்திக் கொண்டு மனதளவில் தயாராகிக் கொள்கின்றனர்

இதற்குள் தளபதி ஒரு வேலை செய்கிறான்..

அவர்களை சோதிக்கவும் அவர்கள் உறுதியைக் குலைக்கவும் அவர்கள் கண்ணெதிரே ஒரு நீச்சல் தொட்டி நிறைய வெந்நீர் நிரப்பி சிறிது தூரத்தில் அவர்கள் பார்வையில் படும்படி வைக்கிறான்..

குளிர் தாங்க முடியாமல் தங்கள் முடிவை மாற்றட்டும் என்று..

இரவின் கொல்லும் குளிர்..
நிர்வாணமாய் 40 பேர்.. குளத்தின் நடுவில்..
கர்த்தரைப் பாடித் துதித்துக் கொஞ்சம் கொஞ்சமாய் அந்த அர்மீனியக் குளிரில் உறைய ஆரம்பிக்கின்றனர்.

நேரம் மெதுவாய்க் கடக்கிறது..சிலர் சத்தமாய் ஜெபிக்கின்றனர்..
"தேவனே எங்களை பெலப்படுத்தும்.."

சரித்திரம் சொல்கிறது..
அவர்களில் ஒருவன் இப்படி ஜெபிக்கிறான்..

"தகப்பனே! நாங்கள் 40 பேர் இந்தப் போராட்டத்தில் நிற்கிறோம்..வேதத்தின் மிக இன்றியமையாததான எண்ணாகிய இந்த 40 எண் கொண்ட எங்களில் ஒருவராகிலும் குறைந்து விடாதபடி எங்களைக் காத்து எங்களில் ஒவ்வொருவரும் கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள கிருபை தாரும் !"

நேரம் நகர்கிறது..
கரி நெருப்பு மூட்டப்பட்ட தூரத்திலிருந்து ஒரு கூட்டம் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது..

40 பேரின் உடல்களின் அங்கங்கள் விறைக்கத் தொடங்க..அவர்களில் ஒருவன் தூர இருக்கும் நெருப்பையும் வெந்நீரையும் பார்க்கிறான்..அவன் மனம் பேதலிக்கிறது..

மற்ற 39 பேரின் வேண்டுதலையும் பாராமல் ஓடிவந்து வெந்நீர்த் தொட்டியில் விழுகிறான்..
விழுந்தவன்..அதிர்ச்சியோ தேவ கரமோ தெரியாது..
செத்துப் போகிறான்..
கர்த்தரே அறிவார்..

வெந்நீர்த் தொட்டிக்கு அருகே காவலுக்கு நிறுத்தப் பட்டிருந்த ஒரு இராணுவ வீரன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான்..

அவர்களை அவன் உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருக்கும் போதே..
இது வரை கிறிஸ்தவனாய் இல்லாத அவன்.. ஒரு தரிசனத்தைப் பார்க்கிறான்..

தேவ தூதர்கள் வெண் ஆடையில் இறங்கி வந்து அவர்களைத் தைரியப் படுத்துவதையும்..
பரலோகம் திறந்து இயேசு அவர்களுக்காக ஆவலோடு காத்திருப்பதையும் காண்கிறான்..

அவனால் தன்னை அடக்க முடியவில்லை..இயேசுவின் அன்பு அவனுக்குள் அனலாய் எரிய..தன் இராணுவ உடைகளையும் ஆயுதங்களையும் களைந்து விட்டு வெறும் உடலோடு குளத்தின் மையத்தை நோக்கி நடக்கிறான்..

"இதோ நீங்கள் 39 அல்ல.. நாற்பதாவதாக நான் வந்திருக்கிறேன்..
இந்த எண் பூரணமாகட்டும்..
என்னைக் கிறிஸ்துக்கு சமூலமாய் அர்ப்பணிக்கிறேன்.."

மற்றவர்கள் அவனை மகிழ்ச்சியோடு வரவேற்க..
"அந்த 40"பூரணமாகிறது..

அன்று இரவின் இருளில்..
அமைதியாய்..
அதே நேரம் கொடுமையாய் அந்த அர்மீனியக் குளிர் தன் வேலையை சுத்தமாய் செய்து முடித்து விட்டிருந்தது..

காலையில் ஒருவர் விடாமல் அந்த 40 பேரும் சடலமாகி இருந்தார்கள்..அவர்கள் உடல்களை வண்டியில் ஏற்றி எரித்து சாம்பலாக்கச் சொல்கின்றான் தளபதி..

சடலங்கள் வண்டியில் ஏற்றப்படுகின்றன..

ஒரு வீரனின் தாய் தன் இளம் மகனைக் கடைசியாய் ஒரு முறை பார்த்துவிட ஓடி வருகிறாள்..

அந்த மகனின் உடலில் லேசாக உயிர் இருக்க..அவன் கடைசியாய்த் தன் தாயைப் பார்த்து லேசாகப் புன்முறுவல் செய்கிறான்..

"என் ஜீவன் இயேசுவுக்கே" என்பதாக இருக்கிறது அந்தப் புன்முறுவல்..

சரித்திர ஆசிரியர் சொல்கிறார்..
"அவர்கள் எரிக்கப்பட்டு மேல் எழும்பி கீழிறங்கிய புகை..

அந்த 40 பேரும் மீண்டும் அந்த மண்ணில் விதையாக விதைக்கப்பட்டது போல் இருந்தது" என்று..

எவ்வளவு வேகமாய்க் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்களோ அவ்வளவு வேகமாய் மீண்டும் கிறிஸ்தவம் அங்கு பரவியது என்கிறது வரலாறு..

செபாஸ்டியின்
"அந்த 40 பேர்"

CHAPTER-31

வனவிலங்குகளுக்கு இரையான அந்தியோக்கியா இக்னேஷியஸ்

CHAPTER-31

அந்தியோக்கியா இக்னேஷியஸ்

பவுலின் மரணத்தோடு..
அப்போஸ்தலர்களின் தலைமுறை முடிவு பெற..

நீரோ தனக்கு விரோதமாய் எழும்பின ஒரு கலகக் கூட்டம் கண்டு பயந்து..தற்கொலை செய்து கொண்டான்..

இப்போது கிபி 107..
த்ராஜன் என்னும் ராயனின் ஆட்சி..

த்ராஜனின் சாம்ராஜ்யத்தின் வெவ்வேறு நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பல கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன..

ஏறக்குறைய கிபி 107 ம் ஆண்டு..

அந்தியோக்கியா பட்டணத்தில் கடுமையான தேடுதல் வேட்டை..கிறிஸ்தவர்களைக் குறிவைத்து..

சிறைப்
பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர்..அந்தியோக்கியாவின் பிஷப்..இக்னேஷியஸ்..

அப்போஸ்தல முற்பிதாக்களில் மிக முக்கியமானவர்..
அந்தியோக்கியா சபையின் பாதுகாவலராக இருந்தவர்..

வயதான தேவ மனிதர் ..அந்த நகரின் கவர்னருக்கு முன்பாக நிறுத்தப் படுகிறார்..
இயேசுவை மறுதலிக்க வற்புறுத்தப்பட்டபோது மறுத்தவரை..

ரோம் நகருக்கு..சிங்கங்களுக்கு இரையாகிப் போக அனுப்பபப்பட ஆணை பிறப்பிக்கப் படுகிறது..

பத்து காவலர்கள் சூழ.. அந்தியோக்கியாவிலிருந்து ரோமுக்கு இழுத்துச் செல்லப் படுகிறார் இக்னேஷியஸ்..

நீண்ட நெடும் பயணம்..ஏஷியா மைனர் வழியாக பல பட்டணங்களைக் கடந்த பயணம்..
இடையில் தங்கும் இடமெல்லாம் ஆங்காங்கே உள்ள சபைகளின் விசுவாசிகள் அவரை சந்திக்க வருகிறார்கள்..

எவ்வித வேதனையோ கலக்கமோ பயமோ இன்றி, வந்தவர்கள் யாவரையும் கிறிஸ்துவுக்குள் உற்சாகப்படுத்தி.. விசுவாசத்தில் உறுதிப்படுத்துகிறார்..

அவரைக் கண்ட யாவரும் ஆவியில் உந்தப்படுகிறார்கள்.. வழியில் கிடைத்த நேரத்தில் ஏழு மிக முக்கியமான கடிதங்களை எழுதுகிறார்..

இன்று வரை இக்கடிதங்கள் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு பக்தியுடன் வாசிக்கப்படுகின்றன..

சிமிர்னாவில் தங்கியிருந்த நாட்களில் கடைசியாக ரோம் சபைக்கு எழுதுகிறார்..

"நான் தீயால் சுட்டெரிக்கப்பட்டாலும் என்ன? சிலுவையில் அறையப்பட்டாலும் என்ன? சிங்கங்களுக்கு இரையானாலும் என்ன?

என் எலும்புகள் நொறுக்கப்பட்டாலும் என்ன ? என் அவயவங்கள் நார் நாராய்க் கிழிக்கப்பட்டாலும் என்ன?

என் முழு சரீரமும் சக்கையாய்ப் பிழிந்து போடப்பட்டாலும் என்ன?

இயேசுவை சொந்தமாக்கிக் கொள்ளும்படி எதற்கானாலும் என்னை சமூலமாய் ஒப்புக்கொடுக்கிறேன்..

என்னை இதிலிருந்து விடுவிக்கும்படி சபை முயற்சிக்க வேண்டாம்..நான் ஆவலாய் ஏங்கும் இரத்தசாட்சி மரணத்துக்கு
என்னை விட்டு விடுங்கள்.."

டிசம்பர் 20..ரோம்..
ராயனின் கட்டளை நகல் தண்டனை நிறைவேற்றும் அதிகாரியிடம் கையளிக்கப்பட..

கொலோசியம் என்ற கொலைக் களத்துக்குக் கூட்டத்துக்கு முன்பாக வேடிக்கைப்பொருளாகக் கொண்டு வரப் படுகிறார் தேவமனிதர் இக்னேஷியஸ்.

பின்னால் உறுமும் சிங்கங்களின் கர்ஜனை..ஸ்டேடியத்தில் ஜனங்களின் ஆரவாரம்..

எதைப்பற்றியும் கவலைப்படாத இக்னேஷியஸ் சொன்னார்..

"நான் கிறிஸ்துவின் கோதுமை மணி..
சிங்கங்களின் பற்களுக்கு இரையாகி பரிசுத்த அப்பமாய்க் காணப்பட என்னையே ஒப்புக் கொடுக்கிறேன்.."

நடந்தது அதுவே..
பல நாட்கள் பட்டினி போடப்பட்டிருந்த இரண்டு சிங்கங்கள் சீறிப் பாய..தன் ஜீவனைக் கொடுத்தார் இக்னேஷியஸ்-
கோதுமை மணியாக..

தகப்பனே..
கிறிஸ்துவின் அன்பை விட்டு எங்களைப் பிரிப்பவன் யார்?

உபத்திரவமோ..
நாசமோசமோ..
பட்டயமோ?

மரணமானாலும் ஜீவனானாலும் ..
கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு எங்களைப் பிரிக்காது"

தகப்பனே..இந்த வார்த்தைக்கு நாங்கள் உண்மையாய் நிற்க எங்களுக்குக் கிருபை தருவீராக..

ஆமென்.

CHAPTER-32

தத்துவ ஞானி ஜஸ்டின்

CHAPTER-32

"ஜஸ்டின்" தத்துவ ஞானி

நாளுக்கு நாள் ரோம ராஜ்யத்தில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்..

இந்த முறை ஒரு ரோமப்பெண் - வரலாறில் பெயர் இல்லை..

பாவத்திலும் குடியிலும் இருந்து சமீபத்தில் தான் கிறிஸ்துவிடம் மனம் திரும்பியிருந்தாள்..

தன்னைப் போலவே பாவத்தில் ஊறிக்கிடந்த தன் கணவனையும் கிறிஸ்துவிடம் நடத்த முயற்சிக்கிறாள்..

அவளது அன்பும் சாட்சியின் வாழ்வும்..எதுவும் அவனை அசைப்பதாக இல்லை..நாளுக்கு நாள் பாவத்தைத் தண்ணீராகக் குடிக்கிறான்..

கடைசியாக வேறு வழியின்றி அவனிடத்திலிருந்து விவாகரத்து கேட்கிறாள்..

அவளது கிறிஸ்தவ சகோதரர்கள் அதை ஆதரிக்க மறுத்து அவளை சமாதானப் படுத்த முயற்சிக்கிறார்கள்..
"அவன் திருந்தி விடுவான்''
என்று..

இதற்குள் சிறிது காலம் வெளிநாடு சென்று திரும்பினவன் இன்னும் மோசமாகிறான்..

வேறு வழியின்றி விவாகரத்து கோருகிறாள்..
கேஸ் கோர்ட்டுக்கு வர..

அவன் சொல்கிறான்..
"இவள் ஒரு கிறிஸ்தவள்..
கொல்லுங்கள் இவளை.."

கோர்ட் ஜனங்களால் நிரம்பியிருக்கிறது..

"இதோ! இந்த ப்டோலியுமிஸ்..
இவன் தான் இவளைக் கிறிஸ்தவளாய்
மாற்றினான்..பிடியுங்கள் இவனை..
கத்துகிறான்

இதற்குள் ப்டோலியுமிஸின் நண்பன் லூசியுஸ் அவனுக்கு ஆதரவாகக் கோர்ட்டில் வாதாட..அவனும் கைது செய்யப் படுகிறான்..

இப்போது உள்ளே நுழைகிறார்..
ஜஸ்டின் என்ற தத்துவ ஞானி..ரோம் நகரில் எல்லோராலும் அறியப்பட்டவர்..

கோர்ட்டுக்கு சவால் விடுகிறார்..

நான் படித்த எல்லா மதங்களுக்கும் நான் அறிந்த எல்லாத் தத்துவ ஞானங்களுக்கும் மேலான ஒன்று உண்டென்றால்.. அது கிறிஸ்தவம்..அதைப் போதித்த இயேசு கிறிஸ்து..

என்னோடு வாதிட உங்களுக்கு நியாயமிருந்தால் முன் வையுங்கள் உங்கள் நியாயத்தை..வாதத்தை..

மனிதனின் முகத்துக்குக் கலங்காத ஜஸ்டினை எதிர்க்கத் தைரியமில்லாத ஜட்ஜ்..ஜஸ்டினையும் கைது செய்கிறான்..

"நீங்கள் எங்கள் தலைகளை வெட்டலாம்..நித்திய
நியாயத்தீர்ப்பில் எங்கே நிற்பீர்கள்?
இராஜாதி ராஜாவான அந்த நியாயாதிபதிக்கு முன்பாக
உங்கள் நியாயம் நிலை நிற்குமோ..?"

உயிரைப் பொருட்படுத்தாமல் தைரியமாய் முழங்கின நால்வருடைய தலைகளும் சீவப்படுகிறது..

தகப்பனே..
அன்று அப்போஸ்தலர்கள் தைரியத்திற்காக
ஜெபித்தார்களே!

"அவர்கள் முகத்துக்கு முன்பாக அஞ்சாதிரு..இதோ!
தேசமனைத்துக்கும் ராஜாக்களுக்கும்

பிரபுக்களுக்கும்..அதின் ஆசாரியர்களுக்கும் தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றைய தினம்.. இருப்புத்தூணும் வெண்கல அலங்கமும் ஆக்கினேன்.."என்றீரே !

எங்கள் சகோதரருக்குள்ளே விசேஷித்தவர்களான அறிவும் புத்தியும் ஞானமும் விவேகமும் உள்ளவர்கள் தைரியமாய் எழும்புவார்களாக!

நித்திய நியாயத்தீர்ப்புக்கு மாத்திரம் நடுங்கக் கிருபை தாரும்! ஆமென்..

CHAPTER-33



கலேரியஸ்

CHAPTER-33

"ஜஸ்டின்" தத்துவ ஞானி

டயோக்ளீஷியனின் நாட்களில் நடந்து கொண்டிருந்த வன்முறை ஒருபக்கம் இருக்க..

அவனது வளர்ப்பு மகனும் பட்டத்து இளவரசனுமான கலேரியஸ்..தன் தாயின் தூண்டுதலின் பேரில் கிறிஸ்தவர்களைத் தேசத்திலிருந்து துடைத்துப் போட தன் தகப்பனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டான்..

நாள் குறிக்கப்பட்டது-
கிபி 303 பிப்ரவரி 23..

டயக்ளீஷியனின் கிழக்கு ராஜ்யத்தின் தலைநகர் நிக்கோமீதியா..

அதிகாலை நேரம்..
போலீஸ் IGயும் அவனுக்குக் கீழிருந்த போலீஸ் படையும் நுழைந்தது..அங்கிருந்த பெரிய கிறிஸ்தவ ஆலயத்துக்குள்..

கண்மூடித்தனமாக அடித்து நொறுக்கி..
வேத புத்தகங்களையும் அங்கிருந்த லைப்ரரியையும் தீ வைத்தனர்..

கிறிஸ்தவத்தின் முடிவை ஆரம்பித்து வைக்கும் அந்த முதல் நாள் சம்பவங்களை தாங்களே நேரில் பார்வையிடச் செல்கின்றனர்..
டயக்ளீஷியனும் கலேரியசும்..

வெறும் புத்தகங்களைக் கொளுத்துவதைக் கண்டு வெறுப்பேறிய டயக்ளீஷியன்..

"நாட்டிலுள்ள ஆலயங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கி கிறிஸ்தவன் ஒருவன் விடாமல் கைது செய்" என்று கட்டளையிடுகிறான்.

அவனது கட்டளையின் நகல் பொது இடத்தில் ஒட்டப்படுகிறது..இதைக் கண்ட துணிச்சலான ஒரு கிறிஸ்தவர்..அதைக் கிழித்தெறிய..அவர் கைது செய்யப்பட்டு எரித்துக் கொல்லப்படுகிறார்..

நிக்கோதேமியாவில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான்..

கலேரியஸ் தானே அரண்மனையைத் தீக்கொளுத்தப் பண்ணி..பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் போட்டு..கலவரத் தீயை இன்னும் ஊதிவிட..

அந்த நகரில் ஆரம்பித்த கலவரம்..தேசம் முழுவதும் பற்றி எரிய..அடுத்த பத்து வருடங்கள் அந்த உபத்திரவத் தீயை அணைக்கவே முடியவில்லை..

ஆணென்றும் பெண்ணென்றும் வயதொன்றும் பாராமல்.. ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் அந்தப் பத்து ஆண்டுகளில் கொன்று குவிக்கப்பட்டனர்..

"கிறிஸ்தவன்" என்ற பெயரே ரோமப் பேரரசில் வெறுப்பைக் கக்கும் பேராயிற்று..அவர்களுக்கு இரங்க ஆளில்லை..

புயலோ பூகம்பமோ கொள்ளை நோயோ..எது நடந்தாலும் பலிகடா கிறிஸ்தவன் தான்..
அவர்கள் பட்ட வதையும் வேதனையும் கற்பனை கடந்தது..

வீடுகளோடு முழுக்குடும்பங்கள் சாம்பலாக்கப்பட்டன.. நான்கைந்து பேராய் சேர்த்து சேர்த்துக் கட்டப்பட்டு அவர்கள் உடலில் பாராங்கல் கட்டப்பட்டு மர்மரா கடலில் மூழ்கடிக்கப் பட்டனர்..

தொழுமரம்..முள்சாட்டைகள்..தீவைத்தல்.. பட்டயம்..குறுவாள்..சிலுவைகள்..விஷம்..பட்டினி போடுதல்-இவை எல்லாம் கிறிஸ்தவர்களைத் தனித்தனியாகவும் மொத்த மொத்தமாகவும் கொல்ல உபயோகப்படுத்தப்பட்ட உபகரணங்கள்..

பிரிகியா என்ற கிறிஸ்தவர்கள் நிறைந்த பட்டணம் முழுவதும் தீக்கொளுத்தப்பட்டது..
அங்கு கொல்லப்படாத கிறிஸ்தவர்களே இல்லை..

"இதற்கு முடிவே இல்லையா?"
என்று அந்தந்த மாநில கவர்னர்கள் ராயனுக்கு எழுத..
ரோம சாம்ராஜ்யத்தின் உபத்திரவக் காலம் முடிவு பெறும் காலம் நெருங்கியது..

ஆனாலும் மீந்தவர்கள் நிலை உயிரோடு செத்த நிலை..

சிலர் காது வெட்டப்பட்டு..சிலர் மூக்கு அறுபட்டு..சிலர் கண் பிடுங்கப்பட்டு.. பலர் எலும்பு முறிக்கப்பட்டு..

கிறிஸ்தவன் என்று அடையாளம் காணப்படும்படி உடலின் தீக்காயங்களோடு..

சொல்லப்பட்ட இவை அனைத்தும்..நடந்து முடிந்த கோர தாண்டவத்தின் ஒரு சிறு பகுதி தான்..

ஆனால் வெளிவராத..
எழுதப்படாத..
சொல்லப்படாத இரத்தக் கதைகளுக்கும் அவல மரணங்களுக்கும் அளவே இல்லை..

அவைகள் பரலோகத்தின் நாளாகமப் புத்தகத்தில் அல்லவோ இருக்கிறது!

CHAPTER-34

வில்லியம் லித்கோ

CHAPTER-34

"வில்லியம் லித்கோ"

1580 ல் பிறந்த வில்லியம் லித்கோ ஒரு ஆங்கிலேயர்..

பயணம் செய்வதில் அதிக நாட்டம் கொண்டிருந்த லித்கோ..எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியாவுக்குச் செல்லும் வழியில் 9 பேர் வழிமறித்து அவர் மேல் ஒரு கறுப்பு அங்கியை வீசி அவரை ஸ்பெயினில் உள்ள மலகாவுக்கு இழுத்துச் செல்கின்றனர்..

"நீ ஒரு ஆங்கிலேய உளவாளி" என்பது அவர் மேல் சாட்டப்பட்ட குற்றம்..

அந்நாட்களில் ஸ்பெயின் ஒரு ரோமன் கத்தோலிக்க நாடாக இருந்தது..

"நான் ஒரு டூரிஸ்ட் தான்" என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும்..தான் ஒரு உளவாளி தான் என்பதை ஒப்புக் கொள்ள வைக்க கடுமையான டார்ச்சருக்கு உள்ளாக்கப்பட்டார் வில்லியம் லித்கோ..

கடைசியாக..
"போப்பாண்டவரின் ஆளுகையை நீ ஏற்றுக் கொள்கிறாயா?" என்று கேட்கப்பட்ட போது..
லித்கோ சொன்னார்..

"நான் செய்யாத குற்றத்துக்காக என்னை உளவாளி என்று சொல்லும் நீங்கள்..என்னை என் வேதத்தையும் மறுதலிக்க வைப்பீர்களோ? நான் செத்தாலும் சாகிறேன்" என்று ஒப்புக்கொடுத்தார்..

"நாங்கள் உன்னை உளவாளி என்று தான் நினைத்தோம்..ஆனால் உன் புத்தகங்களும் உன் வேதமும் உன்னை போப்பாண்டவரின் விரோதி என்றே காட்டுகிறது..

நீ உளவாளியைக் காட்டிலும் மிக மோசமான தேச துரோகி" என்று சொன்ன கோர்ட்..

"இன்னும் எட்டு நாட்கள் தவணை தருகிறோம்..
உன் முடிவை மாற்றிக் கொண்டு ரோம சபையின்
சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படி அல்லது
உன் முடிவை நீயே நிர்ணயிப்பாய்" என்று சொல்லியது..

8 நாட்கள் முடிந்தன..
கடைசியாக ஒரு தவணை கொடுக்கப்படுகிறது..
"உன் முடிவை மாற்றிக் கொள் லித்கோ..
நீ ஏன் சாக வேண்டும்?"

லித்கோ சொன்னார்..
"சாவோ நெருப்போ..
எதற்கும் எனக்குப் பயமில்லை..
நான் எதற்கும் தயார்.."

அன்று இரவு 11 வகையான வித்தியாச வித்தியாசமான
டார்ச்சர்களுக்கு உட்படுத்தப்படவும்..
அதையும் மீறி உயிரோடிருந்தால்..
வரும் ஈஸ்டருக்குப்பின் கிரனடா என்ற இடத்தில்
எரித்துக் கொல்லப்படவும் தீர்ப்பாகியது..

அன்றிரவு இரத்தத்தை உறைய வைக்கும் கடுமையான
சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார் லித்கோ..

லித்கோ ஸ்பெயின் நாட்டினராய் இல்லாமல் ஒரு
ஆங்கிலேயராய் இருந்தபடியால்..
அவருக்கு நடந்தவை யாவும் மிக
ரகசியமாகவே நடத்தப்பட்டன..

ஆனால் அந்த நகர மேயரின் வீட்டில் இரவு
விருந்தில் லித்கோவைப் பற்றிப்
பேசிக்கொள்ளப்பட்ட காரியங்கள்..
ஒரு வேலைக்காரப் பையன்
மூலம் வெளியே கசிந்து..

விஷயம் ஆங்கிலத் தூதரகம் வரை சென்று
பெரிதாக..சர்.வால்ட்டர் ஆஸ்ட்டன் என்ற
ஆங்கிலத் தூதரக உயரதிகாரி..

ஸ்பெயின் மன்னனிடம் பேசி..
லித்கோ விடுதலை செய்யப்பட்டார்..

இரண்டு மாதங்களுக்குப்பின் லித்கோ பாதுகாப்பாக இங்கிலாந்தில் உள்ள டெட்போர்டு துறைமுகம் வந்து சேர்ந்தாலும்..

அவரது இடதுகை அவர் வாழ்நாள் முழுவதும் செயல்பட முடியாததாகவே ஆகிப்போனது..

CHAPTER-35

போப்பாண்டவர்கள் காலத்து உபத்திரவங்கள்

CHAPTER-35

போப்பாண்டவர்கள் காலத்து உபத்திரவங்கள்

பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை கிறிஸ்துவின் விசுவாசிகள் உலகத்தின் பல ஜனங்களால் நெருக்கப்பட்டார்கள்..

ஆனால் கான்ஸ்ட்டான்ட்டைன் காலத்திலிருந்து சபை ரோமன் கத்தோலிக்க சபையாய் மாறிவிட்டிருந்தது மட்டுமல்லாமல் ..

தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான எல்லா உபதேசங்களுக்கும் மனித போதனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பூரண சத்தியத்தை விட்டு விலகிப்போயிருந்தது..

மேலும் ரோம சபையின் உபதேசங்களுக்கு விரோதமாய்க் குரல் கொடுத்த தன் சொந்த சகோதரர்களுக்கு விரோதமாகவே பட்டயத்தை உருவியது போப்பாண்டவரின் ரோம சபை..

முதல் மூன்று நூற்றாண்டுகளின் ஆதிசபையின் நிலை மாறி..சபை அன்பு கருணை,தாழ்மை, பரிசுத்தம் என்ற மிக முக்கியமான ஆவிக்குரிய காரியங்களை விட்டு விட்டு..

விக்கிரக ஆராதனைக்காரர்களின் பாரம்பரியத்துக்கும் உலக மாயைக்கும் தன்னை விற்றுப் போட்டிருந்தது ரோம சபை..

இந்த முறைமைகளுக்கு விரோதமாய்க் குரல் கொடுக்கும் யாராயிருந்தாலும் அவர்கள் "துரோகி" பட்டம் கட்டப்பட்டு கொல்லப்பட ஆரம்பித்தனர்..

அடுத்து வந்த பல நூற்றாண்டுகள்..பழைய ரோம சாம்ராஜ்யம் போப்பாண்டவர்களின் ராஜ்யமாகி.. உலகமெங்கும்..வெறி கொண்ட மிருகம் போல் கிறிஸ்துவின் உண்மை விசுவாசிகளை பலி கொண்டது..

கொல்லப்பட்டவர்களுக்கும் சித்ரவதைப் பட்டவர்களுக்கும் அங்கவீனப் பட்டவர்களுக்கும் அளவே இல்லை..

இந்தப் போப்பாண்டத் தாண்டவத்துக்கு முதல் பலி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த "வால்டென்செஸ்" என்ற சபையினர்..

CHAPTER-36

கொதி நீரில் வால்டென்செஸ்

CHAPTER-36

" வால்டென்செஸ் "

கிபி 1173..

பிரான்ஸ் நாட்டு லியோன் நகரைச் சேர்ந்த "பீட்டர் வால்டோ" என்ற செல்வந்தரான வியாபாரி கர்த்தரிடத்தில் மனந்திரும்பி தன் சொத்து சுகங்களை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு..வேதத்தை வாசிக்கவும் வேதத்தை பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்துத் தன் நாட்டு ஜனங்களுக்குப் போதிக்கவும் ஆரம்பிக்கிறார்..

அநேகர் இயேசுவை ஏற்றுக்கொள்கின்றனர்..இவருக்குப் பின்சென்றவர்கள்
"வால்டென்செஸ்"என்று அழைக்கப்பட்டனர்..

முதலில் தன் முயற்சிகளுக்கு போப்பாண்டவர் மற்றும் ரோமத் திருச்சபையின் அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்த வால்டோ..

அவரது தீவிர போதனை காரணமாக துரோகி என்று முத்திரை குத்தப்பட்டு சபையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்..

போப்பாண்டவரின் தண்டனையைப் வால்டோ பெரிதாக பொருட்படுத்திக் கொள்ளாவிட்டாலும் அவரது ஆதரவாளர்கள் கடுமையாய்த் தாக்கப்பட்டதால் அவர்கள் ஊரைவிட்டு வெளியேற வேண்டிய நிலையானது..

வெளியேறிவர்கள் பொகேமியா..லொம்பார்டி போன்ற பிரான்ஸின் பல பகுதிகளில் குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது..

சிதறப்பட்ட அவர்கள் தேவனுடைய வார்த்தையில் எவ்வளவு தேறியிருந்தார்கள் என்றால்..அவர்களில் படிப்பறிவு இல்லாத கிராமவாசிகள் கூட யோபுவின் புத்தகம் முழுவதையும் மனப்பாடமாய்ச் சொல்வார்களாம்..

மற்றவர்கள் முழு புதிய ஏற்பாட்டையும் பாராமல் சொல்லும் அளவுக்கு தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு இனிமையாய் இருந்தது..

கிபி 1211..
"வால்டென்செஸ்" சபையின் 80 பேர் பிடிக்கப்பட்டு போப்பாண்டவரின் நீதிமன்றத்தில் மரணதண்டனை பெற்று ஸ்ட்ராஸ்போர்க் என்ற இடத்தில் எரித்துக் கொல்லப்படுகிறார்கள்..

அவர்களை மிக மோசமாக சித்ரவதைப்படுத்திய காவலன் ஒருவன் அவர்களைப் பற்றி சாட்சி கொடுக்கிறான்..

"நிச்சயமாகவே பரிசுத்தத்திலும் நீதியிலும் உண்மையிலும் இந்த "வால்டென்சஸ்" போன்றவர்கள் யாருமில்லை.."

பீட்டர் வால்டோ கடைசிவரை கிறிஸ்துவுக்கு உண்மையாய் ஊழியம் செய்து 1218ல் மரிக்கிறார்..

அவரைப்பின்பற்றியவர்கள் அடுத்த 400 ஆண்டுகள் போப்பாண்டவர்களால் பட்ட உபத்திரவங்களுக்கு அளவே இல்லை..

முக்கியமாக 1545ல் நடந்த பயங்கர உபத்திரவம் சொற்களுக்கு அப்பாற்பட்டது..

கடைசியாக..1559ல் ட்யூக் சவாய் காலத்தில் பெரிய விடுதலையை தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார் -

ஆனால் அதுவரை அவர்கள் பொறுமையாய் சகித்து வந்தது..
தலைமுறை தலைமுறையாகக் கட்டுகளும் சித்ரவதைகளும் கொடுமைகளுமே..

CHAPTER-37

காளையின் வாலில் கட்டப்பட்ட ஸேச்சுர்னியஸ்

CHAPTER-37

" ஸேச்சுர்னியஸ் "

ஸேச்சுர்னியஸ் -பரி.பேதுருவுடன் ரோம் நகருக்குச் சென்றவர்..

அந்த நாட்களில் பேதுரு அநேகரை சுவிசேஷகர்களாக மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்புகிறார்..

ஸேச்சுர்னியஸ் பிரான்ஸ் நாட்டின் தென்பகுதியான தௌலோஸ் என்ற இடத்துக்கு தன் உதவியாளர்கள் இருவருடன் அனுப்பப் படுகின்றார்..

விக்கிரகங்கள் நிறைந்த அந்தப் பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கித்தபோது அங்கிருந்த ஊமையான விக்கிரகங்கள் செயலிழந்து போகின்றன..

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அநேக அற்புதங்கள் நடக்கின்றன..

அவற்றுள் மிக முக்கியமாக..குஷ்டரோகம் முற்றிப் போன ஒரு வயதான பெண் முற்றிலும் குணமாக்கப்படுகிறாள்..

அநேகர் விடுதலையாக்கப் படுகின்றனர்..சிலர் தாமாக முன்வந்து ஞானஸ்நானம் பெறுகின்றனர்..

பட்டணம் கிறிஸ்துவின் பக்கம் திரும்புவதைக் கண்ட ஒரு கூட்டம் இவர்களுக்கு விரோதமாய் எழும்ப..

ஒரு திருவிழா நாளில் நகரின் நடுவே மலையின் மேல்.. விக்கிரகக் கோயில் வளாகத்தில் மக்கள் கூடுகின்றர்..

கோயில் நடுவே பெரிய பலிபீடம்..ஒரு காளை பலியிடப்பட காத்திருக்கிறது..

இதற்குள் யாரோ ஸேச்சுர்னியஸைக் கண்டுபிடித்துவிட.. மலைக்கு மேலே இழுத்து வரப்படுகிறார் ஸேச்சுர்னியஸ்..

பலியிடக் கட்டப்பட்டிருந்த அதே காளையின் வாலில்
அவரது இரு கால்களும் கட்டப்பட்டு.. மலை உச்சியிலிருந்து
காளை அடித்து விரட்டப்படுகிறது..

மலை உச்சியிலிருந்து கோயில் படிக்கட்டுகள் வழியே
காட்டுத்தனமாய் ஓடிய காளையின் வாலோடு
கட்டப்பட்டிருந்த ஸேச்சுர்னியஸின் உடல் கீழே
வருவதற்குள் சின்னாபின்னமாகிறது..

சரித்திரம் சொல்கிறது..
அவரது தலை பிளந்து மூளை சிதறியது என்று..

இறுதியாக..
இறந்த அவரது உடலை எடுத்துச் செல்ல யாருக்கும்
துணிவில்லாமல் போன நிலையில்..

இரண்டு விசுவாசி பெண்கள் தைரியமாய் முன்வந்து
அவரது சரீரத்தின் எஞ்சிய பாகங்களை ஒரு குழியில்
புதைக்கின்றனர்..

ஸேச்சுர்னியஸ்-தௌலோஸ் நகரின் பிஷப்..

CHAPTER-38



ஜான் விக்ளிஃப்

CHAPTER-38

ஜாண் விக்ளிஃப்

1377..
ஜாண் விக்ளிஃப் பிஷப் சங்கத்தின் முன் ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பப்படுகிறது..

பிப்ரவரி 19..1377..
லாங்ஸ்டர் மேயர்..லார்ட் ஹென்றி பெர்சி மற்றும் இங்கிலாந்தின் லார்ட் மார்ஷல் ஆகியோரோடு ஆஜராகிறார் விக்ளிஃப்..

பரி.பவுல் வளாகத்தில் பெரிய கூட்டம் கூடியது..

மரியாளின் தேவாலயத்தில் நடந்து கொண்டிருந்த வழக்கு விராரணையின் நடுவே புயலாய் நுழைகிறான் ஒரு மனிதன்.. பெயர்-லெவிஸ்..

அவன் யாரென்று தெரியாவிட்டாலும் அவனது மிரட்டல்.. பிஷப்புகளை அதிர்ச்சியடையச் செய்கிறது..

வழக்கு விசாரணையின்றி முடிந்து இம்முறை தப்பித்து விடுகிறார் விக்ளிஃப்..

ஆக்ஸ்போர்டு மற்றும் கத்தோலிக்க சபையின் எந்த மிரட்டலுக்கும் அடிபணியாத விக்ளிஃப்..
தன் கருத்துக்களைப் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கிறார்..

தனக்குக் கிடைத்த குறுகிய காலத்தில் சூறாவளியாய் சுற்றுப்பயணம் செய்து வேதத்தின் வெளிச்சத்துக்கு ஜனங்களை திருப்புகிறார்..

சில காலம் மறைவாய் இருந்தவர் மீண்டும் லுத்தர்வொர்த் என்ற இடத்திலுள்ள தன் சபைக்கு வருகிறார்..
1384ல்..

இதற்குள் அவருக்கு வயது ஐம்பத்திஆறு..

அது டிசம்பர் 31..1384 ம் ஆண்டு..தன் அயர்ந்த நித்திரையிலேயே கர்த்தரோடு அயராமல் இருக்கச் சென்று விடுகிறார் விக்ளிஃப்..

"விக்ளிஃப் தன் வாலிபத்தில் கர்த்தருக்காக எவ்வளவு வைராக்கியம் காண்பித்தாரோ அதே வைராக்கியத்துடன் தன் வயதான காலத்திலும் பற்றி எரிந்தார் "என்கிறது அவரைக் குறித்த செய்திக் குறிப்பு..

விக்ளிஃப் மரித்து 31 ஆண்டுகள் பின்..

கான்ஸ்டன்ஸ் கவுன்சில் கூடுகிறது..
அங்கு அவரது உபதேசங்களுக்கு எதிராக முடிவுகள் எடுக்கப்பட்டதோடு..

அவரைப்பற்றிய ஞாபகத்தையே துடைத்துப் போடும் நோக்கத்தோடு..
அவரது கல்லறை தோண்டப்பட்டு..

எஞ்சியிருந்த எலும்புத் துண்டுகளும் எரிக்கப்பட்டு ரைன் நதியில் சாம்பல் வீசப்படுகிறது..

இயேசுவைக் கொன்ற பரிசேயர்..அவர் கல்லறையில் வைக்கப்பட்டதோடு அவரது சகாப்தம் முடிந்தது என்று நினைத்தது போல..

விக்ளிஃப் கதை சாம்பலாய்க் கரைந்தது என்று நினைத்தனர் கத்தோலிக்கர்..
ஆனால் நடந்து வேறு..

தேவனுடைய வார்த்தை
வெட்ட வெட்ட எழுந்து நிற்கும் ஜீவனுள்ள வித்து அல்லவா?

விக்ளிஃப் என்ற விதையிலிருந்து முளைத்து எழும்பியது ஜாண் ஹஸ் என்ற பலத்த விருட்சம்..

CHAPTER-39

ஜான் ஹஸ்

CHAPTER-39

" ஜாண் ஹஸ் "

பொகேமியா நாட்டின் ஹஸ்ஸனிட்ஸ் நகரம்..
1372 ம் ஆண்டு..

ஒரு குழந்தை பிறக்கிறது..
பெயர்-ஜாண் ஹஸ்..

படிப்பு :
பராகுவே பல்கலைக் கழகத்தில் இறையியல் பட்டம்..

1402:
பராகுவேயின் பெத்லகேம் ஆலயத்தில் கத்தோலிக்க குருப்பணி..

1409:
பல்கலைக் கழகத்தின் ரெக்டர் ஆகிறார்
ஜாண் ஹஸ்..

அவர் படித்த எல்லாவற்றிலும் அவருக்குள் பெரிய தாக்கத்தை உண்டாக்கியது..
ஜாண் விக்ளிஃப்பின் எழுத்துக்கள்..

வேத வசனத்துக்கு விரோதமான கத்தோலிக்க சபையின் எல்லா சட்ட திட்டங்களுக்கும் ஊழல்களுக்கும் அசுத்தங்களுக்கும் எதிராய் எழும்பினார் ஹஸ்..

"ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவனது தாய் மொழியிலேயே வேதம் வேண்டும்"என்பது அவரது முக்கிய போராட்டம்..

அந்த நாட்களில் குருக்கள் மட்டுமே வாசிக்க அனுமதிக்கப்பட்டிருந்த வேதம் லத்தீன் மொழியில் இருந்தது..

லத்தீன் தெரியாத சாதாரண விசுவாசி.. பார்க்கவும் தொடவும் வாசிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது..

கர்த்தருடைய வார்த்தையும் விக்ளிஃபின் எழுத்துக்களும்
எலும்புகளில் அடைபட்ட அக்கினியாய் பற்றி எரிய..

சபைகளிலும் பல்கலைக்கழகத்திலும் ரோம சபைக்கு
விரோதமாய் தைரியமாய் முழங்க ஆரம்பித்தார்
ஜாண் ஹஸ்..

விஷயம் ரோமாபுரியின் போப்பாண்டவர் வரை
செல்ல..போப்பால் அனுப்பப்பட்ட கர்தினால்
கொலோன்னா என்பவர்

ஜாண் ஹஸ்ஸை போப்பாண்டவர் முன்
ஆஜராகும்படி கட்டளையிடுகிறார்..

இதற்குள் ஜாண் ஹஸ்ஸின் வார்த்தைகளை
ஆதரிக்கும் ஆதரவாளர்களின் எண்ணிக்கை
கூடிக் கொண்டே போகிறது..

ஜாண் ஹஸ் சார்பாக 3 பேர் கர்தினால்
கொலோன்னாவை சந்திக்கிறார்கள்..

தானே நேரில் வராத ஹஸ் "போப்புக்கும் சபைக்கும்
எதிரி"என்று அடையாளம் இடப்பட்டு சபையிலிருந்தும்
யுனிவர்சிட்டியிலிருந்தும் நீக்கப்படுகிறார்..

மீண்டும் போப்பாண்டவருக்கு முன் தன் தரப்பு
நியாயங்களை எடுத்து வைக்கிறார் ஹஸ்..

போப் இன்னும் 4 கர்தினால்களை அனுப்புகிறார்..

அந்த நால்வரும் வழக்கை விசாரிப்பதற்குப் பதிலாக
ஹஸ்ஸைச் சேர்ந்த யாவரையும் சபை நீக்கம் செய்கின்றனர்..

இதற்குள் கத்தோலிக்க சபை நவம்பர் 1414 ல் கான்ஸ்டன்ஸ்
கான்பரன்ஸ் ஒன்றை ஜெர்மனியில் கூட்டுகிறது..

புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கவும்.. விக்ளிஃப் மற்றும்
ஜாண் ஹஸ் சம்பந்தப்பட்ட காரியங்களில் முக்கிய
முடிவுகள் எடுக்கவும்..

ஜெர்மனி மன்னர்
"சிகிஸ்முண்ட்" ஹஸ்ஸுக்கு அழைப்பு விடுக்கிறார்..
“உம் உயிருக்கு நான் பாதுகாப்பு..பயப்படாமல் வாரும்.."

ஜனவரி 1415..
ஜாண் ஹஸ் கான்பரன்ஸ் ஹாலில் நுழைந்தவுடன் கைது செய்யப்பட்டு மன்னரின் அரண்மனையில் சுரங்க அறை ஒன்றில் அடைக்கப்படுகிறார்..

ஜூன் 7..1415..

ஜெனரல் கவுன்சில் முன் நிறுத்தப்படுகிறார்
ஜாண் ஹஸ்..
40 குற்றச்சாட்டுக்கள் அவருக்கு விரோதமாய் வைக்கப்படுகின்றன..

அவ்வளவும் அவர் எழுதிய புத்தகங்களிலிருந்து திரித்து எடுக்கப்பட்டவை..

7 பிஷப்புகள் அவருக்கு முன்வந்து.."ஹஸ் குருவானவரின் அங்கியை அணிந்து கொள்" என்கின்றனர்..

அதன்பின் ஒருவர் பின் ஒருவராக கூட்டத்துக்கு முன் அவரது அங்கியை உரிந்து அவமானப்படுத்துகின்றனர்

அதன் பின் அவரது தலை சிரைக்கப்பட்டு
ஒரு பேப்பர் தொப்பி அணிவிக்கப்படுகின்றது..
அதில் எழுதப்பட்டது..
"நான் ஒரு விசுவாச துரோகி.."

ஹஸ் சொன்னார்..
"எனக்காக என் இயேசு முள்கிரீடத்தை அணிந்து கொண்ட போது..நான் இந்த வெட்கத்தின் பேப்பர் தொப்பியை அணிவதில் என்ன வருத்தம்?"

அவர் எழுதிய புத்தகங்கள் எரிக்கப்பட்டு அந்த நெருப்பின் மேல் நடக்க வைக்கப்படுகிறார் ஹஸ்..

அவருக்கு மரண நாள் குறிக்கப்படுகிறது..
ஜூலை 6..1415..

அவரது ஆடைகள் உரியப்படுகின்றன..

சங்கிலிகளால் கட்டப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டவரின் கன்னம் வரை கட்டைகள் அடுக்கப்படுகின்றன..

கால்களில் மூட்டப்பட்ட நெருப்பு எரிய எரிய..ஹஸ் உரத்த சத்தமாய்ப் பாட ஆரம்பிக்கிறார்..

மட்டுமல்ல..தீ ஜூவாலைகள் மேலே எழும்ப எழும்ப.. அவரிடத்திலிருந்து "இயேசுவே..ஜீவனுள்ள தேவனின் குமாரனே எனக்கு இரங்கும்" என்ற ஜெபம் எழும்பிக் கொண்டே இருக்கிறது..

கட்டைகள் எரிந்து சாம்பலானாலும் அவரது சரீரத்தின் மேல் பகுதி சங்கிலிகளில் தொங்கிக் கொண்டிருக்க..

மறுபடி நெருப்பு மூட்டி உடலை எரித்தவர்கள்..தலையை மட்டும் தனியே எடுத்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி தீயில் போடுகின்றனர்..

கடைசியாக மீந்த சாம்பலையும் மறக்காமல் ரைன் நதியில் கலக்கி விட்டுச் செல்கின்றனர் அந்தக் கத்தோலிக்கர்..

CHAPTER-40

எரித்துக் கொல்லப்பட்ட சவனரோலா

CHAPTER-40

சவோனரோலா

21 செப் 1452..
இத்தாலியின் பெராரா நகரில் நிக்கோலா
சவோனரோலாவுக்கும் எலினாவுக்கும் பிறந்தவர்
ஜிரோலமா சவோனரோலா.

மருத்துவராகப் படிக்க ஆரம்பித்தவர் படிப்பில் ஆர்வமின்றி
ஆன்மீக காரியங்களில் நாட்டம் உள்ளவராய்
குருவானவராகி குருமடத்தில் சேர்ந்தார்..

1482 ம் ஆண்டு ப்ளாரன்ஸ் என்ற இடத்தின்
சென் மார்க்கோவுக்கு பேராசிரியராக
அனுப்பப்பட்டவர்..தன் பேச்சாற்றல் மற்றும் அறிவினால்
அநேகரைக் கவர்ந்தார்..

ஆனால் அவருக்குக் கிடைத்த சில வெளிப்பாடுகள்
அவரைத் தீர்க்கதரிசியாக மாற்றியது..

1485,86..லெந்து நாட்களில் தீப்பொறியாய்ப் பிரசங்கித்தவர்..
"சபையில் பெரிய புரட்சியும் மாற்றமும் வந்தே ஆக
வேண்டும்..சபை நொறுக்கப்பட்டு எழுப்புதலடையும்"
என்று முழங்கினார்..

1487ல் போலோக்னா என்ற இடத்துக்கு மேற்படிப்புக்குச்
சென்றவர் மறுபடியும் ப்ளாரன்சுக்குத் திருப்பி
அனுப்பப்படுகிறார்..

லோரன்ஸோ டி மெடிஸி என்ற அங்குள்ள ரோமன்
கத்தோலிக்க அரசனுக்கு விரோதமாய் பகிரங்கமாய்
பிரசங்கித்தார் சவோனரோலா..

அரசாங்கம் மட்டுமல்ல இவருக்கு எதிராக ஒரு கட்சியே
ஆரம்பிக்கப்பட்டு கொடி தூக்கியது..

போப்பால் அனுப்பப்பட்டவர்களின் அழைப்பை
நிராகரித்தார் சவோனரோலா..

மட்டுமல்ல..1496 லெந்து நாட்கள் நெருங்க..
வேதத்தின் ஆமோஸ் புத்தகத்திலிருந்து எரிமலையாய்
வெடித்தார்..

அவருக்கு ஆதரவு பெருகப் பெருக..அவரோடு சமரசம்
செய்து கொள்ளும் நோக்கத்தோடு "இதோ இந்தக் கர்தினால்
பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று
போப் தூது விடுகிறார்..

சவோனரோலா சொன்னார்..
"இந்தச் சிவப்பு தொப்பி அல்ல..இரத்த சாட்சியின்
இரத்தத்தால் தோய்ந்த தொப்பியே சூடிக் கொள்வேன்"

1496, 97 ன் சபையின் பொருட்காட்சி விழாவில்
நுழைந்தவர்..அங்கு காணப்பட்ட சிலைகள்,
நிர்வாண ஓவியங்கள்,
சூதாட்ட மேஜைகள் எல்லாவற்றையும் போட்டு
கொளுத்திவிட...

கலவரம் வெடிக்கிறது..
சவோனரோலாவும் நண்பர் டோமினிக்கோவும் கொலைக்
குற்றவாளிளைப் போல் இழுத்துச் செல்லப்படுகின்றனர்..

ரோம நீதிமன்றம் தீர்ப்பளிக்க..கழுத்து நெறிக்கப்பட்டு
எரித்துக் கொல்லப்படுகிறார் சவோனரோலா..

அவரது மரணத்தின் கடைசி மணி நேரங்கள் ஆதி சபையின்
முற்பிதாக்களைப் பிரதிபலித்தது..

CHAPTER-41



தாமஸ் சேஸ்

CHAPTER-41

" தாமஸ் சேஸ் "

கிறிஸ்துவின் வார்த்தைகளுக்காகவும் சுவிசேஷத்துக்காகவும் பாடு அனுபவித்தவர்களில் ஒருவர்..அமர்ஷாமைச் சேர்ந்த தாமஸ் சேஸ்..

செய்த குற்றம்:
விக்கிரக ஆராதனைக்கும் பாரம்பரியத்துக்கும் விரோதமாய்ப் பேசியது..

ஓபோர்ன் என்ற இடத்தின் பிஷப்பின் முன் நிறுத்தப் படுகிறார் தாமஸ்..

தன் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்த தாமஸ்..ஓபோர்ன் பிஷப் ஹவுசின் இரகசிய அறைகளில் அடைக்கப்படுகிறார்..

வெறுமனே அடைக்கப்பட்ட நிலையில் அல்ல..அங்கு அவர் பட்ட வேதனைகளை விவரிக்க வார்த்தை இல்லை..

அனைத்தையும் பொறுமையாய் சகித்த தாமஸ் சேஸைக் கண்டு பொறுமை இழந்த ரோம சபையினர்..
வெளியே தெரியாமல் அவரைத் தூக்கில் தொங்க விட்டனர்..

வெளியே தெரிந்தால் பிரச்சனை வெடிக்கும் என்று அறிந்து.."தாமஸ் சேஸ் தற்கொலை"
என்று வதந்தி பரப்பப்பட்டது.

ஆனால் அந்த ஜெயிலில் அவரைக் கண்ட ஒரு பெண் சொல்கிறாள்..
"அந்த மனிதன் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொள்ள வாய்ப்பே இல்லை..அவர் வைக்கப்பட்டிருந்த இடம் அவரால் உட்காரவோ நிற்கவோ கூட முடியாத அளவு சிறியது.."

யாரும் தாமஸ் சேஸின் உடலை பரிசோதிக்க இடம் கொடாமல் எரித்து விடுகிறது பிஷப் ஹவுஸ்..

CHAPTER-42

வில்லியம் டிண்டேல்

CHAPTER-42

வில்லியம் டிண்டேல்

போப்பாண்டவர் அரசாங்கத்தின் அஸ்திபாரத்தையே அசைத்து வேரோடு பிடுங்கியெறிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதர் டிண்டேல்..

அவர் தன் கரங்களில் எடுத்துக்கொண்ட வேலையைக் கண்ட இவ்வுலகத்தின் அந்தகார லோகாதிபதி அவரைக் கொல்ல செய்த சதிகளும் திட்டங்களும் கணக்கில்லாதவை..

1494ல் வேல்ஸில் பிறந்த டிண்டேல் படித்தது ஆக்ஸ்போர்டிலும் கேம்பிரிட்ஜிலும்..

படித்து முடித்ததும் வேதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார் டிண்டேல்..

மீண்டும் தன் மேல் படிப்பை கேம்பிரிட்ஜில் முடித்தவர்..லார்ட் வெல்ச் என்ற மதிப்புக்குரிய மனிதரின் பிள்ளைகளுக்கு ஆசிரியரானார்..

லார்ட் வெல்ச் வீட்டில் அந்த நகரத்தின் படித்த பெரிய மனிதர்கள் கூடி மார்ட்டின் லூத்தர், எரஸ்முஸ் மற்றும் வேதத்தின் நடபடிகளை விவாதிப்பதும் ஆராய்வதும் உண்டு..

அவ்வப்போது அந்த உரையாடல்களில் கலந்து கொள்ளும் வில்லியம் டிண்டேல் தேவனுடைய வார்த்தையை எல்லாவற்றுக்கும் ஆதாரமாக வைத்து விவாதிப்பார்..

வெகு சீக்கிரத்தில் டிண்டேலின் பெயர் கத்தோலிக்க குருமடத்தில் அடிக்கடி அடிபட.. அவர் பிஷப்பின் சான்ஸலர் முன் வரவழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்..

ஆனாலும் தன் வேலையை நிறுத்தாத டிண்டேல் 1526ல் தன் புதிய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பை ஆங்கிலத்தில் வெளியிட்டு பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பையும் ஆரம்பித்தார்..

சிறிது நாட்களுக்குப்பின் ஜெர்மனிக்குச் சென்று மார்ட்டின் லூத்தரைச் சந்தித்தவர் நெதர்லாந்தின் அன்ட்வர்ப் என்ற இடத்தில் தங்கி தன் வேலையைத் தொடர்ந்தார்..

சீக்கிரத்தில் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பின் ஆரம்ப வேலைகளை முடித்தவர்..
மறைமுகமாய் வேதாகமங்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வந்தார்..

இதுவரை வேதம் அறியா இருளில் இருந்த இங்கிலாந்தில் சுவிசேஷத்தின் வெளிச்சம் கொண்டுவந்த மாற்றம் விவரிக்க முடியாத ஒன்று..

டிண்டேலின் புத்தகங்கள்..குறிப்பாக ஆங்கில புதிய ஏற்பாடு இங்கிலாந்து முழுவதும் பெரிய புரட்சியையே கொண்டுவந்தது..

அதே நேரம் கத்தோலிக்க மடம் கலங்கியது..

டிண்டேலின் புத்தகங்களையும் புதிய ஏற்பாட்டையும் தடை செய்ய என்னென்ன வழிகள் உண்டோ அத்தனையும் செய்தனர்..

டான்ஸ்டல் என்ற லண்டனின் பிஷப் தானே அவ்வளவு புதிய ஏற்பாட்டு பிரதிகளையும் விலை கொடுத்து வாங்கி மக்களின் கைகளில் கிடைக்க விடாமல் எரித்து விட்டதாக வரலாறு சொல்கிறது..

இங்கிலாந்து கொந்தளித்தது..

இதற்குள் உபாகமம் வரை மொழிபெயர்த்து முடித்திருந்த டிண்டேல்.. அதை ஜெர்மனியின் ஹம்பர்க் என்ற இடத்தில் பிரிண்ட் செய்ய எடுத்துச் செல்லும் வழியில் கடலில் புயல் வந்து கப்பல் உடைந்து அவர் எழுதிய அனைத்தும் மூழ்கிப் போக..

அவரது நேரம், பட்ட பிரயாசங்கள், பணம்,
எழுத்து நகல்கள் அனைத்தும் விரயமாய்ப் போனது..

திரும்பவும் மொழிபெயர்ப்பைத் தொடங்கிய டிண்டேல் எட்டு மாதங்களுக்குள் ஆதியாகமம் முதல் உபாகமம் வரையிலான புத்தகங்களை முடித்தார்..

இங்கிலாந்தில் அவரது புத்தகங்களும் வேதாகமமும் தடை செய்யப்பட்டிருக்க..

நெதர்லாந்தின் அன்ட்வர்ப் என்ற இடத்தில் மிகத் தந்திரமான முறையில் அந்த நாட்டின் மன்னனால் கைது செய்யப்பட்டார் டிண்டேல்..

அவரது கையெழுத்துப் பிரதிகள் புத்தகங்கள் யாவும் கைப்பற்றப்பட்டு ஆக்ஸ்பர்க் என்ற இடத்தில் ஒன்றரை ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்..

அக்டோபர் 6, 1536..
நெதர்லாந்தின் வில்வோர்டி நகரம்..

புதிய ஏற்பாட்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஒரே காரணத்துக்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட வில்லியம் டிண்டேல் என்ற அந்த மனிதர் கொலைக்களத்துக்கு இழுத்து வரப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு எரித்துக் கொல்லப்படுகிறார்..

அவரது கடைசி ஜெபம்..
"தேவனே! இங்கிலாந்து மன்னரின் கண்களைத் திறப்பீராக!"

சரித்திரம் சொல்கிறது..
அவரது சாட்சியும் வாழ்க்கையும் எவ்வளவு தூரம் மற்றவரைத் தொட்டது என்றால்..

அவர் சிறையிலிருந்த ஒன்றரை வருடங்களில் அங்கிருந்த ஜெயிலரும் அவரது மகளும் அவரது வீட்டாரில் அநேகரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்..

CHAPTER-43

ஜோன் கிளர்க்

CHAPTER-43

" ஜோவன் க்ளர்க் "

மன்னர் ஏழாம் ஹென்றியின் நாட்கள்..
1506ம் ஆண்டு..

இங்கிலாந்தின் லிங்கன் மாவட்டம்..

தேவபக்தியுள்ள ஒரு பெண் ஜோவன் க்ளர்க்..தன் சொந்தத் தகப்பனார் வில்லியம் டில்ஸ்வொர்த்தைத் தீ வைத்துக் கொளுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தப் படுகிறாள்..

அதே நேரம் அவளது கணவன் ஜாண் க்ளர்க் இன்னும் 60 பேருடன் தன் பாவப்பரிகாரமாகக் கட்டைகளை சுமந்து வருகிறார்..தன் மாமனாரை எரிக்க..

அந்த நாட்களில் கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும் மன்னிப்பும் மறக்கப்பட்டு..
பாவப் பரிகாரத்துக்காக ரோம சபையின் தண்டனைகளும் வேதத்தில் சொல்லப்படாத பரிகாரங்களும் செய்ய ஜனங்கள் கட்டாயப் படுத்தப்பட்டார்கள்..

பாவப் பரிகாரமாகக் கட்டைகள் சுமந்த அந்த 60 பேரின் கன்னங்களிலும் நெருப்புத் தழும்புகள் போடப்பட்டன..

தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்தத் தழும்புகளைச் ◌ூமந்து திரிவதே அவர்களது தண்டனை..

அந்த 60 பேரில் ஒருவர் ராபர்ட் பார்லட்..
அவர் செய்த தவறு என்னவென்று நமக்குத் தெரியாது..

ஆனால் ரோமன் கத்தோலிக்க சபையால் அவரது சொத்துக்கள் மற்றும் வீடு வாசல் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு 7 ஆண்டுகள் குரு மடத்தில் காவலில் வைக்கப்பட்டார் பார்லட்..

அதே சமயத்தில் ஃபாதர் ராபர்ட்ஸ் என்பவரும் பக்கிங்காம் என்ற இடத்தில் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட போது அவரை எரிக்க 20 பேர் பாவப் பரிகாரக் கட்டைகளைச் சுமந்து வருகிறார்கள்..

இதே போல் தாமஸ் பெர்னார்ட்,ஜேம்ஸ் மோர்டன் இருவரும் கொல்லப்பட்ட போதும் 30 பேர்களின் கன்னங்களில் தீக்காயத் தழும்புகள் இடப்பட்டன..

இவர்கள் செய்த குற்றம் என்ன?
வேதத்தைப் போதித்ததும், வேதத்தை வாசிக்க மற்றவர்களை ஊக்குவித்ததும்,
விக்கிரக ஆராதனைக்கு விரோதமாய்ப் பேசியதுமே!

30 பேரும் வரிசையாகக் கழுத்து வரை ஒவ்வொரு கம்பத்தில் கட்டப்படுகிறார்கள்..

பழுக்கக் காய்ச்சப்பட்ட ஒரு இரும்புக் கம்பி அவர்கள் கன்னங்களில் செலுத்தப்பட்டு ஆழமான காயமும் மாறாத தழும்புகளும் இடப்படுகின்றன..

CHAPTER-44

ரிச்சர்ட் பைஃபீல்ட்

CHAPTER-44

ரிச்சர்ட் பைபீல்ட்

போப்பாண்டவர்கள் தங்கள் முழு ஆதிக்கத்துடன் ஆளுகை செய்து கொண்டிருந்த காலம் அது..

அவர்களது மூடநம்பிக்கைகளையும் உபதேசங்களையும் எதிர்ப்பவர்கள் யாரானாலும் சரி..

அது படித்தவனோ பாமரனோ..ஆணோ பெண்ணோ குருவானவரோ பேராசிரியரோ..அவர்கள் தண்டனைக்குத் தப்ப வழியில்லாத ஒரு காலகட்டம்..

இப்படி சூழ்நிலையில் வில்லியம் டிண்டேலின் ஆங்கில புதிய ஏற்பாட்டைப் படித்து உண்மை சத்தியத்தை அறிந்து இரட்சிக்கப்படுகிறார் ரிச்சர்ட் பைபீல்ட் என்ற கத்தோலிக்க குருவானவர்..
இங்கிலாந்திலுள்ள பர்ன்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்தவர்..

படித்துத் தெளிந்த ரிச்சர்ட்..மார்ட்டின் லூத்தரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை என்று கண்டுகொள்கிறார்..

கத்தோலிக்க மடத்தினரால் கண்டுபிடிக்கப்பட்ட பைபீல்ட்..விசுவாச துரோகி என்று முத்திரை குத்தப்பட்டு வார்த்தைகளால் விவரிக்க முடியாதபடி உபத்திரவப்படுத்தப்பட்டு சிறையின் டஞ்சன் அறைகளில் அடைக்கப்படுகிறார்..

"உன் எண்ணத்தை மாற்றிக் கொள்" என்று திரும்பத் திரும்ப அவருக்குச் சொல்லப்பட்டது..

மறுத்துவிட்ட அவரது நிலை தாங்க முடியாதது..

ஜெயிலின் அறைகளில் தேங்கி நின்ற மனிதக் கழிவுகளின் வாடையும் சாக்கடையின் நாற்றமும் விஷவாயுவுமே ஒரு மனிதனை சாகடிக்கப் போதுமானதாய் இருந்தது..

எலிகளும் பூச்சி புழுக்களுமே அவரது துணை என்று சொல்லலாம்..

இந்நிலையில் பல நாட்கள் ஆகாரமின்றி கைகள் பின்புறம் கட்டப்பட்டு தோள்ப்பட்டையிலிருந்து கைகள் கழன்ற நிலையில்..நிற்க வைக்கப்பட்டிருந்தார் ரிச்சர்ட்..

இது போதாதென்று சில நேரங்களில் உடலில் சதை இல்லாமல் போகுமட்டும் வாரினால் அடிக்கப்பட்டார்..

இவை அனைத்துக்கும் மத்தியிலும் தன் விசுவாசத்தை மறுதலிக்க மறுத்தவரை லாம்பர்ட் அரண்மனையின் லோலார்ட் கோபுரத்துக்கு இழுத்துச் சென்று ஆர்ச் பிஷப் முன்பாக கண்மூடித்தனமாக அடித்தனர்..

கடைசியாக..இவனும் ஜாண் ஹஸ் போன்றவனே என்று தீர்ப்பு செய்யப்பட்டு ஸ்மித் பீல்ட் என்ற இடத்தில் எரித்துக் கொல்லப்படுகிறார்
ரிச்சர்ட் பைபீல்ட்..

CHAPTER-45

பேட்ரிக்

CHAPTER-45

“ பேட்ரிக் ”

" ஆடு மேய்க்கும் என் வேலையை நான் செய்து கொண்டிருக்கும் போதே..நாள் முழுவதும் ஜெபித்துக் கொண்டிருப்பதை நான் என் வழக்கமாக்கிக் கொண்டிருந்தேன்..

கர்த்தரை நேசிக்கும் நேசமும் அவருக்குப் பயப்படுகிற பயமும் நாளுக்கு நாள் என்னை அதிகம் அதிகமாய் நிரப்ப..என் விசுவாசமும் உறுதிப்பட்டுக் கொண்டே இருந்தது..என் ஆவி எனக்குள் அக்கினியாய் எரிந்து கொண்டிருந்தது..

நான் மலைகளில் இருந்தாலும் காடுகளிலும் குகைகளிலும் தங்கினாலும் பகலில் நூறு தடவைக்கு மேலாகவும் இரவிலும் அதே போலும் ஜெபித்துக் கொண்டிருந்தேன்..

உறைபனியோ மழையோ குளிரோ..அதிகாலையில் எழுந்து ஜெபிப்பது என் பழக்கம்..

அசதியாய் அல்ல..ஆவியில் எப்போதும் அனலாய் இருக்க தேவன் எனக்கு கிருபை செய்தார்.."

-பேட்ரிக்

(பேட்ரிக் ஒரு மிஷினரி சுவிசேஷகராக அயர்லாந்தில் ஏறக்குறைய 200 சபைகளை ஸ்தாபித்து ஒரு லட்சத்துக்கும் மேலான மக்களை கிறிஸ்துவுக்குள் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்தார் என்கிறது வரலாறு..)

CHAPTER-46



தன் மாணவர்களாலேயே குத்திக்கொல்லப்பட்ட கேசியன்

CHAPTER-46

" கேசியன் "

ரோம் நகருக்கு அருகிலுள்ள ஓர் ஊரின் பள்ளி ஆசிரியர் “கேசின்."

விக்கிரகங்களை வணங்க மறுத்தவர் கைது செய்யப்படுகிறார்..

அவரை விசாரித்த நீதிபதி ஒரு குரூரமான தீர்ப்பு எழுதுகிறார்..

"இந்தப் பள்ளி ஆசிரியரைப் பிடிக்காத மாணவர்கள் கையில் இவரைக் கையளிக்கிறேன்.."

கட்டப்பட்ட கேசியன் அவரது சொந்த மாணவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட..

மெழுகு எழுது பலகையில் எழுதப் பயன்படுத்தப்படும் ஒருவித கூர்மையான இரும்பு எழுது கோலால் மாணவர்கள் கைகளாலே குத்திக் கொல்லப்படுகிறார் "கேசியன்"..

CHAPTER-47

சிறையில் வில்லியம் தோர்ப்பே

CHAPTER-47

வில்லியம் தோர்ப்பே

வில்லியம் தோர்ப்பே ஒரு கிறிஸ்துவின் போர்வீரர்..

1407 ம் ஆண்டு..
கேன்ட்டர்பரி ஆர்ச்பிஷப் முன் ஆஜர் படுத்தப்படுகிறார்..

செய்த குற்றம்:
20 வருடங்களாக இங்கிலாந்தின் பல பகுதிகளில் பயணம் செய்து ரோமன் கத்தோலிக்க மூடநம்பிக்கைகளுக்கு எதிராக சத்தியத்தைப் பிரசிங்கித்தது..

ஆர்ச்பிஷப் சொல்கிறார்.."இந்த உன் நம்பிக்கையை நீ மட்டும் கைவிடுவது அல்ல..இதைப் போன்ற நம்பிக்கை உடையவர்களை நீ மீண்டும் ரோம மதத்துக்குத் திருப்ப வேண்டும்"

தோர்ப்பே சொன்னார்.."நீர் சொல்கிறபடி செய்வதானால் இங்கிலாந்தில் உள்ள ஒவ்வொரு பிஷப்பையும் உளவு செய்யும் உளவாளி ஆவேன் நான்..

கிறிஸ்துவுக்கும் அவரது வார்த்தைகளுக்கும் மட்டுமே கீழ்ப்படிவேனே அல்லாமல் வேறு எந்த மனுஷனுக்கும் அல்ல.."

ஜெயிலில் அவருக்கு என்ன நடந்ததோ தெரியாது..வெளியே தெரியாமல் எரிக்கப்பட்டோ மறைமுகமாகக் கொல்லப்பட்டோ இருக்கலாம் என்கிறது வரலாறு..

இங்கிலாந்தின் கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்பட்ட காலம் அது..

இங்கிலாந்து அரசர்களின் முழு ஆதரவுடன் ரோமன் கத்தோலிக்க சபை தன் சொந்த ஜனங்களையே வேட்டையாடிக் கொண்டிருந்தது..

CHAPTER-48

"ஒரு தேவ பக்தியுள்ள பெண்"

CHAPTER-48

" ஒரு தேவ பக்தியுள்ள பெண் "

கிறிஸ்துவுக்காகவும் சத்தியத்துக்காகவும் பாடு அனுபவித்து மரித்த பலரில்..மிக மேன்மையாகக் கருதப்பட்டு அவருக்காக ஜீவனைக் கொடுத்த தேவ பக்தியான ஒரு பெண் உண்டு..

ஸாட்பரி என்ற இடத்தைச் சேர்ந்தவர்..

முக்கியமாக..விட்டிங்ட்டன் என்ற நகர சான்ஸ்லருக்கு முன்னால் கர்த்தருக்காக அந்தப் பெண் காட்டின வைராக்கியம் மகிமையானது..

அவள் ஒரு தேச துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு ஊருக்கு வெளியே தண்டனைக்கு கொண்டு செல்லப்படுகிறாள்..

பெரிய கூட்டம் கூடுகிறது..

கடைசியாகக் கேட்கப்படுகிறது..
"உன் விசுவாசத்தை விட்டுவிட்டு ரோம சபையின் கட்டளைகளை ஏற்றுக் கொள்கிறாயா?"

அவளோ..தன் சாட்சியில் உறுதியாய் நிற்கிறாள்..தண்டனை நிறைவேற்றப்பட..அவள் ஜீவன் பிரிகிறது..

பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் மெதுவாய் கலைகிறது..

நகருக்கு வெளியே..
சபை, இப்படி ஒரு குற்றமில்லாத ஆட்டுக்குட்டியை பலியிட்டுக் கொண்டிருக்க..

அங்கே நகருக்கு உள்ளே..

ஆடு மாடு வெட்டுகிற ஒருவன் ஒரு காளை மாட்டை வெட்ட தயாராகிக் கொண்டிருந்தான்..

அதை வெட்டுமுன் அதின் தலையில் அடித்து சாகடித்து.. பிறகு வெட்டலாம் என்று நினைத்து அதைத் தலையில் அடித்தவன்..

எப்படியோ குறி தவறி..மாடு தன் கட்டுகளை அறுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது..

இதற்குள் தேவ பக்தியுள்ள அந்தப் பெண்ணின் மரணக்காட்சியைக் கண்டு முடித்த கூட்டம் ஊருக்குள் வந்து கொண்டிருக்க..

காட்டுத்தனமாய் ஓடி கூட்டத்துக்குள் புகுந்த காளை..கூட்டத்தில் யாரையும் சேதப்படுத்தாமல்..

ஒரே ஒருவனை மட்டும் நோக்கிப் பாய்ந்து குத்திக் கொன்று போட்டது..

அவன்..அந்தப் பெண்ணுக்கு மரண தண்டனை எழுதி நிறைவேற்றிய நகர சான்ஸ்லர் விட்டிங்ட்டன்..

கூட்டம் ஸ்தம்பித்து நின்றது..

CHAPTER-49

இரத்த மேரி காலத்து
பிஷப் க்ரான்மர்

CHAPTER-49

க்ரான்மர்

அது ஒரு பெயரளவு சீர்திருத்த சபை. ஆனால் அதிகம் சீர்திருத்தமே பார்த்திராத சபை.

எட்டாம் ஹென்றியின் ஆட்சியில் இங்கிலாந்து சபை கத்தோலிக்கத்திலிருந்து புரட்டஸ்ட்டாண்டு சபையாய் மாறியிருந்தாலும் ஆங்கிலிக்கன் சபையை ஒரு சீர்திருத்த சபை இருக்க வேண்டியபடி மன்னர் அதை முழுவதுமாய் மாற்றியமைக்கவில்லை. எட்டாம் ஹென்றியின் முதல் திருமணம் செல்லாது என்று அவரையே சாடி, இங்கிலாந்துக்குள் இன்னொரு முழுச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தவர் கேன்ட்டர் ப்யூரியின் ஆர்ச்பிஷப் தாமஸ் க்ரான்மெர். லூத்தரின் சீர்திருத்தத்தால் உண்டான மிகப்பெரிய நேர்மறைத் தாக்கம் கொண்டவரும், சபைப் பிதாக்களைப் பற்றி ஆழமாய்ப் படித்துத் தெளிந்தவரும், அமைதியான கல்வியாளருமான க்ரான்மெர், ஹென்றி மன்னரின் கவனத்துக்கு வந்தது, அவரது திருமணம் செல்லாது என்றும், அவரது விவாகரத்து குறித்தும் குரல் கொடுத்தபோது தான்.

ஹென்றி உயிரோடிருந்த காலம் வரை ஆங்கிலிக்கன் சபையில் பெரிதாக மாற்றம் ஒன்றும் செய்யக்கூடாதிருந்த க்ரான்மெர், அவரது மரணத்துக்குப் பின் அவரது ஒன்பது வயது மகனான ஆறாம் எட்வர்ட் அரசராய் வந்த பிறகு, அரசரவையில் இடம் பெற்று மாற்றங்களைச் செய்ய அவருக்கு வழிவகுத்தது.

கல்வியாளர்கள் நிக்கோலஸ் ரிட்லி மற்றும் பிரசங்கியாளரான ஹக் லாட்டிமர் போன்றவர்கள் உடனிருக்க, மிகப்பெரிய மாற்றங்கள் சபையில் நடந்தது. ஆலயங்களிலிருந்து உருவங்களும் சிலைகளும் அகற்றப்பட்டு, குருவானவர்களிடம் பாவசங்கீர்த்தனம் செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது. குருவானவர்கள் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டு, கர்த்தருடைய பந்தியில் அப்பமும் திராட்சரசமும் பரிமாறப்பட்டது. ஆக்ஸ்போர்டிலும் கேம்ப்ரிட்ஜிலும் ஐரோப்பாவின்

கெல்வினிஸ்ட் கல்வியாளர்களான மார்ட்டின் பூசர், ஜான் ஏ. லாஸ்கோ மற்றும் பீட்டர் மார்ட்டிர் போன்றவர்கள் பேராசிரியர்களாய் இருந்தனர்.

சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக ஆராதனை ஒழுங்குக்கு ஏற்றபடி உபயோகப்படுத்தும்படியாக சபைக்குப் பொதுவான ஒரு ஜெபப் புத்தகம் தேவைப்பட்டது. க்ரான்மெரின் ஆங்கிலப் புலமை அதற்குக் கை கொடுக்க, 1552ம் வருடம் மிக அருமையான பொதுவான ஜெபக் கையேடு ஒன்று ஆயத்தமானது. இதைத் தவிர 42 கட்டுரைகள் எழுதினார் க்ரான்மெர்.

ஆட்சியிலிருந்த ஆறாம் எட்வர்ட் இறந்ததும், இதற்கு முன்பிருந்த ஹென்றியின் மகள் மேரி இராணியாகி, மறுபடியும் தனது இரும்புக்கரத்தால் இங்கிலாந்தை கத்தோலிக்கத்துக்குத் திருப்ப சூளுரைத்தாள். அவள் காலத்தில் அவள் ஆடிய ஆட்டமே அவளுக்கு "இரத்த மேரி" என்ற பெயரைப் பெற்றுக்கொடுத்தது.

க்ரான்மெரின் உடனிருந்த ரிட்லி மற்றும் லாட்டிமர் ஒரு வருடத்துக்கு முன் இரத்த மேரியால் எரித்துக் கொல்லப்பட, க்ரான்மெரோ, 1556 ஆம் ஆண்டு அவரது எழுத்துக்களோடு எரித்துக் கொல்லப்பட்டார்.

பாதாளத்தின் வாசல்கள் கிறிஸ்துவின் சபையை மேற்கொள்ளுமோ? சில காலத்துக்குள்ளாகவே அரியணை ஏறின ஹென்றியின் இரண்டாவது மகளும், இரத்த மேரியின் சகோதரியுமான எலிசபெத் மீண்டும் இங்கிலாந்தை சீர்திருத்தப் பாதைக்குத் திருப்ப, க்ரான்மெரின் புத்தகங்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்தன.

CHAPTER-50

மகா உபத்திரவம்

CHAPTER-50

மகா உபத்திரவம்

முதல் மூன்று நூற்றாண்டுகளாக ரோம சாம்ராஜ்யத்தின் கொடுங்கோல் அரக்கர்களின் சகாப்தத்தை கான்ஸ்ட்டான்ட்டைன் மன்னன் முற்றுப்புள்ளி வைத்தான். அதன் பின் வந்தவைகளை அவைகளை வழிமொழிந்தவைகள்.

அவர்கள் கிறிஸ்தவர்களைக் கொல்ல உபயோகப்படுத்திய பரவலான வழிகளை எழுதுவதும் படிப்பதும் பார்ப்பதுமே நடுக்கம் உண்டாக்குவதாய் இருக்குமானால்..

உடலைச் சில்லிடப்பண்ணும் அந்தக் கொடுமைகளைக் கடந்து சென்ற நம் முற்பிதாக்களின் அன்றைய நிலையை நாம் அறிந்து கொள்வதே.இதை எழுதுவதின் நோக்கம்.

கொல்லும் கொடிய வழிகள் பத்து

1. சிலுவை :

கிமு 6 முதல் கிபி 4 வரை வழக்கத்திலிருந்த சிலுவைத் தண்டனையில் கைதி ஒரு நீளமான மரக்கட்டையில் கட்டப்பட்டோ ஆணி அடிக்கப்பட்டோ வெகு நேரம் தொங்க விடப்பட்டு மரிக்க விட்டுவிடப்படுகிறான்..

2.தோலுரிக்கப்படுதல் :

எலும்புகளைச் சில்லிடப் பண்ணும் இந்தக் கொடுமை..கைதி இன்னும் உயிரோடு இருக்கும்போதே உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் அவனது தோலை ஈவிரக்கமின்றி உரித்து..இன்னும் வேதனையைக் கூட்ட உடல் முழுவதும் உப்பு தடவப்பட்டு அப்படியே சாக விடப்படும் கொடுமையான முறை..

3.எலும்புடைக்கும் சக்கரம்:

பழங்கால கிரீஸ் நாட்டில் ஆரம்பித்த இந்தப் பழக்கம் பல நாடுகளில் பரவி 19ம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்தது..

ஒரு பெரிய சக்கரத்தோடு கட்டப்பட்ட கைதி மெதுவாக சுற்றப்படும்போது நீண்ட உருட்டு மரக்கட்டைகளை குறுக்கே செலுத்தி அவனது ஒவ்வொரு எலும்பாக உடைப்பது..

நீண்ட நேரம் எடுக்கும் இந்தச் சித்ரவதைக் கொடுமைகளை விவரிக்க வார்த்தை இல்லை..

4. உடலுறுப்புகள் நறுக்கப்படுதல் :

உடலின் மிக முக்கிய உறுப்புகள் உயிரோடு வெட்டப்படும் முறை..

முக்கிமாக வயிறு கிழிக்கப்பட்டு வயிற்றின் பகுதிகள் வெளியேற்றப்படும் ஒரு முறை இருந்து வந்தது..

5.கழுமரம் ஏற்றுதல் :

நினைத்தாலே குலை நடுங்க வைக்கும் ஒரு கொலை முறை..

மிகக் கூர்மையும் உயரமும் முழுவதும் எண்ணை வழியும் ஒரு கனமான உருட்டு மரக்கட்டை.. அதின் கூரிய உச்சியில் கைதி உட்கார வைக்கப்பட்டு..மரக்கட்டை உயர்த்தப்படும்..

கைதியின் உடல் கனம் காரணமாக அவனது ஆசனவாயில் வழியே உடலுக்குள் செல்லும் கழுமரம் வாய் வழியே அல்லது உடலின் வேறு பகுதி வழியே வெளிவரும்..

இப்படி கழுமரம் ஏற்றப்படுபவர்களில் பெண்களும் அடக்கம் என்பது தான் கற்பனை செய்ய முடியாத உண்மை..

6.யானையின் காலால் மிதித்துக் கொல்லப்படுதல் :

கிட்டத்தட்ட 4000 வருஷப் புழக்கத்தில் இருந்த ஒரு வழக்கம்..

கைது செய்யப்பட்டவரின் தலையில் கல்லோ கூர்மையான கட்டையோ கட்டப்படும்..

நன்கு பழக்குவிக்கப்பட்ட யானை தன் காலால் மெதுவாகக் கைதியின் தலையை நசுக்கும்..அவனது கடைசி மூச்சு வெளியேறும் வரை அவன் படும் வேதனை வர்ணிக்க முடியாதது..

7.உயிரோடு எரிக்கப்படுதல்
ஏதோ அப்படியே எரித்து விடும் வழக்கம் அல்ல..

முதலில் கால்களில் பற்றும் நெருப்பு..முழங்கால், தொடைகள், வயிறு,மார்பு மற்றும் தோள் வழியாகத் தலை பற்றி எரிய எரிய கொல்லும் வழக்கம்..

8.மரம் அறுக்கும் வாளால் அறுக்கப்படுதல்:
ரோம சாம்ராஜ்யத்தில் பரவலாக இருந்த வழக்கம்..

தண்டிக்கப்படும் நபர் தலை கீழாய்த் தொங்க விடப்பட்டு இரண்டு கால்கள் நடுவே அறுக்க ஆரம்பித்து உடல் நெடுக இரண்டு பேரால் அறுக்கப்படும் முறை..

எழுதவே கை நடுங்குமானால் தலை இரண்டாக அறுக்கப்படப்படும் அந்தக் கிறிஸ்தவரின் நிலையை யோசிக்க முடியுமோ?

9.குதிரை வாலில் கட்டி இழுக்கப்படுதல்:

குதிரை வாலோடு அல்லது காளையின் வாலோடு கட்டப்பட்ட கைதி கொலைக்களம் வரை தெருத்தெருவாய் இழுத்துச்செல்லப்பட்டு.. அங்கு தூக்கிலிடப்பட்டோ நான்கு துண்டுகளாக வெட்டப்பட்டோ அல்லது எரித்தோ கொல்லப்படுவான்..

10.ஸ்லோ ஸ்லைசிங் அல்லது ஆயிரம் வெட்டு :

ஸ்லைஸ் என்பது சிறு சிறு துண்டுகள் எனப்படுவது..

இதைப்போல உடலின் பகுதிகளை உயிரோடு சிறுசிறு துண்டுகளாய் அதிக நேர இடைவெளி விட்டு கதறக்கதறக் கூறுபோடும் வன்முறை..

தகப்பனே..

எழுதவும் படிக்கவுமே உடல் நடுங்கும் இந்தக் கொடூர உபத்திரவங்களின் நடுவே கடந்து சென்ற எங்கள் சகோதர சகோதரிகளை சற்று நினைத்துப் பார்க்க கிருபை தருவீராக!

இன்னும் எவ்வளவு நாட்கள்
எங்கள் தலை வலிக்கும் வயிற்று வலிக்குமே ஜெபித்துக் கொண்டிருப்போம்?

இதைப் படிக்கிற எங்கள் ஒவ்வொருவரின் கண்களைத் திறப்பீராக!

இதுவரை எங்கள் தேசத்தில் நாங்கள் கண்டது அல்ல எழுப்புதல்..
தேவனே இறங்கி வரும் ஒரு உண்மையான எழுப்புதலைக் காணக் கதறுகிறோம்..

அதற்கான விலைக்கிரயம் எதுவானாலும் செலுத்த கிருபை தாரும்!

ஆமென்.

மொழிபெயர்ப்புகள்:

ஒரு கைதியின் டைரி
[ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith]

கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[Martyrs of Catacombs]



நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[Thou art My battle Axe -
Dr. Paul Enenche]

கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:

ரேவன்ஹில்
பேஜஸ்



என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்]



உடைத்தெறி
[Breakthrough -
Rudy Lack]

எழுப்புதல்
எழுத்துக்கள்
[Assorted Revival Notes]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !

என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !

விக்கினத்தின்
மேல் விக்கினம்

சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...



நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...





ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன?

இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை...

மீண்டும் ஒரு மிஸா?

மிஷன் 2024

குருதிப் பிரளயம்

முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள்

முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள்

இதோ நாட்கள் வருகிறது !

நாட்கள் எண்ணப்படுகிறது

ரிவைவா
ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

வெளியீடுகள்

எழுப்புதலின் அடிப்படைகள்,
ஆரம்பப் பாடங்கள்,
ஆணி வேர்கள்.

ரிவைவல் 66
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 (பகுதி 2)
வேத புத்தகத்தின்
66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300
சபை சரித்திரம் கண்ட
300 எழுப்புதல்கள்

எழுப்புதலும்
மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் (பகுதி 2)
சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும்
நாட்களும் (பகுதி 1)

எழுப்புதலும் இன்றைய
நாட்களும் (பகுதி 2)

புத்தகங்கள் கிடைக்குமிடம்

அடைபட்ட அக்கினி

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

சிவந்த மண்

"சபை தன் சொந்த சரீரத்தின் அங்கங்களான ஒவ்வொரு
அவயவத்தின் பாடுகளையும் வலியையும்
உணராமல் போனால் (இரத்த சாட்சிகளை நினையாமல் போனால்) அதின் நரம்புகள்
செத்து உணர்ச்சியற்றுப் போயிற்று என்பதே உண்மை..."
என்றார் ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்களின் மனைவி சபீனா உம்பிராண்ட் அவர்கள்.

இந்தப் புத்தகத்திலுள்ள "ஆரம்ப கால இரத்த சாட்சிகளின்"
வரலாறுகள் யாவுமே ஏறக்குறைய
Rev. JOHN FOXE எழுதிய **FOXE'S BOOK OF MARTYRS**
என்ற புத்தகத்திலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டவைகளே. கிறிஸ்தவ இரத்த
சாட்சிகளின் நினைவாக 1563 ல் இந்தப் புத்தகத்தை முதல் இரத்த சாட்சியான
ஸ்தேவானிலிருந்து எழுத ஆரம்பித்தார் அவர்.
முதல் முதலாக JOHN FOXE எழுதிய பதிப்பு
அவரது காலத்தில் இரத்த மேரியினால் கொல்லப்பட்ட
இரத்த சாட்சிகளோடு முடிகிறது. "இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து"
என்று அவர் நன்கு அறிந்திருந்தபடியால் திருச்சபையானது
தனது இரத்த சாட்சிகளைக் கட்டாயம்
அறிந்திருக்கவே செய்ய வேண்டும் என்பதில் தீர்க்கமாய் இருந்தார் அவர்.

இரத்த சாட்சி மரணம் என்பது எப்போதோ முடிந்து
போன காலங்களின் ஒரு காரியமல்ல.
உலகமெங்குமுள்ள கிறிஸ்தவ சபை இன்றும் மிகப்பெரிய
உபத்திரவங்களை அனுபவித்தே வருகிறது.
முதல் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை
உபத்திரவத்தினால் மரித்த இரத்த சாட்சிகளின் மொத்த
எண்ணிக்கையைக் காட்டிலும், இருபதாம் நூற்றாண்டில் இரத்த சாட்சிகளாய்
மரித்தவர்களின் எண்ணிக்கை மட்டுமே மிக அதிகம் என்கின்றன புள்ளி விபரங்கள்.
இந்தப் புத்தகத்தின் சாட்சிகளினூடே அவர்களது அழுகுரல்களை நாம்
கேட்கும்போதே, அவர்களது விசுவாசமும், தைரியமும், அன்பும் நமது உள்ளான வாழ்வைத்
தொட்டு, நம்மை அசைத்து, நமக்கு சவாலிட்டு, நமது எல்லாவற்றையும்
கிறிஸ்துவுக்கே அர்ப்பணிக்க நம்மை உந்தி எழுப்பி,
நமது விசுவாசத்தை இன்னும் அதிகமதிகமாய்க் கட்டியெழுப்புவதாக!

அடைபட்ட அக்கினி
246 - B, Pocket - C,
Mayur Vihar, Phase - 2, Delhi - 110091
Mob : 9810646981

பாஸ்டர். S. ரொமில்ட்டன்